18 வது வருடத்தில்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

ரிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 18 | பாலம் 12 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 15, 2008

இலங்கை மீதான உலகத்தின் குற்றச்சாட்டுகள் காத்திரமாகின்றன!

பெண்கள் மற்றும் நிவாரணப் பணியாளர்கள் உட்பட பலர் காணாமல் போகும் நிலை அதிகரித்த நிலையில் இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் உரிய நடடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் போதல்கள் தொடர்பான செயற்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 22 பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக ஜுன் மாதம் 11ம் திகதி அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் தொடர்பாக தமது அதிருப்தியை இலங்கை அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக தெரிவித்திருக்கும் இவ் அமைப்பு குறிப்பாக பெண்கள் மற்றும் நிவாரணப் பணியாளர்களும் இவ்வாறு கடத்திச் செல்லப்படுவதற்கு தமது அமைப்பு கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பதிவாகியுள்ள கடத்தல் சம்பவங்களைவிட அதிகமான எண்ணிக்கையில் பொதுமக்கள் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும், அச்சம் காரணமாக கடத்தல் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறைந்தளவிலேயே கிடைக்கப் பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் முனைப்பு காட்டி வருவதாகவும், எனினும் இந்த நடவடிக்கைகள் போதுமானதல்ல என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. திட்டமிடப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கடத்தல்களை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் மேலும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும், குறித்த கடத்தல்காரர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் உயர் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை குறித்து கண்காணிப்பதற்கு தமக்கு வாய்ப்பளிக்குமாறு குறித்த குழுவினர் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதே சமயம் சிறிலங்காவில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு சிறிலங்காவிற்கு வருகை தரவுள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டு வரும் துணைப் படைக்குழுவின் தலைவர் பிள்ளையானைச் சந்திப்பதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர். பிள்ளையானைச் சந்திக்குமாறு அரசாங்கம் அவர்களைக் கேட்டுக்கொண்ட போதும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அதிகாரிகள் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தனர். எனினும் கிழக்கு மாகாணத்திற்குச் சென்று அங்குள்ள நிலமைகள் தொடர்பாக அறிவதற்கு அவர்கள் அனுமதி கோரிய போது அதற்கு அரசாங்கம் மறுப்பு தெரிவித்துள்ளது. பிள்ளையானைச் சந்திக்க ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் மறுப்பு தெரிவித்ததனாலேயே அரசாங்கம், அவர்களின் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்துள்ளது.

சுவீடன், நெதர்லாந்து, ஸ்பெய்ன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூவர் அடங்கிய பிரதிநிதிகள் எதிர்வரும் 17 மற்றும் 22 ஆம் நாட்களில் சிறிலங்காவிற்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர். இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதும், இலங்கையின் தற்போதைய நிலமைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவதுமே அவர்களின் பிரதான நோக்கம்.

சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொள்ள உள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், கிழக்கு மாகாணத்திற்கு பயணம் மேற்கொள்ளும் பொருட்டு அதற்கான அனுமதியை சிறிலங்கா வெளிவிவகார அமைச்சிடம் கோரியிருந்தனர். முன்னர் அதற்கு அனுமதி வழங்கிய வெளிவிவகார அமைச்சு, கிழக்கு மாகாணத்திற்கான அவர்களின் பயணத்தின் போது பிள்ளையானையும் இணைத்துக் கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சு கோரியிருந்தது. ஆனால் அதற்கு ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினர் மறுப்பு தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திற்கான அவர்களின் பயணத்திற்கு அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் சந்திப்பவர்களின் பட்டியலில் பிள்ளையான இல்லாத போது கிழக்கு மாகாணத்திற்கான அவர்களின் பயணத்திற்கு அவசியமில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனிடையே, சிறிலங்கா அரசாங்கமானது ஜிபிஎஸ் பிளஸ் வர்த்தக உடன்படிக்கையின் நீடிப்புக்கு தகுதி பெறும் பொருட்டு சிறிலங்கா அரசு, அனைத்துலகத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படுகின்றதா என்பது தொடர்பாகவும் இந்தப் பயணத்தின் போது ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினர் ஆராய்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க பிரிட்டிஸ் அரசு இரட்டை வேடம் போடுகின்றது என்று பிரிட்டன் மீது பாரிய குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார் இலங்கை ஜனாதிபதி. பிரிட்டிஸ் நிலத்தில் வைத்தே இந்த குற்றச்சாட்டை மகிந்த தெரிவித்துள்ளார். இது பிரிட்டிஸ் அரசுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளாதாக தெரியவருகின்றது.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

Thinking of buying a new home ? & Commercial Properties ?
"CALL US FIRST" TO GET PRE-APROVAL
Direct: 416-666-5540
நம்பிக்கை, நாணயம், நேர்மை, அனுபவம் நெறிபடுத்தப்படும்

Chandran Ponnampalam
Senior Mortgage Consulton
200 CONSUMERS RD. #301, TORONTO ON
TEL: 416-279-1159

All Epson ink catridges $7.99
All Brother ink Catridges $8.99
All Canon (non-chipped) ink $7.99
HP Laserjet Q2612A (12A) $49.99
Mention This code and save an additional $5.00 : 761605
A1 Ink Rainbow Inc.
T: 416.286.0333
F: 416.286.0334
• Compatible Toner & Ink
• Unbeatable prices
• 100% Satisfaction Guaranteed
• Expert Advice & Services
• Free Delivery
hp invent LEXMARK Canon XEROX SAMSUNG Panasonic OKI

அடமானக் என் பணி கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial

Raj
A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON M1S 3Y3

கதிர்
GTA Square
SOLD OUT !
Only 12 units left
Middlefield & finch

Don't Miss Out
24 hr. 416 856 6900
Office 416 321 6969
Call me for a change
Kathir S Kathirgamanathan P. Eng.
kathirs@rogers.com Sales Representative
HomeLife / GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, #206, Toronto
Independently owned and operated

விற்க வாங்கவும், விற்கவும்...
Real Estate Broker
Call: 416-262-4176

HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

எதிர்பார்த்தால் தான் ஏமாற்றம், ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை என்றால் எது நடந்தாலும் மகிழ்ச்சிதான். என்ன தத்துவம் என்கிறீர்களா? ஆமாம் Bank of Canada வட்டி வீதத்தை மேலும் 0.25 சதவீதமாவது குறைக்கும் என்று எல்லோருமே எதிர்பார்த்திருந்த நேரத்தில், அப்படி ஒன்றும் நடக்கவில்லை. மாறாக ஏறிவரும் விலைவாசிகள் கவலை தருவதாக Bank of Canada அறிவித்துள்ளது. இனிவரும் காலங்களில் வட்டிவீதம் சற்றே கூடுவதற்கான அறிகுறியாக இது கருதப்படுகின்றது.

எல்லா முக்கிய வங்கிகளும், வீட்டுக்கடனுக்கான நிலையான வட்டியை 0.85 சதவீதம் வரையில் கூட்டியுள்ளன. மாறும் வட்டியில் இப்போதைக்கு மாறுதல் இல்லை. வங்கிகளின் இலாபம் சிக்கலுக்கு ஆளாகி இருக்கும் இன்றைய பொழுதில் வங்கிகளின் இப்போதைய போக்கு உணர்ந்து கொள்ளக்கூடியதே. ஒருவர் என்னிடம் நிலையான வட்டியிலிருந்து மாறும் வட்டிக்கு மாறலாமா? என்று அபிப்பிராயம் கேட்டார். அவருக்கு அளித்த பதிலை, இதே போல எண்ணும் வேறு பலருக்கு உபயோகமாக இருக்கும் என்பதால், கீழே தருகின்றேன். மாறும் வட்டிக்கு மாற அவர் ஆசைப்படுவதற்குக் காரணம் வட்டிவீதம் குறைய உள்ளது என்பதே. பல வங்கிகள் மாறும் வட்டியை பொதுவில் பிரைம்ரேட்டிலிருந்து 0.75% சதவீதம் வரை குறைத்துகொடுக்கின்றன. அப்படிப்பார்க்கையில் மாறும் வட்டிவீதம் இப்போதைக்குக்கு கவர்ச்சியாகத் தெரிகின்றது. இதே கவர்ச்சி இனிவரும் ஆண்டுகளிலும் இருக்கும் என்று உறுதி கூற முடியாது. எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றத்துக்கும் இட்டுச் செல்லலாம். மேலும்

பெரி. முத்துராமன்

நிலையான வட்டியிலிருந்து மாறும் வட்டிக்கு மாறும் போது பல சமயங்களில் அபராதம் கட்ட வேண்டியிருக்கும். பொதுவில் வங்கிகள் மூன்றுமாத வட்டியை அபராதமாக எடுக்கக் கூடும். நிலையான வட்டியிலிருந்து மாறும் வட்டிக்கு மாறியதால் கிடைத்த டொலர் இலாபத்தை அபராதத் தொகையுடன் ஒப்பிட்டால் பெரும்பாலும் இலாபம் குறைவாகத்தான் இருக்கும். அதாவது பெரும்பாலும் நட்டம் தான் வரும். மேலும் திரும்ப வட்டி வீதங்கள் ஏறுமோ என்ற நிலை இப்போது வந்துள்ளது. அத்தகைய நிலையில் மீண்டும் நீங்கள் நிலையான வட்டிக்கு மாற வேண்டும் என்று விரும்பினால், பணநட்டம் வருவதற்கான வாய்ப்புக்களே அதிகம். நிலையான வட்டிவீதத்தில் இருக்கும் போது உங்கள் மாதாந்திரத் தவணை, கடன் காலம் முடியும் வரை மாறாது.

எனவே எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்த பின்னரே ஒரு வட்டி வீதத்திலிருந்து இன்னொரு வட்டி வீதத்துக்கு மாறுவதைப் பற்றிய முடிவை எடுக்க வேண்டும். கடைசியாக Bank of Canada தற்போதைய சில கருத்துக்களைப் பார்ப்போம்.

• 2008 இல் கடன் மற்றும் பணச் சந்தை ஏற்ற இறக்கங்கள் நிறைந்ததாகவே இருக்கும்.

• கனடியச் சந்தையில் 'அழுத்தம்', அமெரிக்கச் சந்தையில் உள்ளதை விடக் குறைவானதே.

• வீட்டின் விலை தொடர்ந்து அடுத்த ஆண்டு வரை கூடுதலாகவே இருக்கக் கூடும். ஏனெனில் முதலீட்டாளர்கள் கூடுதலான 'ரிஸ்க்' ஐ எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

• முதல்முறையாக கடந்த ஒன்பது ஆண்டுகளில் கனடாவின் ஆறு பெரிய முக்கிய வங்கிகளும் சென்ற மாதத்தில் இலாபம் குறைந்து வருவதாகவோ, நட்டம் அடைந்திருப்பதாகவோ அறிவித்துள்ளன.

• கனடாவின் 'சப்பிரைம்' சந்தையின் அளவு 5% மட்டுமே. அமெரிக்காவில் இச்சந்தையின் அளவு 14% இனால் கடன் சந்தையில் அமெரிக்காவைப் போன்று கனடாவில் பாதிப்பு வராது.

• தொடர்ந்து அமெரிக்கப் பொருளாதாரத்தில் மந்த நிலை நீடித்தால், தொடர்ந்து கனடிய வங்கிகளின் இலாபமும் சிரமத்துக்கு உள் ஆகலாம்.

• ஒருகுறிப்பிட்ட பகுதியினருக்கு வீட்டில் Equity என்று சொல்லப்படும் சுய முதலீடு மிகக் குறைவாகவே உள்ளது. அத்தகையவர்கள் பொருளாதாரத்தில் ஏற்படும் அதிர்ச்சிகளால் தாக்குதல்களுக்குள்ளாகக் கூடும். ஆனாலும் அத்தகைய சூழ்நிலை வருமானலும், கனடியப் பொருளாதாரம் பாதிக்கப்படாது.

நாட்டு நடப்பை மத்திய வங்கியைவிட யார் தெளிவாகச் சொல்ல முடியும்? Bank of Canada தெளிவாகச் சொல்லி விட்டது. ஒளிவு மறைவே இல்லை. அவரவர் சூழ்நிலையை உணர்ந்து கடன்களைத் தேவையான அளவிற்கு மட்டுமே பெற்று, கடன்சரிதத்தை நல்ல முறையில் வைத்துக் கொண்டால் நாட்டுப் பொருளாரதாரம் சிரமத்திற்கு ஆளானாலும், வீட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

கச்சா எண்ணெய் விலையேற்றம் நியாயமற்றது - சவுதிஅரேபியா

உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள கச்சா எண்ணெய் விலையேற்றம் நியாயமற்றது என்று உலக கச்சா உற்பத்தியில் முதலிடத்திலுள்ள சவுதி அரேபியா கூறியுள்ளது.

கச்சா எண்ணெய் விலை உயர்வு பற்றி விவாதிப்பதற்காக எண்ணெய் உற்பத்தி நாடுகளும், பயன்படுத்தும் நாடுகளும் உடனடியாக கூட வேண்டும் என்றும் சவுதி அரேபியா கோரிக்கை விடுத்துள்ளது.

கூடுதலான எரிபொருள் விநியோகத்தின் மூலம் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் பணியில், எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகள் கூட்டமைப்பு (ஓபெக்) உடன் மற்ற பெரும் உற்பத்தியாளர்களும் இணைய வேண்டும் என்றும் சவுதி அரேபியா வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச எண்ணெய் மாநாடு நடத்த வேண்டும் என்ற முடிவு மன்னர் அப்துல்லாவின் தலைமையில் ஜெடாவில் நடந்த சவுதி அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக அந்நாட்டு அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.
சந்தை நிலவரத்தையும் பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி பற்றிய உண்மை நிலையையும் வைத்துப் பார்க்கையில், தற்போதுள்ள எண்ணெய் விலைகள் நியாயமற்றது என்று கூறியுள்ள செய்தி அமைச்சரவை சந்தைக்குப் போதுமான

வரத்து உள்ளது என்று கூறியுள்ளது.

எரிபொருள் விநியோகத்தை அதிகரிக்கும் பணியில் எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகள் கூட்டமைப்பு (ஓபெக்) மற்ற பெரும் உற்பத்தியாளர்கள் ஆகியோருடன் சவுதி அரேபியா இணைந்து செயல்படும் என்று அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளின் பொருளாதாரத்தை அதிகளவில் பாதிப்பதுடன், உலகப் பொருளாதாரத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள, அசாதாரண நியாயமற்ற கச்சா எண்ணெய் விலை உயர்வைக் தடுக்கும் பணியில் சவுதி அரேபியா எப்போதும் உறுதியாக இருக்கும் என்றும் அந்நாட்டு அமைச்சரவை கூறியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜப்பானின் அமோரியலில் நடந்த கூட்டமொன்றில், எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது என்று ஜப்பான், சீனா, தென்கொரியா, இந்தியா மற்றும் G 8 நாடுகள் வலியுறுத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், உலகின் எண்ணெய் தேவையில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்யும் ஒபெக் மீது எண்ணெய் விநியோகத்தை கூடுதலாக்க வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்துள்ளது.

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

KEITH APPLIANCE SERVICE

Heating & Air Condition

Service, All makes repair installation for central A/C & furnace.

தொடர்புகளுக்கு: கேதீஸ்

416-786-6790 / 416.787.4715

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைசுற்றலுக்கு தீர்வு காண்போம்

நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய - (பாகம் - 21)

தலைச்சுற்றல் (Vertigo) என்பது நினைவு நிலையில் சிறிது சீர்குலைவு ஏற்பட்டு உடல் சமநிலையை இழந்து தடுமாறும் நிலையாகும். மயக்கம் தடுமாற்றம் என்றும் இதனைக் குறிப்பிடுவர். அதிர்ச்சி (Shock) என்பதிலிருந்து இது மாறுபட்டது. தலைசுற்றலின் மூன்று நிலைகள்

1. உடம்பு அல்லது தலை சுற்றுவது போன்ற உணர்வு.
2. தலையை சுற்றியுள்ள பொருட்கள், அறையின் மேற்கூரை சுற்றுவது போன்ற உணர்வு.
3. தள்ளாடுவது போன்றும், கால்கள் இரண்டும் தடுமாறுவது போன்ற உணர்வு.

உடலின் சமநிலை பலவித காரணங்களால் பாதிக்கப்படுகிறது. காதும், காது சார்ந்த உறுப்புகளும் சமநிலையைப்பெற உதவுகின்றது. மூளையின் கீழ்ப்பகுதி, அதன் தண்டுப்பகுதி, காது, கண், மனம் என்பவற்றில் ஏற்படும் பாதிப்புகள் தலைசுற்றலை உருவாக்குகின்றன. வேகமாக ஆடுவது, சுற்றுவது, திடீரென உயர செல்வது இரைச்சல், துர்நாற்றம் போன்ற புறச்சூழ்நிலைகளாலும், தலைச்சுற்றல் தோன்றலாம்.

தலைச்சுற்றல் ஒரு வியாதியல்ல அது ஒரு வியாதிக்குண்டான அறிகுறியே நாம் சமநிலையில் செயல்படுவதற்கு நான்கு முக்கிய உறுப்புகள் தேவை. அவை, கண், காது, சிறுமூளை மற்றும் முதுகுத்தண்டு நரம்புகள். இவை ஒன்றோடொன்று சேர்ந்து செயல்படுவ-தால் நாம் நினைத்தவாறு அசைகிறோம். இவற்றுள் ஒன்றுக்கு செயல்திறன் குன்றியிருந்தால் தலைச்சுற்றல் ஏற்படுகிறது.

பொதுவாக தலைச்சுற்றல் என்பது வயது போகப்போக மிகுதியாகக் காணப்படுகிறது. சிறு பிள்ளைகளுக்குக்கூட தலைச்சுற்றல் வருவதுண்டு. இதனை நாம் மிகுந்த கவனத்துடன் கண்டறிய வேண்டும்.

நாம் நடமாடும் போது நமது கண், காது, கை, கால் ஆகியவை நமது சிறு மூளைக்கும், பெருமூளைக்கும் (கம்யூட்டர் போல) விபரங்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட விபரங்கள் நமது சிறு மூளையிலிருந்து பெருமூளைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவற்றிலிருந்து செயல்வடிவமாக எடுத்துவரப்படுகிறது. இந்த செயலில் சீர்கேடு வரும்பொழுதும், தவறான Signal மூளைக்குச் செல்லும் பொழுதும் தலைச்சுற்றல் ஏற்படுகிறது.

தீர்வுகள்

1. உடற் பயிற்சி அதிலும் யோகாசனப்பயிற்சியும், பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சியும் ஒரு யோகாசன நிபுணர் உதவியுடன் பழகிவரும்போது இரண்டு வாரங்களில் குறிப்பிடத்தக்க பலனை அடையலாம். இந்த பயிற்சிகளினால் நரம்புகள், நாளங்கள், தசைகள், அதிக வலுப்பெறுகின்றன. இதனால் கழுத்து, காது, கண், நரம்புகள் பலமடைந்து தலைசுற்றுதல் நீங்குகின்றன.

மனநிலை பயிற்சி

உடலும் உள்ளமும் ஒன்றிணைந்து செயல்பட்டால்தான் வாழ்க்கை சிறப்பாக அமையும். உடலின் சீர்கேட்டால் மனம் குன்றும். மனம் குன்றினால் உடல் சீர் கெடும். தலைசுற்றல் அடிக்கடி ஏற்பட்டால் மன ரீதியான சோர்வு ஏற்பட்டு பலவித நோய்களுக்கு வழிகோலும்.

இதற்கு தியானப்பயிற்சிதான் (Meditation) சிறந்த பலனைத் தரும். அதிலும் ஆழ்நிலைத் தியானம் தான் பழகுவதற்கு இலகுவாக இருக்கும். இப்பயிற்சியினால் மனம் அமைதியடைந்து உடலும் நல்ல நிலைக்குத் திரும்பும்.

உணவுமுறைகள்

தலைசுற்றுதல் ஏற்படும் நோயாளிகள் நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகளை உண்பது சிறந்தது. மாமிசம், ஊறுகாய், காரம் போன்றவற்றை தவிர்ப்பது நலம். உணவை ஒரே தடவையில் கூடுதலாக உட்கொள்ளலாகாது.

படுக்கையில் தலையணையின்றிப் படுப்பது நல்லது. தலைசுற்றுதல் வரும்போது கண்களை மூடிக்கொண்டு ஒரு திசைக்கு திரும்பாது நேராக படுத்திருக்க வேண்டும்.

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
416.289.2033 after 7:00pm

SAFETY TRUCKS
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z
In Classes
• 365 (Learning Permit)
• Log Books
• Air Brake (Z)
• Dangerous Goods
• Border Crossing
• Defensive Driving Course


20 Years Canadian Experience with Trucks
• தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
• One On One Training
• அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
• கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
• We Accept Welfare & Unemployment Insurance
• வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.
சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

APPLEMORE AUTOMOTIVE
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலின் மூலம் முழுமை



சத்குரு ஜக்கி வாசுதேவ்

தற்போது விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சக்தி மிக்கதாக இருக்கிறது. எனவே இவற்றை வருத்தத்துடன் இருக்கும் மனிதர்கள் கையாளும் போது உலகம் அழிவுக்கே தள்ளப்படலாம் இல்லையா? உங்கள் வாழ்க்கையிலேயே நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும் தருணங்களில் உயர்ந்த பண்புகளுடனும் சுற்றியிருப்பவர்களுக்கு அற்புதமான மனிதராகவும் இருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் மகிழ்ச்சியற்று இருக்கும்போது எவ்வளவு கேவலமாக நடந்து கொள்கிறீர்கள் என்பதையும் எவ்வளவு மோசமான செயல்கள் செய்வதற்கும் தயாராக இருக்கிறீர்கள் என்பதையும் கவனித்திருக்கிறீர்களா? எனவே உங்கள் வாழ்வின் முதலும் முடிவுமான பொறுப்பாக எது இருக்க வேண்டுமென்றால் நீங்கள் ஒரு மகிழ்ச்சியான மனிதராக மாறுவதுதான். உங்கள் நோக்கமே அப்படித்தான் இருக்கவேண்டும். உங்கள் வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ அல்ல வேறெங்கு இருந்தாலும் வாழ்வதையும் பணி செய்வதையும் மகிழ்ச்சியான மனிதருடன் செய்ய விரும்புவீர்களா? அல்லது வருத்தத்தில் இருக்கும் மனிதர்களுடனா? மகிழ்ச்சியான மனிதர்களுடன்தான். இல்லையா?

உலகிலுள்ள அனைவருமே அப்படித்தான் விரும்புவார்கள் என்பதையும் நீங்கள் தயவுசெய்து நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் அதைத்தான் விரும்புகிறார்கள். உங்களுடன் வாழும் மற்றவர்களும் உங்களிடம் அதைத்தானே எதிர்பார்க்கிறார்கள்? ஆனால் வெளியில் சென்று ஜனத்திரள் அதிகமாக உள்ள முக்கிய சாலையில் நின்று கவனியுங்கள் எவ்வளவு பேர் மகிழ்ச்சியான முகங்களுடன் செல்கிறார்கள். மிகக் குறைவாகத்தான் இல்லையா? ஏதாவது மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்க முடிந்தால் பொதுவாக அவர்கள் இளவயதினராக இருப்பார்கள். 30 வயதிற்கு மேல் ஆனவர்கள் தொங்கிய முகங்களுடன்தான் செல்கிறார்கள். அவர்களுக்கு என்ன ஆகிவிட்டது? (சிரிக்கிறார்). சிறிது காலம் முன்பு நான் பிரின்ஸ்டன் நகரில் இருந்தபோது 30 வயதுக்கு மேல் ஆனவர்கள் எல்லாம் ஏன் கவலையான முகங்களுடன் இருக்கிறார்கள் என்று கேட்டபோது அவர்களெல்லாம் திருமணமானவர்கள் என்று ஒரு பெண் பதில் கூறினார் (சிரிக்கிறார்). மகிழ்ச்சியுடன் இருப்பதற்காகத்தான் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் துன்பத்தில் பங்கு கொள்வதற்காகத்தான் துணை தேடிக் கொள்கிறார்கள் என்று நான் அறியவில்லை.

மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நீங்கள் ஒவ்வொன்றையும் செய்கிறீர்கள். ஆனால் இறுதியில் பல வழிகளில் துன்பத்தை வரவழைத்துக் கொள்கிறீர்கள். நம்மிடம் ஒரு துணி நெய்யும் ஆலை இருக்கிறது. ஏராளமான மூலப்பொருட்களை உள் அனுப்புகிறோம். 24 மணி நேரமும் ஆலை வேலை செய்கிறது. ஆனால் துணி நெய்து வெளியில் வரவில்லை. இந்த மாதிரி ஆலையை வைத்து நாம் என்ன செய்யவேண்டும்? ஒன்று அந்த ஆலையை மூடிவிட வேண்டும் அல்லது முழுவதுமாக சரிசெய்ய வேண்டும். நீங்கள் உங்களையே ஒரு மகிழ்ச்சி ஆலையாக பார்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் அதைத்தானே உற்பத்தி செய்ய விரும்புகிறீர்கள்?

ஐந்து வயதாக இருக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தீர்கள். ஆனால் இப்போது மகிழ்ச்சி குறைவாகத்தானே இருக்கிறது. அப்படியெனில் நீங்கள் உங்கள் ஆலையை மூடிவிட வேண்டும் அல்லது முழுவதுமாக சரிசெய்ய வேண்டும். யோகா என்பது என்னவென்றால் உங்களை முழுவதுமாக சரிசெய்வதுதான். அதாவது வாழ்க்கையின் அரிச்சுவடியை மீண்டும் திரும்பிப்பார்ப்பது. உங்களுக்குள் நிலைபெறச் செய்வது. உள்நிலையின் செயல்பாடுகளை புரிந்து கொள்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சி செய்யத் தூண்டுவது ஆகியவையே. அதன்மூலம் ஒரு சரியான சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிக் கொள்ள முடியும். அமைதியாக இருப்பதும் மகிழ்ச்சியாக இருப்பதுமே தன்னை உணர்தல் ஆகிவிடாது என்பதையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஞானோதயம் என்பது விவரிக்க முடியாதது.

நான் எனக்குள் எப்படி இருக்கிறேன் என்றால் இந்த ஞானோதயத்தை வேறு எதற்காகவும் நான் விட்டுக்கொடுக்க மாட்டேன். இந்த முழு உலகத்தையும் மாற்றாகக் கொடுத்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டேன். ஒவ்வொரு மனிதரும் இப்படி இருப்பதற்கான சாத்தியம் இருக்கிறது. அதற்கான கவனம் கொடுக்காததால் தான் அவர்களுக்கு அது இன்னமும் நிகழவில்லை. நீங்கள் பிறந்த வினாடியிலிருந்து உங்கள் தாயின் கருவிலிருந்து வெளிவந்து கண்திறந்த வினாடியிலிருந்து வெளி சூழ்நிலையத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உள்நிலையில் என்ன நிகழ்கிறது என்பதை எப்போதும் பார்க்கவில்லை.

இலங்கை மீதான...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்துள்ள அதேவேளை, அங்குள்ள இலங்கையர்களிடம் அது நிதி சேகரிப்பதற்கு அனுமதியளித்துள்ளது எனத் தெரிவித்திருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, இதன் மூலம் பிரிட்டன் தனது பயங்கரவாத எதிர்ப்பு கொள்கை தொடர்பாக இரட்டை வேடமிடுகின்றது என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார். லண்டனிலிருந்து வெளியாகும் "த ரைம்ஸ்" இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்தார் எனக் குறிப்பிட்டுள்ளது. பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டிற்காக பிரிட்டன் சென்றிருந்த வேளை மேற்படி செய்திப் பத்திரிகைக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஸ் பிரதமர் கோர்டன் பிறவுணுடனான தமது சந்திப்பின் போதும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இவ்விடயம் குறித்து அவரது கவனத்தை ஈர்த்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள தமிழ் சமூகத்திடமிருந்து விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் வருடாந்தம் மில்லியன் கணக்கான பவுண்ட்ஸ்களைச் சேகரிக்கின்றனர். சிலர் நிதியுதவியை வழங்குமாறு பலவந்தப்படுத்தப்படுகின்றனர் என ஜனாதிபதி ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதம் தொடர்பாக இரு வேறு அணுகுமுறை இருக்க முடியாது எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ "நல்ல பயங்கரவாதிகள்", "கெட்ட பயங்கரவாதிகள்" என்பதை நான் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரே வகையான பயங்கரவாதிகள் மாத்திரமேயுள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார். பிரிட்டனில் ஒன்றரை லட்சம் தமிழர்கள் உள்ளனர். இவர்களில அனேகமானவர்கள் வட லண்டனிலேயே வாழ்கின்றனர் எனத் தெரிவித்துள்ள ரைம்ஸ், வருடாந்தம் ஏழு கோடி பவுண்ஸ் இலங்கைக்கு அனுப்பப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவை சுயவிருப்பின் பேரில் வழங்கப்படுபவையல்ல. நிதி வலுக்கட்டாயமாக எடுக்கப்படுகின்றது. தமிழர்களின் வருமானத்தின் ஒரு பகுதியாக இவை வசூலிக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ராஜபக்ஸ, இந்த நிதி ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக அனுப்பப்படுகின்றது என்றும் கூறுகிறார். இப்படி லண்டனிலிருந்து மாத்திரம் பணம் அனுப்பப்படவில்லை. ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலிருந்தும், கனடா உட்பட ஏனைய பகுதிகளிலிருந்தும் நிதி அனுப்பப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தான் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த, விடுதலைப் புலிகளின் திறமையான பிரசாரமே தனது அரசின் நற்பெயர் சர்வதேச அளவில் பாதிக்கப்பட்டுள்ளமைக்குக் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரசார யுத்தத்தில் நாம் தோற்றுவிட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, இலங்கையின் உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்பட்டுள்ளமை போன்றவற்றின் மத்தியிலும் கூட நாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்கப் போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறோம். அந்த அமைப்பு முதலில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தாங்கள் பலவீனமாக உள்ள சமயத்தில் சர்வதேச சமூகத்தை யுத்தநிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு கோருவார்கள். இக்காலப் பகுதியில் அவர்கள் மீண்டும் போரிடுவதற்காகத் தம்மைப் பலப்படுத்துவார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இம்முறை அவர்கள் பேச்சுகளில் ஈடுபட விரும்பினால் முதலில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்றார் ஜனாதிபதி.

விடுதலைப் புலிகள் இந்த முன் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாலும் கூட, விடுதலைப் புலிகளின் தலைவருடன் தான் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இல்லையெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

TENNIS LESSONS

By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 35 years of experience.
Group Classes & Private Coaching Possible
David Selvadurai : 416.495.1277

யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public
கனேடியத் தமிழ் வழக்கறிஞர்

- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation

Tel: 416-847-7077 Fax: 416-847-7088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி முகிழ்த்த தமிழ்’

பிரபஞ்சம் - 18

தமிழின் பெருமையையும் பழமையையும் தெரியப்படுத்துவதற்காக நம்மவர்கள் கூறிக்கொள்வது மேலே கூறப்பட்ட வாக்கியத்தைத்தான் என்பது நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும். ஆனாலும் இது மிகைப்படுத்தப்பட்ட கூற்று எனப் பலரும் முணுமுணுப்பதையும் கேட்டிருப்பீர்கள். இந்த இருபத்தொராம் நூற்றாண்டிலே இப்படிக் கூறலாமா? எனக் கேட்பவர்களும் உண்டு. மற்ற இனத்தவர்கள் கேட்டால் பரிகாசிப்பார்களே என அவதிப்படுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனாலும் என்மட்டில் இந்தக் கூற்றுக் கூட ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியது தான் என்பேன். ஒருவேளை இக்கூற்றுக்கு கூட உண்மையானதாக இருக்கலாமோ? எப்படி என்பதை பேரண்டக்கதையினுள் கூறுகின்றேன்.

நமது பூமியிற்கு உயிரினங்கள் எப்படி வந்திருக்கலாம் என்பதில் பல கருத்துகள் உள்ளன. அதிலும் மனிதர்கள் பூமியில் எப்படித் தோன்றினார்கள், அல்லது பூமிக்கு எப்படி வந்தார்கள் என்பதில் கூட பல கதைகள் விஞ்ஞான மட்டத்தில் உள்ளது. நமது சூரியன், அதாவது கதிரவன் மூன்றாம் தலைமுறை விண்மீன்களில் ஒன்று. அது தோன்றி 4½ பில்லியன் ஆண்டுகள் ஆகிவிட்டது. நமது கதிரவன் தோன்ற முன்னரே பல விண்மீன்கள் தோன்றி விட்டன. அவற்றிற்கும் கோள்கள் தோன்றி விட்டன. அதாவது நமது பூமி தோன்ற முன்னரே, பேரண்டத்தில் வேறு பல கோள்கள், பல விண்மீன்களுடன் தோன்றிவிட்டன. அவற்றில் ஒன்றிலோ அல்லது சிலவற்றிலோ உயிரினங்களும் தோன்றிவிட்டன. அவ்வுயிரினங்களில் ஒன்று மனிதரை ஒத்ததாக இருந்திருக்கலாம். அவற்றின் அறிவியல் நிலை கூட உயிர்ந்ததாக இருந்திருக்கலாம். அவர்களது கோள், ஏதோ ஒரு காரணத்தால் அழிந்து போக, அது அழிந்து போவது தெரிந்து, அக்கோளில் இருந்து தப்பிப் பிழைத்து விண்வெளிக்கு ஓடிய ஒரு குழுமத்தினர் வந்து அடைந்த இடம் தான் எமது பூமி என்று சிலர் கூறுகின்றார்கள். அப்படி வந்து சேர்ந்தவர்கள் கொண்டுவந்த மொழிதான் தமிழ் எனக் கருதினால், நமது பூமியைப் பொறுத்தவரையில் ‘கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி முகிழ்ந்த தமிழ்’ எனக் கூறுவதிலும் ‘கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி முகிழ்த்த குடி, தமிழ்க்குடி’ என்பதிலும் அர்த்த முண்டல்லவா!

இதைவிட, இன்னொரு விளக்கமும் கூறலாம். நமது பூமியில் எப்படியோ உயிரினம் தோன்றி, மனிதர்களும் எப்படியோ சஞ்சரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஆதி மனிதர்கள் அல்லவா? அவர்களிடம் பண்பட்ட மொழி வழக்கு இருந்திராது. இந்நேரத்தில் எமது பூமியானது வேற்றுக்கிரக மனிதர்களின் பார்வையில் பட்டிருக்க வேண்டும். இந்த வேற்றுக்கிரக மனிதர்கள், பூமி தோன்றுவதற்கு முன்பே தோன்றிய ஒரு விண்மீனின் கோளில் வசிப்பவர்கள், வசித்தவர்கள் பூமியில் வந்திறங்கிய அவர்களது விண்கலத்தில் இருந்து வந்திறங்கியவர்கள், அல்லது வந்திறங்கிய ஒருவர் பூமியில் இருந்த ஒருபகுதி மனிதனுக்கு கற்பித்த மொழிதான் ‘தமிழ்’ என இருந்தாலும் இப்பகுதியின் ஆரம்பத்தில் கொடுக்கப் பட்ட வாக்கியம் சரியானதாக இருப்பதற்கு சந்தர்ப்பம் உண்டல்லவா? தமிழைக் கற்பித்த குறுமுனி அகத்தியரையும், அவரது வருகையையும் கொஞ்சம் விரிவுபடுத்தி யோசித்துப் பாருங்கள். ஏற்றுக் கொள்ளலாம் போல் உள்ளதல்லவா! ஆதலினால் ‘கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி முகிழ்த்த தமிழ்’ எனக் கூறிக்கொள்வதையிட்டு அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை; வெடக்கப் படத் தேவையில்லை. அதையிட்டுக் கேள்வி கேட்பவர்களுக்குக் கூறக் கூடிய பதில் எம்மிடம் உள்ளது தானே.

ஆபிரிக்காவில் வாழும் ஆதிக்குடிகளில் ஒரு குழுவினர் சைரஸ் A, சைரஸ் B எனும் சோடி விண்மீன் தொகுதியைக் காட்டி, தாங்கள் அந்த விண்மீன் தொகுதியில் இருந்து வந்தவர்கள் எனக் கூறிக் கொள்ளுகின்றார்கள். இதில் சைரஸ் B என்ற விண்மீன் இன்று இறந்துவிட்ட விண்மீன் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தால் நல்லது. ஆயின் விண்மீன் சைரைஸ் B இறந்து போக சைரைஸ் Bயின் கோள்களில் ஒன்றில் இருந்த மனிதர்கள் தமது கோளின் அழிவில் இருந்து தப்பி ஓடிவந்து தங்கிய இடம்தான் பூமியின் ஆபிரிக்கா என்றும் அப்படி ஓடிவந்தவர்கள் தான் அந்த ஆபிரிக்க ஆதிக்குடிமக்கள் எனவும் நம்ப இடமுண்டல்லவா. எனது ‘வேற்றுக்கிரக மனிதர்கள்’ எனும் புத்தகத்தில் இது பற்றிக் குறிப்பிட்டிருப்பதை நீங்கள் நினைவுபடுத்தலாம்.

அப்படியாக, வேற்றுக்கிரகம் ஒன்றில் இருந்து வந்தவர்கள் தான் தமிழர்கள் எனில் ஆதித்தமிழரிடம் பேரண்டம் பற்றிய கருத்துக்கள் அரசல் புரசலாகவேணும் தெரிந்திருக்க வேண்டும். வானியல் பற்றிய தெளிவான விளக்கமும் இருந்திருக்க வேண்டும். ஆனாலும் அவை வெளிப்படுத்தப்படவில்லை அல்லது அழிந்து போயிருக்கலாம் என எண்ண இடமுண்டு. வேற்றுக்கிரக மனிதர்களின் இரகசியம் அம்பலமாகுகையில் இது பற்றிய தெளிவும் வெளிவரலாம்.

விஞ்ஞானிகளிடம் இந்த எண்ணம் இல்லாமல் இல்லை. அதனால்தான் விண்வெளிக்கு அனுப்பிய செய்திகளில் 6 மொழிகளில் செய்திகள் அனுப்பியுள்ளனர். அதில் ஒன்று எமது தமிழ் என்பதும் நீங்கள் அறிவீர்கள் தானே!

எது எப்படி இருப்பினும், இக்கால வானியல் விஞ்ஞானம் கிரேக்கத்தில் இருந்தே கட்டுக்கோப்புடன் வளர்ந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதன்படி இனி கிரேக்கத்தில் இருந்து பேரண்டக் கதையினைத் தொடர்வோம்.

- கனி -

விளையாட்டில் கனடிய குடிவரவு சிறுவர்கள் - Kids in sports

கனடியர்களின் வாழ்வில் விளையாட்டு பல அம்சம்களை தொட்டு நிற்கிறது. அவர்களுடைய ஆரோக்கியம், நலவாழ்வு, சமுதாய வலையமைப்பு, சமூகத்துடன் ஒன்றிணைந்துள்ளதன் உணர்வு போன்றவையாம். விளையாட்டு பிள்ளைகளுக்கு தலைமைத்துவம், தீர்மானம் எடுத்தல், கூட்டுமுயற்சி தொடர்பாடால் திறன், ஆகிய பண்புகளை கொடுத்து, அவர்கள் ஆரோக்கியமாக வளர உதவுகிறது.

Statistics Canada வின் இணையபக்கத்தில் Canadian Social Trends என்ற பகுதியில் பிரசுரிக்கப்பட்ட இக்கட்டுரை 5 இலிருந்து 14 வயதிற்குட்பட்ட மாணவர்கள் வழமையாக ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றும் போக்கு பற்றி 1992 மற்றும் 2005 இல் எடுக்கப்பட்ட பொது சமூக கணக்கெடுப்பு புள்ளிவிபர தகவல்களை அடிப்படையாக கொண்டு ஆராய்கிறது. இம்மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுவதை வசப்படுத்தும் காரணிகளை ஆராய்வதோடு விளையாட்டு போட்டிகளில் பெற்றோரின் ஈடுபாடு, குடுப்பத்தின் சமூக விழுமியங்கள், வாழுமிடத்தில் உள்ள வசதிகளையும் கவனத்தில் கொள்கிறது.

ஆராய்ச்சியின் பிரதான வெளிப்பாடுகள்:

பிள்ளைகள் விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றுவது பால், வயது, வீட்டு வருமானம், பெற்றோரின் கற்றறிவு, பெற்றோர் விளையாட்டில் கொண்ட ஈடுபாடு, வாழுமிடம், பெற்றோரின் குடிவரவு அந்தஸ்து ஆகிய வகைகளை பொறுத்து வேறுபடுகிறது.

பங்குபற்றுபவர்களில் பெண்களை விட பையன்கள் அதிகமாகவிருந்தாலும் அந்த இடைவெளி தற்போது குறைந்து வருகிறது. சிறுவர்களிலும் பார்க்க இளைஞர்களுக்கு ஈடுபாடு அதிகம். கல்வியில் டிப்ளோமா அல்லது அதனிலும் குறைவாக படித்த பெற்றோர் உள்ள மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் வரவை காட்டிலும் உயர்ந்த வருமானமுள்ள குடும்பங்கள் மற்றும் மிகுந்த கற்றறிவுள்ள பெற்றோரை உடைய குடும்பங்களில் இருந்து வந்து விளையாட்டில் பங்குபற்றும் பிள்ளைகள் அதிகம்.

விளையாட்டில் தாமாக ஈடுபடும் பெற்றோர்கள் போட்டிகளில் தாம் பார்வையாளராக இருந்தாலும் அப்போட்டிகளில் பிள்ளைகளை பங்குபற்ற ஆர்வமூட்டுகிறார்கள். இரு பெற்றோர் உள்ள குடும்பங்களில் அவ்விருவரும் விளையாட்டில் ஈடுபடுகின்றார்கள் எனில் அவர்களின் பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபடும் விகிதாசாரம் உயர்வாகவுள்ளது.

கனடாவின் முப்பெரு நகரங்களிலும் பார்க்க சிறிய நகரங்கள் பட்டினங்களில் (10,000 -49,999 மக்கள் கொண்ட) வசிக்கும் பிள்ளைகளின் பங்குபற்றல் அதிகமானது.

விளையாட்டு நிகழ்ச்சியின் தரம், அயல் பிரதேசங்களின் பாதுகாப்பு, பங்கேற்கும் நண்பர்கள், ஆகிய அம்சங்களும் பங்கேற்றலை வசியப்படுத்துகின்றது. ஆனால் இந்த காரணிகள் 2005 கணிப்பீட்டில் ஆய்வு செய்யப்படவில்லை. அண்மையில் குடிவந்த பெற்றோரின் பிள்ளைகள் பங்குபற்றுவது (32%) கனடாவில் பிறந்த பெற்றோரின் குழந்தைகளை (55%) பார்க்கிலும் குறைவகவே உள்ளது. சர்வதேசளவில் பிரபல்யமான கால்பந்தாட்டம் அண்மையில் குடிவந்த பிள்ளைகள் கனடிய சமுதாயத்துடன் ஒன்றிணைவதற்கு வசதியான இடமாகவுள்ளது. அப்படியிருந்தும் கனடாவில் பிறந்த பெற்றோரின் பிள்ளைகளின் (23%) வரவை காட்டிலும் 10% குறைவாகவே காணப்படுகிறது.

கால்பந்து பையன்களும் பெண்களும் பங்கு பற்றும் ஒரு பொது



விளையாட்டாக மாறியுள்ளது. ஒருகால் ஐரோப்பியர்கள் அல்லது தென் அமெரிக்கர்களுக்குரிய விளையாட்டு என கருதப்பட்ட கால்பந்து கனடியர்களிடையே 20% மான இளைஞர்கள் பங்கேற்குமளவிற்கு பிரபல்யமாகிவிட்டது. மாறாக மற்றைய விளையாட்டுக்களில் குறிப்பாக பேஸ் பந்து, நீச்சல், பனிச்சறுக்கல், கரப்பந்து, தேகப்பயிற்சி ஆகியனவற்றில் பிள்ளைகளின் பங்குபற்றல் இறங்குமுகம் காணுகிறது.

- ஆதாரம்: *Statistics Canada*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EURO - 2008! அசத்தப் போவது யாரு?

விளையாட்டுத் தகவல்கள் 239

கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த யூரோ கோப்பை கால்பந்து தொடர் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற முன்னணி அணிகள் கோப்பைக்கனவுடன் களமிறங்குகின்றன.

ஐரோப்பிய அணிகள் பங்கேற்கும் யூரோ கோப்பை கால்பந்து தொடரை ஆஸ்திரியா மற்றும் சுவிற்சலாந்து நாடுகள் இணைந்து நடத்துகின்றன. மொத்தம் 16 நாடுகள் நான்கு பிரிவுகளாக களம் காண்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் இடம்பெற்று உள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் மூன்று லீக் போட்டிகளில் பங்கேற்கும். லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களை கைப்பற்றும் அணிகள் காலிறுதிக்கு தகுதி பெறும்.

சுவிஸ் சவால் - இத்தொடரின் முதல் போட்டி சுவிற்சலாந்தின் பசல் நகரில் இன்று துவங்குகிறது. இதில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள சுவிற்சலாந்து, அனுபவ செக்குடியரசு அணியை எதிர்கொள்கிறது. இளம் வீரர்களுடன் களமிறங்கும் சுவிற்சலாந்து அணி சொந்த மண்ணில் சாதிக்க காத்திருக்கிறது. முன்பு செக்கோஸ்லோவக்கியாவாக இருந்த போது 1976 இல் யூரோ கோப்பையை வென்றது. பின்னர் 1996 இல் இறுதிவரை முன்னேறிய செக்குடியரசு அணி, 2004 இல் அரையிறுதிக்கு தகுதி பெற்றது. பிரய், ஜான் கோலர் போன்ற வீரர்கள் கோல் அடிப்பதில் மிகவும் கெட்டிக்காரர்கள். அதிலும் மிக உயரமான கோலரை சமாளிப்பது தான் சுவிற்சலாந்து அணிக்கு சவாலான விடயம். ஜெனிவாவில் நடக்கும் மற்றொரு போட்டியில் போர்த்துக்கல், துருக்கி அணிகள் மோதுகின்றன. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து அணி இம்முறை தகுதிபெற தவறியது ஏமாற்றமான விடயம்.

புதிய கோப்பை - இத்தொடருக்கான கோப்பை தற்போது புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 8 கி.கிராம் எடையும், 60 செ.மீ உயரமும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அணியிலும் 23 பேர் இடம்பிடித்துள்ளார்கள். கோப்பை வெல்லும் அணிக்கு பரிசு தொகையாக சுமார் ரூ. 152 கோடி கிடைக்கும். லீக் சுற்றில் வெற்றி பெறும் அணிகளுக்கு தலா சுமார் ரூ. 66 கோடி அளிக்கப்படுகிறது.

அணிகள் :
பிரிவு - 'ஏ' சுவிற்சலாந்து, செக் குடியரசு, போர்த்துக்கல், துருக்கி.
பிரிவு - 'பி' ஆஸ்திரியா, குரோஷியா, ஜேர்மனி, போலந்து.
பிரிவு - 'சி' நெதர்லாந்து, இத்தாலி, ரோமேனியா, பிரான்ஸ்.
பிரிவி - 'டி' கிரீஸ், சுவீடன், ஸ்பெயின், ரஷ்யா.

இத்தொடரில் இதுவரை நடைபெற்ற சில சுவாரஸ்சியமான ஆட்டங்களை பார்ப்போம்.

ஜேர்மனியின் அசத்தல்!
யூரோ கோப்பை கால்பந்து தொடரில் ஜேர்மனி அசத்தலாக துவக்கியுள்ளது. போலந்துக்கு எதிரான 'பி' பிரிவு போட்டியில் பொடால்ஸ்கி இரண்டு கோல் அடிக்க ஜேர்மனி 2 - 0 என்ற கோல் கணக்கில் வென்றது. ஆஸ்திரியாவின் கிளாகன்பர்ட் நகரில் நடந்த 'பி' பிரிவு போட்டியில் பலம் வாய்ந்த ஜேர்மனி அணி போலந்தை எதிர்கொண்டது.

பொடால்ஸ்கி அசத்தல் - இரண்டு முறை யூரோ கோப்பை வென்ற அனுபவம் கொண்ட ஜேர்மனி துவக்கத்திலிருந்தே அசத்தலாக விளையாடியது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பொடால்ஸ்கி ஆட்டம் தொடங்கிய 20வது நிமிடத்தில் முதல் கோலை அடித்தார். மிரோஸ்லவ் குளோஸ் மூலம் மரியா கோமேஜ் கொடுத்த மின்னல் வேக பாசை பயன்படுத்தி இவர் கோலடித்தார்.

முதல் பாதியின் முடிவில் ஜேர்மனி 1 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதையடுத்து இரண்டாவது பாதியில் போலந்து சுதாரித்து ஆடியது. இருந்தபோதிலும் இவர்களால் ஜேர்மனியின் பலமான தற்காப்பை உடைக்க முடியவில்லை. தொடர்ந்து அசத்திய பொடல்ஸ்கி 73வது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்து அணியின் முன்னிலையை அதிகரித்தார். இறுதியில் ஜேர்மனி 2 - 0 என்ற கோல் கணக்கில் வென்றது.

போர்த்துக்கல் கலக்கல் வெற்றி -
சுவிற்சலாந்தின் ஜெனிவா நகரில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் போர்த்துக்கல் அணி துருக்கியை 2 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. கடந்த முறை முதல் போட்டியிலேயே கிரீசிடம் தோல்வியடைந்த போர்த்துக்கல் இம்முறை கோப்பை வெல்ல வேண்டும் என்ற உறுதியுடன் களமிறங்கியது. கால்பந்து உலகின் அடுத்த 'சூப்பர் ஸ்டார்' போர்த்துக்கல்லின் கிறிஸ்டியானோ ரொனால்டோ துவக்கத்தில் இருந்தே துடிப்புடன் விளையாடினார். 30வது நிமிடத்தில் துருக்கியின் தற்காப்பை தகர்த்து முன்னேறிய இவர் கோலடிக்கும் வாய்ப்பை நூலிழையில் தவறவிட்டார். அடுத்த எட்டாவது நிமிடத்தில் இவர் அடித்த Free Kick வாய்ப்பை துருக்கி கோல் கீப்பர் வால்கன் தட்டிவிட இரண்டாவது வாய்ப்பும் பறிபோனது. இதையடுத்து முதல் பாதி கோலின்றி முடிந்தது.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடின. ஆட்டத்தின் 61 வது நிமிடத்தில் போர்த்துக்கல் ரசிகர்கள் உற்சாகத்தில் துள்ளினர். அணித்தலைவர் நுனோ கோம்ஸ் மூலம் ரொனால்டோ கொடுத்த பாசை பெபே கோலாக மாற்றி காட்டினார். இதன்மூலம் போர்த்துக்கல் 1 - 0 என்ற முன்னிலை பெற்றது. இந்நிலையில் 83வது நிமிடத்தில் சிமோவுக்கு பதிலாக ரால் மெய்ர்லஸ் வந்தார். களமிறங்கிய 10வது நிமிடத்தில் இவர் அணிக்கு இரண்டாவது கோலை பெற்றது தந்தார். போர்த்துக்கல் 2 - 0 என்ற கோல் கணக்கில் துருக்கியை வீழ்த்தியது. ஆட்டநாயகன் விருதை பெபே தட்டிச் சென்றார்.

பிரான்சுக்கு ரூமேனியா அதிர்ச்சி
யூரோ கால்பந்து தொடரில் பிரான்ஸ், ருமேனியா அணிகள் மோதிய 'சி' பிரிவு போட்டி தோல்வியின்றி 'சமநிலை'யில் முடிந்தது. கோலடிக்க இரு அணி வீரர்களும் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. சுவிற்சலாந்தின் ஜுரிச் நகரில் நடந்த 'சி' பிரிவு போட்டியில் இரண்டு முறை யூரோ சாம்பியன் பிரான்ஸ் அணி, ரூமேனியாவை எதிர்கொண்டது. பிரான்ஸ் அணியில் 'அணித்தலைவர் பேட்ரிக் வியாரா நீக்கப்பட்டு, லில்லியன் தூரம் அணித்தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இப்பிரிவில் இடம்பெற்றுள்ள நான்கு அணிகளும் பலம் வாய்ந்தவை என்பதால் ஒவ்வொரு போட்டியும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கிறது.

துவக்கத்திலிருந்து இரு அணிகளும் வெற்றிக்கு கடுமையான போராடின. இரு அணி வீரர்களும் அடிக்கடி உரசிக் கொண்டனர். ரூமேனியாவின் டேனியல் நிக்காலே (27வது நிமிடம்) கோஸ்மின் கான்ட்ரா (40வது நிமிடம்), டோரின் கோயின் (43வது நிமிடம்) ஆகியோருக்கு Yellow கார்டு வழங்கப்பட்டது. முதல் பாதி கோலின்றி முடிந்தது.

ஆட்டத்தின் 49வது நிமிடத்தில் கிடைத்த அரிய வாய்ப்பை பிரான்சின் பிளோரான்ட் மலுடா தவறவிட்டார். அடுத்த மூன்றாவது நிமிடத்தில் ரூமேனியாவின் முட்டு 'ப்ரி ஹிக்கில்' அடித்த பந்து 'கோல் போஸ்டை' தாண்டி நேராக ரசிகர்களை நோக்கி சென்றது. 57மற்றும் 64வது நிமிடத்தில் கிடைத்த இரண்டு வாய்ப்புகளை பிரான்சின் பென்சிமா கோட்டைவிட்டார். இரண்டாவது பாதியிலும் இரு அணிகளும் கோல் அடிக்காததை அடுத்து போட்டி 'சமநிலை'யில் முடிந்தது.

'ஆணழகன்' ரொனால்டோ! யூரோ 2008 தொடரின் 'அழகனாக' போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்தொடரில் பெண்களின் இதயம் கவர்ந்த அழகன் யார்? என்ற சுவாரஸ்ய சர்வேயின் முடிவு வெளியிடப்பட்டுள்ளது. 'மிஸ்டர் ஹேண்ட்சம்' என்ற இந்த சர்வே ஒரு தனியார் நிறுவனத்தால் 12 ஆயிரம் ஐரோப்பிய பெண்களிடையே நடத்தப்பட்டது. தங்களை அதிகம் கவர்ந்த அழகனான ரொனால்டோவை பெரும்பான்மையான பெண்கள் வாக்களித்து தேர்வு செய்துள்ளனர். இதற்கான காரணம் இவரின் திறமையான ஆட்டம் மட்டும் இல்லையாம். இவரது கவர்ச்சியான தோற்றமே முதலிடத்தை பெற்று தந்தது என சர்வே கூறுகிறது. இவர் இத்தாலி, ஜேர்மனி மற்றும் சுவீடன் நாட்டு பெண்களால் பெரிதும் ரசிக்கப்படும் வீரராக வலம் வருகிறார். சர்வேயில் இரண்டாம் இடத்தை தட்டிச் சென்றவர் பிரான்ஸ் வீரர் தியரி ஹென்ரி. இத்தாலியின் கேனவரோவும், சுவீடனின் பிரட்டியும் மூன்றாம் இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

உலக சம்பியன் இத்தாலிக்கு அடி
யூரோ கால்பந்து தொடரின் முதல் 'ஷாக்'. தனது முதல் லீக் போட்டியில் உலக சம்பியன் இத்தாலி அணி, நெதர்லாந்திடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது. இப்போட்டியில் எளிதாக வெற்றி பெறலாம் என நினைத்த இத்தாலிக்கு, நெதர்லாந்து அணியினர் கடும் நெருக்கடி கொடுத்தனர். ஆட்டம் தொடங்கிய 12வது நிமிடத்தில் அந்த அணியின் ரூடு வான் நிஸ்டல்ரூய் முதல் கோல் அடித்தார். அடுத்து 26வது நிமிடத்தில் வெஸ்லே சினேஜ்டர் இந்த தொடரின் மிகச்சிறந்த கோலை அடித்தார். இதன்பிறகு இத்தாலி அணியினர் தீவிரமாக பதில் தாக்குதல் தொடுத்தனர். 31வது நிமிடத்தில் கிடைத்த அருமையான வாய்ப்பை கோட்டை விட்டனர். முதல் பாதியில் நல்ல முன்னிலையில் இருந்த நெதர்லாந்து அணி இரண்டாவது பாதியிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த 79வது நிமிடத்தில் ஜியோவன்னி வான் புரோங்க்ஹாஸ்ட் 20மீ தொலைவிலிருந்து அடித்த பந்து இத்தாலி கோல் கீப்பரை ஏமாற்றி உள்ளே சென்றது. இத்தாலி அணிக்கு நெதர்லாந்து கோல்கீப்பரின் அபாரமான தடுப்பாட்டம் தடைபோட்டது. இறுதியில் நெதர்லாந்து அணி 3 - 0 என்ற கணக்கில் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெற்றது. கடைசியாக நெதர்லாந்து 1978 இல் இத்தாலியை தோற்கடித்து பிபா உலக கோப்பை இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றிருந்தது.

டேவிட் 'ஹாட்ரிக்' - ஸ்பெயின் வெற்றி - ரஷ்யா பரிதாபம்
இன்ஸ்பிரக் - யூரோ கோப்பை கால்பந்து தொடரின் லீக் போட்டியில் டேவிட் வில்லா 'ஹாட்ரிக்' கோல் அடிக்க ஸ்பெயின் அணி, ரஷ்யாவை 4 - 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஆஸ்திரியாவில் உள்ள இன்ஸ்பிரக்கில் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் ஸ்பெயின், ரஷ்ய அணிகள் மோதின.

ஆட்டம் துவங்கிய முதல் நிமிடத்தில் இருந்து ஸ்பெயின் அணியின் தாக்குதல் ஆரம்பமானது. 20வது நிமிடத்தில் பெர்னாண்டோ டோரஸ் கொடுத்த அருமையான 'பாசை' பெற்ற டேவிட் வில்லா அப்படியே கோல் அடிக்க ஸ்பெயின ரசிகர்கள் உற்சாகமாயினர். இதற்கு பதிலடி கொடுக்க ரஷ்யா வீரர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. இவர்கள் வசம் பெரும்பாலான நேரம் பந்து இருந்த போதும், சரியான 'பினிஷிங்' இல்லாதால் வாய்ப்புகளை வீணாக்கினர்.

முதல் வீரர் - பின்னர் 44வது நிமிடத்தில் ஆன்டிரஸ் இனியஸ்டா துடிப்பாக பந்தை 'பாஸ்' செய்ய அதை அழகாக பெற்ற டேவிட் வில்லா இன்னொரு கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் ஸ்பெயின் 2 - 0 என்ற கணக்கில் அசைக்க முடியாத முன்னிலை பெற்றது. இரண்டாது பாதியிலும் டேவிட் வில்லாவின் ஆதிக்கம் தொடர்ந்தது. களத்தில் பம்பரமாக சுழன்று ஆடிய இவர் 75வது நிமிடத்தில் ஒரு சூப்பர் கோல் அடித்தார். இதன் மூலம் தொடர்ந்து மூன்று கோல் அடித்த இவர், இத்தொடரில் 'ஹாட்ரிக்' சாதனை படைக்கும் முதல் வீரர் என்ற பெருமை பெற்றார். 86வது நிமிடத்தில் ரோமன் பவ்லியுசென்கோ ஒரு கோல் அடித்து ரஷ்யாவுக்கு ஆறுதல் அளித்தார். ஆட்டம் முடியும் நேரத்தில் செஸ்க் பாப்ரிகாஸ் ஒரு கோல் அடிக்க, ஸ்பெயின் அணி 4 - 1 என்ற கணக்கில் அசத்தல் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக டேவிட்வில்லா தேர்வு செய்யப்பட்டார்.

வெளியேறியது சுவிற்சலாந்து
யூரோ கால்பந்து லீக் போட்டியில் துருக்கி அணி, சுவிற்சலாந்தை 2 - 1 என்ற கணக்கில் வீழ்த்தியது. இதன் மூலம் போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான சுவிற்சலாந்து அணி காலிறுதி வாய்ப்பை இழந்து பரிதாபமாக வெளியேறியது.

பசலில் நடந்த 2வது லீக்போட்டியில் 'ஏ' பிரிவை சேர்ந்த துருக்கி, சுவிற்சலாந்து அணிகள் மோதின. முதல் லீக் போட்டியில் இரு அணிகளும் தோல்வியை தழுவியதால், முதல் வெற்றியை பதிவு செய்ய முழு பலத்துடன் களமிறங்கின. ஆட்டம் தொடங்கிய 32வது நிமிடத்தில் சுவிற்சலாந்து அணியின் ககான் யாகின் முதல் கோல் அடித்து அணியை

எஸ். கணேஷ்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொறொன்ரோ நகரத்தின் முகம் மாறுகின்றது

வடஅமெரிக்காவில் 6வது பெரிய நகரமாகிய ரொறொன்ரோ, கனடாவில் மிகப்பெரிய நகரமாகும். ரொறொன்ரோவின் மக்கள் வளர்ச்சி வருடத்திற்கு 4% ஆகும்.

இந்நிலைமை தொடருமாயின் 2017 ஆம் ஆண்டில் உலகிலேயே ரொறொன்ரோ தான் ஆகக்கூடிய பலநாட்டு மக்கள் வாழும் நகரமாக மாறலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. 50% இற்கு மேற்பட்ட மக்கள் Visible Minority ஆகக்காணப்படுவார்கள். அத்துடன் 90 இற்கு மேற்பட்ட வித்தியாசமான இனக் குழுமங்கள் (Ethnic Background) வாழலாம். மக்கள் தொகை 5.5 மில்லியனாக இருக்கும். இன்றைய ரொறொன்ரோவின் சனத்தொகை 2.5 மில்லியனாகும்.

கனடாவில் ஆகக்கூடிய மக்களிற்கு தொழில் கொடுக்கும் இடமாக ரொறொன்ரோவே காணப்படுகின்றது. அதாவது கனடாவில் உள்ள மொத்த வேலை வாய்ப்புகளில் 6இல் ஒரு பகுதி (1/6) ரொறொன்ரோவிலேயே உள்ளது. கனடாவில் பொருளாதார மத்திய நகரமாகவும் பெரிய பங்குச்சந்தை உள்ள நகரமாகவும் காணப்படுகின்றது. வடஅமெரிக்காவில் மூன்றாவது இடத்தில் காணப்படுகின்றது. இந்தக்காரணங்களால் கனடாவிற்கு குடிபுகும் புதியவரவாளர்களில் 50% இற்கு மேற்பட்டவர்கள் தமது வாழ்விடமாக ரொறொன்ரோவைத் தெரிவு செய்கின்றார்கள். ரொறொன்ரோவில் வீட்டுச்சந்தையின் பெறுமதி சீரானதாக இருப்பதற்கு புதிய வரவாளர்களே முக்கிய காரணியாக கொள்ளலாம்.

புதிதாக வருபவர்களிற்கு இருப்பதற்கு இடம்தேவை. புதிதாக நிர்மாணம் செய்யும் அடுக்குமாடிக்கட்டிடங்களில் விலையில் மாற்றம் சீரானதாகக் காணப்படுவதற்கும் இதே காரணம் இருந்தபோதிலும் இந்த வருடம் ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் விற்கப்படும் புதிய அடுக்குமாடி அலகுகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது குறைந்தே காணப்படுகின்றது. இந்த நிலைமை அடுத்த வருடமும் காணப்படலாம்.

இருந்தபோதும், இப்பொழுது ரொறொன்ரோவின் 148 புதிதாக நிர்மாணம் செய்யும் கட்டிடங்களிற்குரிய கட்டிட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

ஜனவரி 2008 இலிருந்து மே 2008வரை விற்கப்பட்ட வீடுகள், அடுக்குமாடிக்கட்டிட அலகுகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட குறைவாக இருந்தபோதிலும் சராசரி விலை அதிகரித்தே காணப்படுகின்றது. இதற்கு அடமானக்கடனின் வட்டிவீதம் குறைவாகக் காணப்படுவதையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம். முதன்மை வட்டிவீதம் 4.75% ஆகக்காணப்படுவதாலும் நீண்ட கால கடன் திருப்பிக் கொடுக்கும் (40 Years Amortization) கடன்வசதியும் இதற்கு அனுகூலமாகக் காணப்படுகின்றது. அத்துடன் வட்டிமட்டுமான அடமானக்கடனும் காரணமாகலாம்.

கனடிய மத்திய வங்கி, கடந்த பல மாதங்களாக தொடர்ச்சியாக வட்டிவீதத்தை குறைத்து வந்தது. இருந்த போதிலும், கனடிய பணவீக்கத்தின் எதிர்பாராத அதிகரிப்பு ஜுன் 10, 2008 இல் கூடிய கனடிய மத்திய வங்கியின் குழு அங்கத்தவர்களின் முடிவின்படி, கனடிய வங்கியின் வட்டிவீதம் எதுவித மாற்றமும் இல்லாமல் விடப்பட்டுள்ளது. பொருளாதார எதிர்வு கூறுபவர்களின் கூற்று இம்முறை 100% பிழையாக்கப்பட்டுள்ளது. சகல பொருளாலர்களும் கால்வீதம் (1/4%) இறக்கம் எதிர்பார்க்கப்பட்டது. கனடிய மத்திய வங்கி ஆளுனர் மார்க் கார்ணியின் வித்தியாசமான முடிவாகவே இதனைக் கொள்ளப்படுகின்றது.

இதனால், அடுத்தவருடத்தில் ஒரு குறுகிய வட்டிவீத அதிகரிப்பை எதிர்பார்க்கலாம் எனவும் சில பொருளாதார ஆலோசகர்கள் எதிர்வு கூறத் தொடங்கியுள்ளார்கள்.

ரொறொன்ரோ நகரம்	2.50 மில்லியன் மக்கள்
ரொறொன்ரோ (GTA)	5.55 மில்லியன் மக்கள்
ஒன்ராரியோ மாகாணம்	12.70 மில்லியன் மக்கள

ரொறொன்ரோ பெரும்பாகம் = 2700 சதுரமைல்
(7000 சதுர கிலோமீற்றர்)

GTA = Toronto + York + Peel + Durham + Halton

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 276

ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில், 100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

*Independently owned & operated

Detached 3000 sqft. house for sale
- Attractive Neighbourhood
- Brimley / Steeles
- 5 bedroom + den, 2 kitchen
- Hardwood floor
- Price $529,900

Detached Condo. for sale
- Neilson & Mclevin
- 3 bedroom
- Hardwood floor
- Asking only $239,900

Condo. for sale
- Finch & Middlefield
- 2 + 1 bedrooms
- Low maintaince fee
- Fridge & Stove
- All Electric Light Fixture
- Only One year old
- 1 washroom
- washer & dryer
- B/I Dishwaswher
- parking
- Price $169, 900

Nantha Aiyadurai
Cell: 613 850 9931
COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
OTTAWA>>>><<<<GTA

நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைப் பாட்டு

ஆற்றங்கரை ஓரமாய் ஞானப்பழம் உண்டு
ஆதி அந்தம் கூறாமல்
மௌனமாக இருந்து, ஆமை, மீன்
முதலைகளுக்கும் உணவு ஊட்டுகின்றார்

வற்றாத நீரூற்று ஒன்று ஓடுகின்ற
வாய்க்காலின் கரையோர மணற்றிடலில்
வெயில் குளித்து உடல் காய்ச்சும்
முதலைகளின் முதுகின்மீது, ஆமைகள் உறங்கும்

நண்டு காதைக் கடிக்கும், வாலில் உட்கார்ந்து
மைனாவும் கரிக்குருவியும் வம்பளக்கும்
காட்டுக்கோழி கண்ணில் மண்ணைத் தூவும்
காகம் எச்சில்போட்டு ஓடும்

திருவிழா வெளிச்சத்தில்
சுழியோடி விளையாடும்
நீரின்மேல் தலையை மிதத்தி வாலை அசைக்கும்
அலங்காரம் பார்த்து இசையை ரசிக்கும்

மனிதர்கள் நீராடும் திடற்கரையை
எட்டியும் பார்க்காது,
இதுவரை
எவரையும் தீண்டாதது அந்தத் தெய்வம்.

முத்துராஜா

திருக்காலி

பண்: பழம்பஞ்சுரம்

ஒருவர் இருவரென உள்ளார் உருவம்
அருவம் அருவுருவ மாயும் - அருள்செய்யும்
வாலிறையே வந்தருளி மாதுறையாய் முன்பிருந்த
காலியிலே வீற்றிருந்தார் காண்.

மங்கை இடப்பாகம் கொண்ட மணவாளர்
கங்கை தலைவைத்தார் கண்ணுதலார் - திங்களையும்
கோலச் சடைமீது கொண்டுள்ளார் வந்தருளிக்
காலிக் கரையுள்ளார் காண்.

ஆதியிலார் அந்தமிலார் அண்டமெலாம் ஆண்டருள்வார்
காதலரின் நெஞ்சிற் கனிந்தெழுவார் - மேதினியில்
அன்புநெறி தான்தழைக்க ஆன்றபதி காலியிலே
இன்பமுற வீற்றிருந்தா ரே.

அறிவாலே காண முடியாதாம் ஆயின்
உறவான அன்பால் உணர - நிறைவாக
பண்டுமுதல் ஓங்கிப் பழுத்தபதி காலியிலே
கண்டுதொழ நின்றார் கனிந்து.

நம்ப முடியாத ஐவர் நடத்தைகளை
நம்பத் தகுந்தவுயர் நன்னெறியில் - தென்புடனே
ஆழ்த்தித் திருத்திடலாம் காலிநகர் ஆள்வாரை
வாழ்த்தி வணங்கி வரின்.

வீராதி வீரன் இலங்கா புரிவேந்தன்
ஆராத பத்திக் கடிபணிந்து - பேரார்
வரமளித்தார் தாமே வளமார்ந்த காலிக்
கரையெழுந்து தந்தார் கதி.

நிறையும் திருக்குணங்கள் நீங்கும் இருள்மலங்கள்
பிறவிப் பயனுணர்வும் பீடும் - அறிவும்
குறைவில் பொறையும் கொலுக்கொள்ளும் காலி
இறையை வணங்கி எழின்.

காதாரக் கேளாத கண்ணாரக் காணாத
ஆதார மானவரே ஆர்வலர்கள் - போதாலே
கண்டறியும் வண்ணம் கடல்தழுவும் காலியிலே
பண்டுமுதல் நின்றார் பரிந்து.

தூதுசெல்லும் மண்சுமக்கும் கூற்றுவனைத் தொட்டுதைக்கும்
வீதிவழி சென்று விறகுவிற்கும் - ஓதைக்
கடற்கலங்கள் கூடுகின்ற காலித் துறைமுகத்தில்
தடம்பதித்த பிஞ்ஞகனார் தாள்.

தெற்கிற் சிறந்தபதி காலித் திருவிடத்தில்
பொற்கை யுமையோடும் போந்தருளி - நிற்கின்ற
சுந்தரரே செந்தமிழர் சொந்தத் திருநாடு
வந்தொளிரத் தாரும் வரம்.

தென் இலங்கையின் தலையாய சிவத்தலமாக விளங்கும் இவ்வாலயம் 1850 வரை கதிர்வேலாயுதசுவாமி கோயிலாக இருந்திருக்கிறது. 1873ல் மேற்கொள்ளப்பெற்ற திருப்பணிகளால் இது சிவன் கோயிலாக மாற்றியமைக்கப்பட்டது.

இறைவர்: சுந்தரேசுவரர்.
இறைவி: மீனாட்சி.

கவிஞர் வி. கந்தவனம்

EURO - 2008!...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

முன்னிலை பெற செய்தார். துருக்கி அணி வீரர்கள் கோலடிக்கும் முயற்சியை சுவிற்சலாந்து வீரர்கள் தகர்த்தனர். இதனால் முதல் பாதியில் சுவிற்சலாந்து 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தர்.

இரண்டாவது பாதியில் அருமையாக ஆடிய துருக்கி வீரர் செமிக் சென்துர்க் முதல் கோலடித்து 1 - 1 என்ற கணக்கில் சமன் செய்தார். மழை பெய்த போதும் வீரர்கள் தங்களது ஆட்டத்தை தொடர்ந்தனர். ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் துருக்கி வீரர் அர்டாதுரான் மற்றொரு கோலடிக்க 2 - 1 என்ற கணக்கில் முதல் வெற்றியை பதிவு செய்தது.

யாருக்கு காலிறுதி வாய்ப்பு? தொடர்ந்து இரண்டு வெற்றிகளை பெற்ற போர்த்துக்கல் அணி, 'ஏ' பிரிவு புள்ளி பட்டியலில் முதலிடம் பிடித்து காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதிக்கான மற்றொரு இடத்துக்கு செக்குடியரசு மற்றும் துருக்கி அணிகளுக்கிடையில் கடும் போட்டி நிலவி வருகிறது. இந்த இரு அணிகளுக்கிடையில் வரும் 15ஆம் திகதி ஜெனிவாவில் நடக்கும் 3வது லீக் போட்டியில் வெற்றி பெறும் அணி காலிறுதிக்கு தகுதி பெறும்.

சுவிற்சலாந்து பரிதாபம் - போட்டியை நடத்தும் அணிகளில் ஒன்றான சுவிற்சலாந்து, முதல் இரண்டு லீக் போட்டியில் தோல்வியடைந்து காலிறுதிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது. போட்டியை நடத்தும் அணி, லீக் சுற்றிலேயே வெளியேறுவது 2வது முறையாக அரங்கேறியுள்ளது.

ஜேர்மனி அதிர்ச்சி தோல்வி

யூரோ கோப்பை தொடரில் மிகப் பெரும் 'ஷாக்' நேற்றைய லீக் போட்டியில் மூன்றுமுறை சாம்பியன் ஜேர்மனி அணி, குரோஷியாவிடம் 1 - 2 என்ற கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தது. இதன் மூலம் காலிறுதிக்கு குரோஷியா முன்னேறுவது கிட்டதட்ட உறுதியாகி விட்டது.

ஐரோப்பிய அணிகள் மோதும் யூரோ கோப்பைக்கான கால்பந்து தொடர் சுவிற்சலாந்து, ஆஸ்திரியாவில் நடக்கிறது. நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் ஜேர்மனி, குரோஷிய அணிகள் மோதின. இம்முறை ஜேர்மனி வீரர்ககளின் ஆட்டம் படுமந்தமாக இருந்தது. அதே நேரத்தில் குரோஷிய வீரர்கள் துடிப்பாக ஆடி ஆச்சரியம் அளித்தனர். ஆட்டத்தின் 24வது நிமிடத்தில் பிரான்ஜிக் கொடுத்த 'பாசை' பெற்ற, டாரியோ செர்னா அருமையான கோல் அடித்தார்.

இதையடுத்து குரோஷியா 1 - 0 என்ற முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடி கொடுக்க அணித்தலைவர் மைக்கேல் பாலக், பொடடோல்ஸ்கி, மிரோஸ்லோவ் குளோர்ஸ் போன்ற நட்சத்திர வீரர்கள் அடங்கிய ஜேர்மனி படை கடுமையாக போராடியது. ஆனாலும் குரோஷிய தற்காப்பு பகுதியை தகர்க்க முடியவில்லை. முதல் பாதியில் குரோஷியா 1 - 0 என்ற முன்னிலையில் இருந்தது.

லேமன் ஏமாற்றம் - இரண்டாவது பாதியிலும் ஜேர்மனி வீரர்களின் ஆட்டத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை. 62வது நிமிடத்தில் ஜேர்மனி கோல் கீப்பர் ஜென்ஸ் லேமன் திணற, பந்து 'கோல் போஸ்டில்' பட்டு திரும்பியது. அதை அப்படியே இவிகா ஒலிக் திருப்பி அடிக்க..... குரோஷியா 2 - 0 என்ற முன்னிலை பெற்றது. 79வது நிமிடத்தில் பொடோல்ஸ்கி ஒரு கோல் அடித்து ஜேர்மனிக்கு ஆறுதல் தந்தார்.

RED கார்டு - ஆட்டம் முடியும் நேரத்தில் ஜேர்மனியின் ஸ்கிவன்ஸ்டிகர், குரோஷியாவின் லீகோவை ஆக்ரோஷமாக பிடித்து தள்ளினார். இதை பார்த்த நடுவர், ஸ்கிவன்ஸ்டிகருக்கு 'ரெட் கார்டு' காட்டி வெளியேறினார். இறுதியில் குரோஷிய அணி 2 - 1 என்ற கணக்கில் வென்றது. இரண்டு வெற்றிகளுடன் 6 புள்ளிகள் பெற்ற குரோஷியா காலிறுதிக்கு முன்னேறுகிறது.

ஜுன் 29ஆம்திகதி இறுதியாட்டம் நடைபெறுகிறது. மேலும் மேலதிக EURO கிண்ண தகவல்களுடன் அடுத்த இதழில் பார்ப்போம்.

iafs

INDEPENDENT ART FILM SOCIETY

சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

ஒக்ரோபர் 18, 2008

சிறந்த திரைப்படைப்புக்களுக்கான பரிசுகள்
முதற் பரிசு 500 கனடிய டொலர்கள்.
இரண்டாம் பரிசு 300 கனடிய டொலர்கள்
மூன்றாம் பரிசு 200 கனடிய டொலர்கள்

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 25 ஆம் நாள் (SEPTEMBER 25, 2008)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director
IAFS
1345 Morningside Ave. Unit #8, Toronto, ON M1B 5K3

- மேலதிக தொடர்புகளுக்கு: 416-450-6833 / 416-804-3443
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பொதுசன நூலகம் - ஒரு வரலாற்று நோக்கு

ஆக்கம்: செல்வராஜா

நூலகவியலாளர், லண்டன்

ஈழத்தமிழர்களின் வாழ்வில் இன்று ஒரு மிக முக்கியமான நாள். 27 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் கலாசார அறிவியல் மையங்களில் ஒன்றாக நிமிர்ந்து நின்ற யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட அவலம் நடந்தேறிய நாள். யாழ்ப்பாண நூலகத்தோடு சேர்த்து தமிழரின் பிரதான பத்திரிகையாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தகொண்டிருந்த ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தக சாலை ஆகிய மற்றும் இரு அறிவு மூலங்களும் சேர்த்தே திட்டமிட்டு எரித்து அழிக்கப்பட்டன. 1981ம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் நள்ளிரவின் பின்னர் இலங்கை அரசின் கைக்கூலிகளான காடையர்களாலும், பாதுகாப்புப் படையினராலும் இந்தப் படுபாதகச்செயல் இருளின் பாதுகாப்புடன் செய்து முடிக்கப்பட்டது. ஈழத்தமிழர்களால் மட்டுமல்ல, உலகளாவ-ிய ரீதியில் அறிவுசார் சமூகங்கள் எதனாலும் மன்னித்து ஒதுக்கிவிட முடியாததொரு படுபாதக நிகழ்வு அது.

நூல்களை எரிப்பதும், நூலகங்களை எரிப்பதும், அறிவுஜீவிகளை அழிப்பதும், தமக்குப் பாதகமானதெனக் கருதும் மாற்றுக் கருத்தை இல்லாமல் செய்வதற்கான வழி முறைகளாக அதிகார வர்க்கங்களினால் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

உலக வரலாற்றை நாங்கள் பின்நோக்கிப் பார்த்தோமானால், மடாலயங்களில் சேகரித்து வைக்கப்பெற்ற நூல்களை எதிரிகள் அழித்தார்கள், அலெக்சாந்திரியா நூலகத்தை நிர்மூலமாக்கினார்கள் என்பதெல்லாம் அங்கு வரலாறாகப் படிந்துவிட்டன. பப்பைரஸ் என்னும் பத்திரிகைத்தாளின் முன்னோடியான நாணல் புல்வகையை உலகம் அறிந்திராத அந்நாளில் இருந்த நூல் ஒரு பிரதியோ, ஒருசில பிரதிகளோ ஏடுகளிலும், களிமண் தகடுகளிலும் எழுதப்பட்டுப் பேணப்பட்டு வந்திருந்தன. சொற்ப பிரதிகளே உலகில் இருக்கக்கூடிய ஒரு நிலையில், அவற்றை அழிப்பதன் மூலம் அதிகார வர்க்கம் அதிலிருந்த கருத்துக்களை குழி தோண்டிப் புதைப்பதில் ஓரளவு வெற்றி கண்டிருக்கலாம். அன்று மட்டுமல்ல இன்றும்கூட அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிற்காலத்திலும் - பல்லாயிரம் பிரதிகள் ஒரு நூலில் உருவாக்கப்படும் இன்றைய காலத்தில் கூட இந்த அழிவுத் தேட்டங்களை எரியூட்டியழிக்கும் நடைமுறையைக் கைக் கொள்வதினால் எதைச்சாதித்து விட்டார்கள் என்று தெரியவில்லை.

கி.மு. 213இல் புராதன சீனாவின் சக்கரவர்த்தி ஹுவாங் டி Shih Huang-ti. இருந்தார். ஒருங்கிணைக்கப்பட்ட பெருஞ்சீனப் பேரரசின் முதலாவது மன்னராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டவர் இவர். இவர் தான் சீனப்பெருஞ்சுவரைக் கட்டுவிப்பதில் முன்னோடியாயிருந்தவர் என்பதும் வரலாறு. தனது ஆட்சிக்காலத்தில் தான் சீன வரலாறு எழுதப்படவேண்டும் என்ற பேராசை இவருக்கு. இந்தப் பேராசையை செயலுருவாக்கும் வகையில், நோக்கில் விவசாயம், விஞ்ஞானம் மற்றும் எதிர்வு கூறும் சாத்திர நூல்களைத் தவிர்ந்த அனைத்து நூல்களையும் சீனாவில் எங்கிருந்தாலும் எரித்துவிடும்படி உத்தரவிட்டிருந்தார். மாய மந்திரக்கலைகளின் பாலிருந்த இவரது அதீத ஈடுபாட்டுக்கு கன்பூசிய கொள்கையாளர்களினால் தெரிவிக்கப்பட்ட மாற்றுக் கருத்தும் இந்த முடிவுக்குக் காரணம் என வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். தடைசெய்யப்பட்ட நூல்கள் பற்றிக் கலந்துரையாடுவதே மரணதண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தியிருந்தார். இதன் மூலம் எதிர்பார்த்த நீடித்த ஆட்சி அவருக்குக் கிடைக்கவுமில்லை. பெருஞ்சீன வரலாறு திருத்தி எழுதப்படவுமில்லை. அதே வேளை சீன உளவியல் கருத்துக்கள் உலகப்புகழ்பெறத் தவறவுமில்லை.

மாறாக, கி.மு.206 இன் பின் அவரது ஆட்சியைக் கைப்பற்றிய பின்னைய ஆட்சியாளர்களால் சீன இலக்கியம் செழிக்கவைக்கப்பட்டது. ஆவணக்காப்பகங்கள் உருவாகின. பழைய வரலாறு பேண வழிகோலப்பட்டது. இதுவும் வரலாறு.

கிரேக்கத்தில் அலெக்சாந்திரியா நூலகம் கி.மு.283இல் பல்லாயிரம் ஆவணச் சேகரிப்புகளால் பெருமை பெற்றிருந்தன. ஏதென்சின் பலநூறு நாடகப்பிரதிகள் அங்கிருந்தன. அரிஸ்டாட்டிலின் சொந்தச் சேர்க்கைகள் கிரேக்க இலக்கியங்கள் அனைத்தும் பேணப்பட்டு வந்தன. நவீன பொது நூலகச் சிந்தனை இங்கு தான் முதலில் தோற்றம் பெற்றிருந்தது. எதிரிகளின் பல்வேறு படையெடுப்புக்களால் இவை எரித்துச் சேதமாக்கப்பட்ட போதும் கிரேக்க இலக்கியமோ அரிஸ்டாட்டிலின் தத்துவங்களோ இன்றுவரை மறைந்துவிடவில்லை.

தமிழகத்தில் சோழர் கால சாசன ஆவணங்களிலே அடிக்கடி இடம்பெறுகின்ற சரசுவதி பண்டாரகங்கள் என்பது அக்காலத்தில் இருந்த நூலகங்களே என்பது வரலாற்றாய்வாளர் கூற்று. இவை பின்னாளில் சரஸ்வதி மகாலயம் என்றும் குறிக்கப்பட்டு வந்துள்ளன. படையெடுப்புக்களால் தமிழகத்தின் நூலகங்கள் அழிந்த போதிலும் இங்கு பேணப்பட்டு வந்த தமிழ் இலக்கியங்கள், இந்து சமயத் திருமுறைகள் எவையும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு இன்றும் நிலை பெறுகின்றன.

ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலகட்டத்தில் மே 1933இல் இடம்பெற்ற நூல் எரிப்புக் கொண்டாட்டமும் எமக்கு வரலாற்றில் சீன மன்னன் Shih Huang-ti. யின் நடவடிக்கைகளையே நினைவூட்டுகின்றன. அன்று ஹிட்லரின் நாசி ஆதரவாளர்களால் நூல்கள் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டும் சேகரித்தும் எரிப்பதற்காகப் பொது இடமொன்றில் மலையாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த அறிவியல் மற்றும் வரலாற்று நூல்களின் முன்னால் நின்று அன்றைய நூல் எரிப்பு வைபவத்தை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி (எரித்து) வைத்துப் பேசும் போது ஜேர்மானிய கொள்கைத்திட்ட மந்திரி ஜோசப் கொயபெல்ஸ் (Joseph Goebbels) கூறிய வாசகங்கள் இவை.

"அடுத்த 1000 வருடங்களுக்கு ஜேர்மானிய வாழ்க்கை முறையே உலகெங்கும் விதந்து பேசப்படப் போகின்றது. இன்று கொழுந்து விட்டெரியப் போகும் இத்தீயின் சுவாலைகள் ஒரு பழைய சகாப்தத்தின் முடிவைத் தெரிவிப்பதுடன் புதிய சகாப்தத்தின் மலர்வுக்கும் ஒளியூட்டப் போகின்றது. வரலாறு திருத்தி எழுதப்படுகின்றது." இதுதான் ஜேர்மானிய கொள்கைத்திட்ட மந்திரி ஜோசப் கொயபெல்ஸ் (Joseph Goebbels) கூறிய வாசகங்கள்.

தமது அதிகார வலிமையைப் பயன்படுத்தியும் கூட, ஜேர்மனியர்களின் பழைய வரலாற்றை இந்த நூல்களின் எரிப்பினால் அவர்களால் துடைத்தெறிந்துவிட முடியவில்லை. மாறாக அந்த எரிப்பின் பின் எஞ்சிய சாம்பல் தான் அந்த மூடர்களின் முகங்களில் கரியாய் நிலைத்தது.

சமகால நிகழ்வுகளை நாம் பார்ப்போமானால், 1981இல் எமது தாயக மண்ணில் தமிழ் இன அழிப்பைத் திட்டமிட்டவர்கள், யாழ்ப்பாண நூலகத்தை எரித்தார்கள். ஈழநாடு பத்திரிகைக் கட்டிடத்தை எரித்தார்கள். அவர்கள் கண்டது என்ன? 27 வருடங்களாகியும் அந்த ரணம் மாறாத நிலையில் உலகளாவிய ரீதியில் யாழ்ப்பாண நூலகம் பேசப்படும் நிலை உருவாகியது. அந்த எரிப்பின் பின் ஈழ விடுதலைப்போராட்டம் பற்றிய தீவிரம் அதில் அது வரையில் அக்கறைப்படாத பல புத்திஜீவிகளையும் அரசியலுக்கு அப்பாலும் கவர்ந்தது. மேலும் பல்லாயிரம் விடுதலைப் போராளிகளை போராட்டம் உள்வாங்கியது. ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய செய்தியை, யாழ். நூலக எரிப்பு உலகின் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் சென்றது. அன்று அங்கிருந்த ஒரே ஒரு பத்திரிகை ஈழநாடு. ஏரியுண்டதன் பின் என்ன நடந்தது. எத்தனை பத்திரிகைகள் அங்கு முளைவிட்டன. இங்கு புகலிடம் வரை அவை படர்ந்துள்ளன. இது வரலாறு. இவை எல்லாம் 1981 மே 31ம் திகதி ஊரடங்கு நள்ளிரவ-ில் இலங்கை அரசின் காவலர்கள் உரசிய ஒரு தீக்குச்சியின் பலா-பலன்.

பொஸ்னியாவில் 1890இல் கட்டப்பெற்று 155 000 அரிய நூல்கள் உள்ளிட்ட ஒன்றரை மில்லியன் நூல்களைக் கொண்டிருந்த தேசிய, பல்கலைக்கழக நூலகங்களை சேர்பியர்கள் ஆகஸ்ட் 1992 இல் மூன்று நாட்களாக முயன்று எரித்தார்கள். விளைவு? உலக அரங்கில் பொஸ்னியாவுக்கான ஆதரவுக்கரம் நீட்டப்பட்டது. பல்வேறு நிறுவனங்கள் உலகெங்கிலும் இருந்து பொஸ்னிய ஆவணங்களைச் சேகரிக்கும் இயக்கத்தை ஸ்தாபித்தார்கள். அத்துடன் இலங்கை போலவே பொஸ்னிய-சேர்பிய தகராறும் உலக அரங்கில் வெளிச்சத்துக்கு வந்தது.

2000 மார்ச் 9ம் திகதி, கியுபாவின் நூலகங்களின் நண்பர்கள் என்ற அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கையில், ஸ்பெயின் அரசு கலாசார உதவித்திட்டத்தின் கீழ் கியுபா அரசுக்கென அன்பளிப்புச் செய்த நூற்றுக்கணக்கான நூல்கள் கொண்ட பொதிகள் எரிக்கப்பட்டு, புதைக்கப்பட்டு மறைக்கப்பட்டு விட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. கியுபாவின் மோசமான தணிக்கை விதிகளை அறிந்திராத வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் அனுப்பும் நல்லெண்ண உதவிகள் எதுவும் கியுபாவின் நூலகங்களை பெரும்பாலும் அடைவதே இல்லை என்பதை இந்த அமைப்புக்கள் அறிவதில்லை. இப்படி அழிக்கப்படும் நூல்களில் அரசியல் சித்தாந்தங்களையோ, சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களையோ பிரதி பலிக்காத சாதாரண அறிவியல் நூல்களும் சிறுவர் நூல்களும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சல்மான் ரூஷ்டிக்கு மரண தண்டனை விதித்ததும் ஈரானிய கொடு-மய்னிகளின் திட்டம் பலித்ததோ என்னவோ ரூஷ்டியின் நாவல்கள் உலக அரங்கில் விறுவிறுப்பாக விலை போயின. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியின் கதையாக முடிந்த வரலாறு இது மட்டுமல்ல.

ஜே.கே. ரோலிங் இன் சிறுவர் நாவலான ஹரிபொட்டர் (Harry Potter and the Sorcerer's Stone) 1999-2000 இல் சினிமாவாக்கப்பட்டு வெளிவந்ததும், சில கிறிஸ்தவர்கள் பாதிரியார் Jack D Brock என்பவரின் தலைமையில் நியு மெக்சிக்கோவின் கிறிஸ்தவ சமூக தேவாலயமான அலா மொகோர்டோ தேவாலயத்தில் திரண்டெழுந்தனர். அந்த நூல் மாந்திரீக மாயாஜாலங்களுக்கு எதிரான கிறிஸ்தவ இறையியலின் நம்பிக்கையை கேலிக்குள்ளாக்குகின்றதென்பது அவர்களது குற்றச்சாட்டு. இதன் வெளிப்பாடாக அந்த நூலின் பிரதிகளை ஆலயத்தின் உறுப்பினர்கள் எரித்து அழித்தார்கள். விளைவு ஜே.கே.ரோலிங்கை கண்டு கொள்ளாதவர்களெல்லாம் அவரது நூல்களைப்பற்றிய தேடலில் தம்மை ஈடுபடுத்தினர். விளைவு? வறுமையில் உழன்ற அவரை இன்று உலகின் பெரும் பணக்காரர்களின் வரிசையில் வரலாறு இடம்பெற வைத்துள்ளது.

நூல்களையோ நூலகங்களையோ தற்காலிகமாக புவியியல் வரையறைக்கும் அதிகார வரம்புக்கும் உள்ளே வைத்து அழிக்கலாம். ஆனால் நவீன ஊடக வளர்ச்சி மிக்க இந்நாளில் தொடர்ந்தும் எவ்வளவு காலத்துக்குத் தான் இத்தகைய அநாகரிக முறைகளை அதிகாரவர்க்கம் பின்பற்றப் போகின்றது? தாங்கள் விரும்பாத பக்கங்களை கிழித்தெடுத்து அழிப்பதன் மூலம் வரலாற்றை ஒரு சிலரின் பார்வையில் இருந்து சில காலங்களுக்கு அப்புறப்படுத்தலாம். அதுவே முழு உலகின் பார்வையையும் அந்தக் கிழிந்த பக்கங்களின்பால் பின்னர் தீவிரமாகச் செலுத்த உதவும் என்பதை அதிகார வர்க்கம் என்றுமே உணரப்போவதில்லை.

1981ம் ஆண்டு ஜுன் 1ம் திகதி ஸ்ரீலங்கா அரசின் அமைச்சர்களின் ஆதரவுடன் காடையர்களால் எமது யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயிட்டு அழிக்கப்பட்டது. நள்ளிரவில் கள்வர் போல வந்து எரித்துச் செல்லும் போது அன்றைய இலங்கை (ஜே ஆர்) அரசு அதை வெறும் கட்டிடத் தொகுதியாக மாத்திரம் காணவில்லை. யாழ்ப்பாணத்து மக்களின் இதயமாகவே அதைக் கண்டார்கள். அந்த இதயம் வெடித்துச் சிதறும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் சொந்தச் சாம்பலிலிருந்து பீனிக்ஸ் பறவை போலப் புது வேகத்துடன் உயிர்த்தெழுந்து சர்வதேசத்தின் கவனத்தையும் அது கவர்ந்து, அதன்மூலம் தன்னைச் சுற்றி ஒரு அரசியல் ஒளிவட்டத்தையும் ஏற்படுத்திக்கொண்டு உலகத்தின் பார்வைக் குவியமாக மாறிவிடும் என்பதனை அன்று ஒரு தீக்குச்சியை உரச ஆணையிடும் அந்தக் கணப்பொழுதில் அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

81இல் எரியூட்டப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாண மாநகரசபை நூலகம் என்ற வகையில் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசித்தவர்களின் பாவனைக்கானதொரு நூலகமாகவே அது இனம்காணப்பட்டிருந்தது. பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்தும், நூலகவாரங்கள், கொடித்தினங்கள் மற்றும் தினகரன் களியாட்ட விழாக்களின் வருமானங்களிலிருந்துமே இந்த நூலகம் வளர்த்தெடுக்கப்பட்டு வந்தது. நூலகம் வளர்ந்து கிளை பரப்பிட முனைந்த வேளையிலே முளையில் கருகியது.

நூலக அழிப்பின் நட்டஈடாக ஒருகோடி ரூபாய் யாழ். மாநகர-சபைக்கு இலங்கை அரசு வழங்க வேண்டும் என்று லயனல் பெர்னாண்டோவின் தலைமையில் அமைந்த விசாரணைக்குழுவினர் செய்த பரிந்துரைக்கும் ஜே.ஆர் அரசு இணங்கவில்லை. இந்நிலையில் எரிந்த நூலகத்தை உயிர்ப்பிக்க தமிழ்மக்கள் தாங்களாகவே தாயகத்திலும் உலகெங்கிலுமிருந்தும் நிதி திரட்டினர். 1984இல் எரிந்த நூலகம் மீளமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டது. இப்போது தான் யாழ். மாநகர எல்லைக்குள் உள்ளவர்களுக்கு மாத்திரம் என்றிருந்த நூலக அங்கத்துவக்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘சீற்’ பிடிப்போ - ஊர்ப்பிடிப்போ

அது ஒரு சனிக்கிழமை. பண்டத்தரிப்பு பெற்றார், ஆசிரியர் சங்கக் கூட்டம் பி.ப. 3.00 மணிக்குத் தொடங்கும். நடன ஆசிரியர் பத்மினி தையிட்டியிலிருந்து மிதிவண்டியில் நம் வீடுவந்து பின்னர் நாமிருவரும் காரில் செல்வதான ஏற்பாடு.

பருத்தித்துறையில் மரணச்சடங்கொன்றில் கலந்து கொள்ள இரு நண்பர்களுடன் கொழும்பிலிருந்து வந்த கணவருக்கு கார் தேவைப்படவே நாம் பேரூந்தில் புறப்பட்டோம். கீரிமலை பஸ் 769 வரவே இருவரும் ஏறினோம். வண்டியில் வேறொருவரும் இல்லை. சாரதியும் நடத்துனரும் ஏற்கனவே அறிமுகமானவர்களானபடியால் குசலம் விசாரித்துக் கொண்டே சாரதிக்குப் பின்னிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டோம்.

கல்லூரிக்கான நாட்டிய நாடகம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தமையால், அதுபற்றிய கலந்துரையாடலில் மூழ்கி இருந்தோம். உள்ளமெல்லாம் மந்தரமலை நடுவே நிற்கிறது. தேவர்கள் ஒரு பக்கமும் அசுரர்கள் மற்றபக்கமும் நிற்கிறார்கள். சதுஸ்ர நடையிலா திஸ்ர நடையிலா பாட்டுக் கட்டுவதும் ஐதி போடுவதும் அவதானத்தை மெல்லமெல்லப் போட நான் ‘ஹம்’

பண்ணிப்பண்ணி சொற்கட்டும் ஐதிக்கட்டும் போட்டுப் பார்க்கிறோம்.

திடீரென பஸ் சாரதி ஏதோ சொல்லி எங்கள் கவனத்தை ஈர்க்கிறார். கண்ணாடியூடே பார்க்க, அவர் தலையால் சைகை காட்டுகிறார். திரும்பிப் பார்க்கிறோம். இரண்டு பிக்குமார் எமக்கு நெருக்கமாக எம்மைப் பார்த்தபடி நிற்கிறார்கள். ‘நாங்கள் இருக்க வேண்டும் எழும்புங்கோ’ என்பது போல அவர்கள் பார்வை சொல்லியது.

கீரிமலை ஏற்றத்தில் பஸ்போகிறது. இன்னும் 2, 3 நிமிடங்களுள் இறுதி நிலையத்தில் தரித்து விடும்.

என்னுள் படம் எடுக்கும் சீற்றம் முரண்டுகிறது. ‘பஸ்ஸில் எல்லா ஆசனங்களும் சும்மா தானே கிடக்குது. முத்திரை குத்தின ‘சீற்’றில் தான் இருக்க வேண்டுமோ எழும்பமாட்டம்.

சாரதி கண்ணாடியில் கண்களால் கெஞ்சுகிறார். பாவம்! தண்டனை மாற்றல் பெற்று பின்னடைவுப்பிரதேசம் போய் சமீபத்தில்தான் ஊரோடு வந்தவர். இவர்களுள் ஒரு பிக்கு சக்தி வாய்ந்தவர். ஆனபடியால் சாரதிக்கு வேலையே போய்விடக்கூடும்.

பத்மினி பயந்து போய் ‘வாங்கோ ரீச்சர்’ என்றவாறு எழுந்துவிட்டா.

எழுந்தோம், அவமானம், தன் ஊரிலேயே. அவமதிக்கப்பட்ட வேதனை. எமது கோட்டைக்குள் அந்நியன் புகுந்து எம்மை விரட்டவா?

‘அண்டைக்கு கருவாடு மாதிரி இருந்து கொண்டு எங்களுக்கு கூழைக்கும்பிடு போட்டவன். இண்டைக்கு வீங்குவீங்கென்று பூசணிக்காயாகிக் கண்ணை மறைச்சதிலை தான் எம்மைக் கண்ணுக்குத் தெரியவில்லை. ‘ஒண்டவந்த பிடாரி ஊர்பிடாரியை விரட்டிச்சு தாம்’ என்று ஏசிக்கொண்டே பின்வாசலடிக்குப் போனோம்.

காங்கேசன்துறை, முற்காலத்தே பெரிய துறைமுகமாக விளங்கியதாம். நாம் அறிய ஒரு நூறு வருட வரலாறு தான் நேரடி அனுபவம். சரக்கேற்றும் இறக்கும் தோணிகளும் சிறுகப்பல்களும் வந்து நின்று பறியல் நடத்தும் இடமாகத்தான் நமக்குத்தெரியும். ரேகுத்துரை எனும் வெள்ளைக்காரர்களின் மேற்பார்வையில் இயங்கிவந்தது.

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது, பிரித்தானிய அரசாங்கம் தமது காயம்பட்ட படைவீரரைக் கொண்டுவந்து இறக்குவதாம். பலாலியில் ஒருவிமான நிலையத்தையும், காங்கேசன்துறையில் கடலோரமாக ஐயனார் கோவிலடியிலிருந்து கதிரையாண்டவர் கோவில்வரை ஒரு வைத்தியசாலையையும் கட்டுவித்தனர். வைத்தியசாலையைக் கட்ட வந்த இந்தியச் சிப்பாய்கள் ஒரு சிறு கோவிலையும் கட்டினார். யுத்தம் முடிந்த பின்னர் இவை இரண்டும் இலங்கை அரசாங்கத்துக்கு கையளிக்கப்பட்டது.

சுதந்திரத்தோடு சிமெந்துத்தொழிற்சாலையும் வர, கிராமம் நகரமயமாகத் தொடங்கியது. ஒரு கிறிஸ்தவ ஆலயமும் ஒரு பௌத்த விகாரையும் வைத்தியசாலைவளவில் முளைத்தன. இந்தப் பிக்கு வந்த பின் நவீன முறையில் பௌத்த யாத்திரீகள் தங்கவென அறைகளோடு கூடிய நவீன மண்டபம் ஒன்றும் எழுந்து பூஞ்செடிகளால் நிரம்பியது. பலாலியிலும் மாதகலிலும் மாத்திரம் இராணுவ முகாம்கள் இருந்தன. அத்தோடு தெருவுக்கு மறுபக்கத்தே இருந்த கொல்லங்கலட்டி தமிழ்ப்பாடசாலை சிங்கள வித்தியாலயமாகி காவல்நிலையம், மதுபான அலுவலகம், காங்கேசன்துறை தொழிற்சாலை போன்ற இடங்களில் வேலைசெய்யும் சிங்கள இனத்தின் பிள்ளைகளுக்கு அறிவூட்டத் தொடங்கியது.

ஏதோ முற்போக்குவாதியென்றும், தேசீயம், தேசீய ஒருமைப்பாடு என்றும் பிதற்றிக் கொண்டிருந்த உற்சாகமான இளம் வயது. ‘நமக்கென்னப்பா நாடு நல்லாய் வருது, யாழ். நகரை விட நாம் தான் முன்னேறப் போகிறோம். விமான நிலையம், தொடரூந்து நிலையம், துறைமுகம், மூன்று தேவாலயங்கள் என்று சாதி, சமய, இன வேறுபாடற்ற ஒரு சமுதாயமாக சர்வதே அந்தஸ்து பெறப்போகிறது எனக் கர்வத்தோடு பிதற்றிக் கொண்டு திரிந்த காலம் அது.

இன்று செல்லடியில் சிக்கிப் போய்விட்ட எமது வீடொன்று மதுபான அலுவலக அதிகாரி வியனமே என்பவருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 1970க்களில், இந்த விகாரைக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட இந்த ஒல்லியான பிக்கு, தானம் பெறவென அந்தவீட்டுக்கு வருவார். நம்மைக் கண்டால் ஒஞ்சி ஒடுங்க நெளிந்து மெதுவாகச் சிரித்து போவா சொல்லுவார். நாமும் ஏதோ நம்ம தயவில் தான் அவரால் நடமாட முடிகிறது என்ற தற்பெருமையோடு பெரிதாகத் தலையாட்டி சொல்லுவோம்.

நான் ஏசியது அவனுக்குப் புரிந்திருக்கும். ஏனெனில் ஒரு ஆசிரியரிடம் தமிழ் கற்றவன்.

நாங்கள் இறங்கும் போது சாரதி சொன்னார். ஆஸ்பத்திரியடியில் தான் ஏறியவர். அந்தப் பிக்கு சொன்னாராம் ‘வாரும் பின்னுக்குப் போவம்’ என மற்றவர் அவரை நிற்பாட்டினாராம். ‘எனக்குத் தெரிந்த ஆசிரியர்கள்தான் இவர்கள்’ எனச் சொல்லி உள்ளே போக மற்றவர் உடுப்பில் பிடித்து இழுத்து’ அதற்காக எங்கள் உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது. ஆசிரியரோ? அப்ப அவைக்குத் தெரியவைக்க வேண்டும் என்றாராம்’

1977 இன் அனுபவமும் 1983 இல் நேரடி அனுபவமும் எனக்கு பகுத்தறியும் உணர்வை கொடுத்தது. ஆயினும் இன்னமும் அஹிம்சை என்றும் பேச்சுவார்த்தை என்றும் மனித நேயமென்றும் மாற்றுக் கருத்தென்றும் பெயர் சூட்டித் தங்கள் தனிப்பட்ட துவேசத்தை, முற்றுமுணர்ந்த மேதாவிகளாகக் காட்டிச் சீறுகிறவர்களைப் பார்த்து ‘ஐயோ பாவம்’ எனச்சொல்லத்தான் முடிகிறது.

எதுவோ, அவங்கள் ‘சீற்’ உரிமை மாத்திரமல்ல 1990 இல் அதாவது இருபது வருடத்துள் நம் ஊரையே பிடித்து விட்டார்கள். நாம் ‘சீற்’ உரிமை இழந்த மாதிரி ஊரையும் இழுந்து வெட்கம் கெட்டு ஓடிவந்து கனடாவில் ‘சீற்’ பிடித்திருக்கிறோம். அவங்களை விரட்டிவிட்டு வீட்டில் அடிவைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை எனும் நம்பிக்கையோடு வாழ்கிறோம்.

- குறமகள்-

Toronto District School Board

Ontario
Ministry of Education

Toronto Catholic District School Board

கனடாவாழ் தமிழர்களின் தாயகக் கல்வித் திறன்களுக்கு, கல்வி அமைச்சகம் நடத்தும்

Prior Learning Assessment & Recognition

PLAR- எனும் முன்னோடித் திட்டம்

கனடாவிற்கு புலம் பெயர்ந்த தமிழர்கள், தாயகத்தில் மேற்கொண்ட கல்வித் தகமைகளுக்கு கனேடிய அங்கீகாரத்தை பெற நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. கல்வி அமைச்சகம் தற்போது PLAR எனும் ஒரு பரீட்சார்த்த திட்டத்தை TDSB/ TCDSB மூலம், ரொறன்ரோ வாழ் 18 வயதிற்கு மேற்பட்ட புலம் பெயர்ந்த தமிழர்களது கல்வி பொது தராதரப் பரீட்சை (GCE O/L) அல்லது அதற்கு சமமான கல்விச் சான்றிதழ்களுக்கு, ஓர் நேர்காணலுடன் கூடிய எளிதான பரீட்சை ஒன்றை நடத்தி COSTI Immigration Services உதவியுடன் தமிழ் மொழிக்கு திறமைப் புள்ளிகளை வழங்க முன்வந்துள்ளார்கள். எனவே குறைந்த காலக்கெடுவில் உரிய அங்கீகாரத்தை பெற்று, உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு உதவும் வகையில் இத்திட்டம் அனைவரையும் பயனடையச் செய்யும்.

மேலதிக விபரங்களுக்கு. :-

COSTI Immigrant Services

S.RAMACHANDRAN 416 760 2183
samy_consulting@hotmail.com
3701 Danforth Ave., Toronto, ON M1N 2G2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தந்தை மிக சிறந்தவர்

என் தந்தை மிக சிறந்தவர் - பிள்ளைகள் தங்கள் வெவ்வேறு வயதில் தம் தந்தையை பற்றி.....

4 வயதில்
என் தந்தை மிக சிறந்தவர்.

6 வயதில்
என் தந்தைக்கு எல்லோரையும் தெரியும்.

12 வயதில்
என் தந்தை நான் சிறுவனாக இருக்கும் போது மிகவும் அன்பானவர்.

16 வயதில்
என் தந்தைக்கு இளமையான விடயங்கள் புரிவதில்லை.

18 வயதில்
என் தந்தை இப்பொழுது எல்லாம் எரிச்சல் ஊட்டுகிறார்.

20 வயதில்
அய்யோ! என் தந்தை இம்சை தாங்கவே முடியவில்லை, என் அம்மா எப்படி சமாளித்தார்களோ.

25 வயதில்
என் தந்தை எல்லாவற்றிற்கும் தடையாக இருக்கிறார்.

30 வயதில்
என் மகனை சமாளிக்கவே முடியவில்லை, நான் இந்த வயதில் என் தந்தைக்கு மிகவும் பயந்திருப்பேன்.

40 வயதில்
என் தந்தை என்னை மிகவும் ஒழுக்கத்துடன் வளர்த்தார். நானும் என் மகனை அப்படியே வளர்ப்பேன்.

50 வயதில்
என் தந்தை ஒவ்வொன்றும் பார்த்து திட்டமிட்டு எமக்காக செய்தார். அவர் மிகவும் வித்தியாசமானவர்.

60 வயதில்
என் தந்தை மிகச் சிறந்தவர்.

ஒரு தந்தையின் உண்மையான உணர்வுகளை புரிந்து கொள்ள ஒரு மகனுக்கு தேவைப்படும் நியாயமான காலம் 56 வருடங்கள்.

RAMAYANA

Youth Summer Program

Ages 8 – 15
July 7 – 11, 2008
9.00 – 12p.m.

Parent Open House & Registration

Scarborough Civic Centre, 150 Borough Drive
North-west corner of McCowan Road and Ellesmere Road

Saturday June 21, 2008 2 – 5 pm
For Information: Prof. Sudharshan Duraiyappah
416 – 554 7564, sudharsh@rom.on.ca

KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS ASSOCIATION (CANADA)
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் (கனடா)

வருடாந்தப் போட்டிகள் -2008

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடாத்தும் வருடாந்தப் போட்டிகள்.
இடம்: St. Stephen's Pressbyterian Church
3817 Lawrence Ave.East
Scarborough,Ontario, M1G 1R2

காலம்: ஜூலை 05, 2008 - சனிக்கிழமை - காலை 8:30 மணி
போட்டியில் பங்குபற்றுபவர்கள் அரை மணி நேரத்திற்கு முன்பாக தமது பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும்.

"ஆங்கிலம் சொல்வது எழுதுதல், கணிதம்" ஆகிய போட்டிகள் தவிர்ந்த ஏனைய போட்டிகளுக்கான வயதெல்லை 6, 9, 12, 15, 20 வயதிற்குட்பட்டோர் பிரிவுகளாக ஒழுங்கமைத்து நடாத்தப்படும்.

ஒரு போட்டிக்கான கட்டணம் ஐந்து ($5) டொலர்கள். மூன்றும், மூன்றுக்கு மேல் போட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் 15 டொலர்கள் மட்டும் செலுத்தினால் போதும்.

ஆங்கிலம் சொல்வது எழுதுதல், கணிதம் (ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.) இப்போட்டிகள் 3, 4, 5, 6, 7, 8, 9ம் தர (Grade) மாணவர் மத்தியில் இடம் பெறும். 2007/2008 கல்வியாண்டில் போட்டியாளர்கள் எவ்வகுப்பில் கல்வி கற்றிருந்தார்களோ அவ்வகுப்புக்குரிய கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

இப் போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் கட்டணம் ஐந்து டொலர்கள் ($5) தனித்தனியாக செலுத்த வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி ஜூலை 02, 2008

போட்டிகளுக்குரிய நேர அட்டவணை

நேரம்	போட்டிகள்
காலை 9:00 மணி	கணிதம் (சகல பிரிவுகளுக்கும்)
காலை 9:00 மணி	சகல போட்டிகளும் (6 வயதுக்குட்பட்டோர், 20 வயதுக்குட்பட்டோர்)
காலை 11:00 மணி	சகல போட்டிகளும் (9 வயதுக்குட்பட்டோர், 12 வயதுக்குட்பட்டோர்)
காலை 12:00 மணி	ஆங்கிலம் (சகல பிரிவுகளுக்கும்)
பி.பகல் 1:00 மணி	சகல போட்டிகளும் (15 வயதுக்குட்பட்டோர்)

குறிப்பு:-
பரீட்சை மண்டபத்தில் மதிபபோசன உணவைப் பெற்றுக்கொள்ளலாம். உணவுப் பொதி ஒன்று **$2.99**. முற்கூட்டிய பதிவுகளுக்கு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்பவும்.

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும்:-

(905)472-4194 C.சண்முகநாதன் (416)318-6195 திரு. P.ரவிச்சந்திரன்
(416)431-1060 திருமதி.க.சுப்பிரமணியம் (416)283-5265 திருமதி ஜெயா பரராஜசிங்கம்
(416)321-5522 திரு. நா. பாலகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். இந்துக் கல்லூரி - ஹாட்லி கல்லூரி இணைந்து நடத்தும் வெளிகள ஒன்று கூடல்

யாழ். இந்துக் கல்லூரி கனடா சங்கமும், ஹாட்லி கல்லூரி கனடா சங்கமும் இணைந்து நடத்தும் மாபெரும் வெளிகள ஒன்று கூடல் விழா எதிர்வரும் யூலை 01 ஆம் திகதி (கனேடிய தேசிய தினம்) வெகுவிமரிசையாக Sunny Brook Park (Leslie & Eglinton) இல் கொண்டாடப்படுகின்றது. இருகல்லூரி சங்கங்களும் இணைந்து வருடா வருடம் நடைபெறும் கிரிக்கெட் ஆட்டமும் (Big Match), பெரியவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகளும், சிறுவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டிகளும், பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகளும் வேடிக்கை, விநோத நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற இருக்கின்றது. அத்துடன் அனைவருக்கும் எம்தாயக உணவுகளும் பரிமாறப்படவுள்ளன. இவ்விரண்டு கல்லூரியின் பழைய மாணவர்கள் அவர்சார் குடும்பங்களையும், இவ்விரு கல்லூரி நலன் விரும்பிகளையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நன்றி

தொடர்புகட்கு - 416.574.6685 / 416.877.8409

மூதறிஞர் கந்தமுருகேசனார் கனடாத் தமிழ்ப் பண்பாட்டு இணையம் மகிழ்வோடு வழங்கும்

கந்தமுருகேசனார் விழா

காலம் : ஆடவைத்திங்கள் 17 ஆம் நாள் 2039 திங்கட்கிழமை (June 30th, 2008)
நேரம் : மாலை 5:00 மணி
இடம்: York Wood Library Theatre. 1785 Finch Ave West, North York, ON
(On Finch between Jane and Keele)

புலம்பெயர்ந்த மண்ணில் பிறந்து, தமிழைத் தாய்மொழியாகப் பேசும் எமது இளம் தலைமுறையினரின் படைப்புக்களை படைக்கின்ற விழா. தமிழ்ப்பண், கனடாப்பண், அக வணக்கம், சிற்றுரை, தமிழ்ப்பா, தமிழ்ப்பாடல், பொதுமறை வழங்கல், நகைச்சுவை, திரைஇசைஆடல், தனிநடிப்பு, விடுதலைப் பாடலக்கு ஆடல், தென்றல் இசைக்குழு, இன்னும் பல்சுவை நிகழ்ச்சிகளோடு கந்தமுருகேசனார் விழா.

WinCom Training's

COMPUTER TRAINING AND BOOKS

- ***Computer Basic (Introduction to Computers)***
- ***Introduction to Microsoft Office 2003***
- ***Advanced Microsoft Office 2003 / 2007***
- ***Accounting Applications: Accounting / AccPac / QuickBook***
- ***Excel Express For Intense Learning only for $5***

For more information - call us at ***647-895-4323*** or at ***416-462-4323***
WWW.WINCOMTRAINING.COM

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

SMILE

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்

Beach Summer Cottage Brick House 40 Acre Farm $300,000 HWY 48 (Markham Rd.)	**Senior Future Home Milton 5 Acre with Hobby Farm $380,000**
Investment Bungalow House with big lot Scarborough Area $275,000	**Mechanic Shop / House Scarborough Area House + Business**
Big land lots Bangalow 3 bedroom House Airport / Brampton Mississauga $250 - 300,000	**Sell Your House No Co-Op Broker 1% Commission**

வீடும் வியாபாரமும் *Business Zoning*

Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham *(Sales Rep)*

416.230.7820 / 905.696.7310

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z From $599.00

In Classes

365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Fork Lift licence From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: ***Pl. Call: Raja / Shan***

416.913.9574/416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கலும் ஒதுங்கலும்

ஓடும் நீர் உறைவதில்லை 63

நமது வாழ்க்கையானது பல்வேறு படிமுறைகளூடாக முன் நகர்த்தப்படுகின்றது. குழந்தைப்பருவத்தில் இருந்து முதுமைப்பருவம் வரை பல்வேறு கதாபாத்திரங்களை நாம் கையாளுகின்றோம். மாணவன் ஆசிரியன் தொழிலாளி, முதலாளி, கணவன், மனைவி என விரிந்து செல்லும் இந்தக் கதாபாத்திரங்களில் நமது நடவடிக்கைகள் மாறுபட்டதாக அமைகின்றன. இவ்வாறான பாத்திரங்களில் மிகவும் உன்னதமானதும் அதே நேரத்தில் அதிகளவு சவால்கள், சோதனைகள், வேதனைகள் என்பனவும் மகிழ்ச்சி, மனநிறைவு, பெருமிதம், புகழ் என்பவற்றை வழங்குவதுமான ஒரு கதாபாத்திரம் பற்றிய விளக்கமாகவே இந்தக் கட்டுரை அமைகின்றது.

நமது வாழ்க்கையானது உறவில் தொடங்கி உறவுடன் முடிவடைவதாகவே அமைகின்றது. இது ஒன்றும் புதிய விடயமல்லவே என உங்கள் புருவங்கள் உயர்வதும் எனக்குப் புரிகின்றது. நான் இங்கு குறிப்பிடும் உறவு என்பது குழந்தை என்ற உறவில் இருந்து உருவாகிய பெற்றோர் என்ற உறவுடன் முடிவடைவதைத் தான் இன்னும் சிறிது விளக்கமாகக் குறிப்பிடுவதாயின் பெற்றோர்களுக்குக் குழந்தையாகப் பிறந்து பின்னர் குழந்தைகளுக்குப் பெற்றோர்களாக மாறும் உறவைத்தான் இங்கு நான் குறிப்பிடுகின்றேன். இங்கு இந்த உறவானது மிகவும் விசித்திரமான முறையில் இடம்பெறுவதை நாம் சிறிது ஆழமாகப் பார்ப்பது அவசியம். ஏனெனில் இந்த பெற்றோருக்கு குழந்தை, குழந்தைக்குப் பெற்றோர் என்ற உறவுக்கான அத்திவாரமாக அமைவது இந்த இரு நிலைகளுக்கும் பாலமாக அமைகின்ற நட்புத்தான். அதாவது உறவு - நட்பு - உறவு என்பதாகவே இது அமைகின்றது.

நமது வாழ்வியலில் மிகவும் முக்கியமாகவும் அதே நேரத்தில் மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகவும் அமைகின்ற இந்த உறவு - நட்பு - உறவு எனும் ஒழுங்குமுறையே நமது வாழ்வின் சிறப்பையும் சிறப்பின்மையையும் தீர்மானிக்கின்றது என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியம். அதாவது உறவில் இருந்து விடுபடாமல் நட்புக்குள் நம்மை உள்வாங்கிப் பின்னர் புதியதொரு உறவை உருவாக்கும் ஒழுங்குமுறைதான் நமது வாழ்வியலின் தன்மையை வெளிப்படுத்து கின்றது. அதாவது நமது பெற்றோருக்குக் குழந்தை என்ற உறவின் தொடர்ச்சி தடைப்படாமல், கணவன் மனைவி என்ற நட்புக்குள் நம்மை உட்படுத்தி அதன் மூலம் நமது குழந்தைகளுக்குப் பெற்றோராகும் உறவு நிலையை உருவாக்கிவிடுகிறோம். இதனால் தான் நமது ஆரம்ப உறவு நிலையில் இருந்து புதிய உறவுக்கு நம்மை முன்னெடுத்துச் செல்வது நட்பாக மட்டுமே இருக்க முடியும் என்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயமாகும்.

இப்போது கணவன் - மனைவி என்பது உறவுமுறையல்ல என்பதும் அது புரிந்துணர்வுடன் ஒன்றிணைக்கப்பட்ட நட்புமுறை மட்டுமே என்பதும் தெட்டத்தெளிவாக உணரப்படவேண்டும். ஏனெனில் நட்பும் உறவும் ஒன்றல்ல. உறவுக்குப் பாசம் என்பது போல் நட்புக்குப் புரிந்துணர்வு அமைகின்றது. கணவன் - மனைவி என்பது உறவு அல்ல நட்பு மட்டுமே என்பது பற்றிப் பல கட்டுரைகளில் இதற்கு முன்னர் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். இந்த விளக்கம் ஒரு சிறப்பான குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதாகும். உறவானது அகற்றப்படவோ அல்லது முறிக்கப்படவோ முடியாதது. ஆனால் நட்பானது முறிக்கப்படலாம் அல்லது அகற்றப்படலாம். இன்னொருவகையில் கூறுவதாயின் நட்பு பகையாகலாம் அல்லது அற்றுப்போகலாம். ஆனால் உறவு மாறுவதில்லை. முன்னைய கணவன் (Ex- Husband), முன்மைய மனைவி (Ex - Wife), என்பது போல் முன்னைய தாய் (Ex- Mother), முன்னைய தந்தை (Ex Father), முன்னைய சகோதரன் (Ex -Brother), முன்னைய சகோதரி (Ex -Sister), முன்னைய மகன் (Ex - Son), முன்னைய மகள் (Ex-Daughter) என

KG Master-*kgmaster@rogers.com*

உறவு மாற்றப்படுவதில்லை.

பெற்றோருக்குக் குழந்தையாகவிருந்து குழந்தைக்குப் பெற்றோராகும் காலப்பகுதிக்குள் நாம் பல்வேறுபட்ட விடயங்களை முன்னெடுத்துச் செல்கிறோம். கல்வி, தொழில், சமூகசேலை, மதம், அரசியல் எனப்பலதுறை களில் நமது நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இக்காலப்பகுதியில் படிப்படியாகப் பல அனுபவங்களை நாம் சேகரித்துக் கொள்கிறோம். இந்தக் காலப்பகுதியில் தீர்மானங்களை மேற்கொள்வதிலும் நமது தெரிவுகளை மேற்கொள்வதிலும் ஒரு அவசரம் காணப்படுவதும் இயற்கையே. இந்தத் தெரிவுகளில் அதிகளவு நாட்டம் காட்டப்படும் தெரிவு வாழ்க்கைத்துணை பற்றிய தெரிவு ஆகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனது துணையைத் தெரிவு செய்வதில் அவசரம் இருப்பினும் அதன் மூலமாகப் பல அனுகூலங்க ளும், பிரதிகூலங்களும் இடம்பெறுவதும் தவிர்க்க முடியாததே. இருப்பினும் இவை அனைத்தும் நமது வாழ்வைப் புரிந்துணர்வு மூலம் முன்னெடுத்துச் செல்வதற்கு வழிசமைக் கின்றன என்பதே உலகியல் நியதியாகும்.

நமது வாழ்வில் நாம் பல்வேறு படிமுறைகளூடாக எம்மை முன்னெடுத்துச் சென்றாலும் அவற்றுள் அதிமுக்கியமானதும், சிறப்பானதும் அதே நேரத்தில் மிகவும் சவால் நிறைந்ததுமாக அமைவது குழந்தை வளர்ப்பேயாகும். இங்கு குழந்தை என்ற நிலையில் இருந்து குழந்தைக்குப் பெற்றோர் என்ற நிலைக்கு நாம் மாற்றப்பட வேண்டிய ஒரு அடிப்படைத் தேவைப்பாடும் பொறுப்பும் நமக்கு ஏற்படுகின்றது. பெற்றோர் என்ற நிலையை நாம் அடையும் வரை அதாவது குழந்தை பிறக்கும்வரை இடம்பெறும் நமது நடவடிக்கைகளில் பல ஒரு குழந்தைக்குப் பெற்றோரானதும் உடனடியாகத் தவிர்க்கப்பட வேண்டிய அல்லது மாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி இந்த மாற்றங்கள் குடும்பரீதியிலும் சமூகரீதியிலும் மிகவும் அவசியமானவையாகவும் அமைகின்றன.

துரதிஷ்டவசமாகப் பலர் பெற்ரோரானதும் தேவைப்படுகின்ற உடனடியான மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இந்த மாற்றங்கள் தனது சுயநலனுக்குத் தீங்கு விளைவிப்பதாகக் கருதுகிறார்கள். பெற்ரோராவதற்கு முன்னர் தமக்கு இருந்த சுதந்திரத்தை எதற்காக விட்டுக் கொடுக்க வேண்டும் என வாதிடுகிறார்கள். அதுமட்டுமன்றி தமது பெற்றோர்களின் அர்ப்பணிப்புகள் போல் தாங்களும் செய்யவேண்டியதில்லை எனக் கூறுகிறார்கள். இன்னும் சிலர் தமது பெற்றோர்களின் அர்ப்பணிப்பை குறைத்து மதிப்பிட்டுத் தனது முன்னேற்றத்திற்குத் தான் தான் முழுக்காரணம் என நியாயப்படுத்த முனைகிறார்கள்.

ஒரு ஆணும், பெண்ணும் கணவன் - மனைவி என்ற முறையில் இருந்து அப்பா - அம்மா என்ற நிலைக்கு மாறும்போது முக்கியமான அடிப்படைப் பொறுப்புக்களுக்கு உட்பட்டேயாக வேண்டும். ஒரு குழந்தையின் தெரிவாகப் பெற்றோர்களோ அல்லது பெற்றோர்களின் தெரிவாக, ஒரு குழந்தையோ இந்த உலகில் பிறப்பதில்லை. பெற்றோர் குழந்தை என்ற இணைப்பானது நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக அமைகின்றது. இதனால் தான் முற்றுமுழுதாக இந்தக் கொடையை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இங்கு பெற்றோராகிய நாம் நமது குழந்தையின் முழுமையான வாழ்வைச் சிறப்பிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் செயற்பட ஆரம்பிக்கின்றோம். இவ்வாறு செயற்பட ஆரம்பிக்கும்போது எம்முள் பல மாற்றங்கள் அவசியமாகின்றன என்பதை நாம் பெரும்பாலும் உணர்ந்து கொள்வதில்லை. இதற்கு அடிப்படையாக அமைவது சுயநலம் சார்ந்த எதிர்பார்ப்பாகும். அதாவது தனது உரிமைகளையும் சுகங்களையும் குழந்தைக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் இன்மையே இதற்குக் காரணமாகும். ஒப்பீட்டு ரீதியில் தாயை விடப்பல மடங்கு தந்தைமாரே இந்த மனநிலையைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதன் விளைவே குழந்தை வளர்ப்பில் தந்தைமார்களில் பெரும்பலானவர்கள் தமது பொறுப்பைச் சரிவர நிறைவேற்ற முடியாது தோல்வி கண்டுவிடுகிறார்கள்.

குழந்தைவளர்ப்பில் மிகவும் வேடிக்கையான விடயம் என்னவெனில் குழந்தைகள் குழந்தைகளாக இருக்கும்வரை பெற்றோர்களது பங்களிப்பும் உயர்வானதாக இருக்கும். குறிப்பாகத் தந்தையின் செயற்பாடுகள் குழந்தையின் ஆரம்பகாலங்களில் தாயின் அர்ப்பணிப்புகளுக்குச் சமமாக அமையக்கூடியவகையில் இடம்பெறும். ஆனால் படிப்படியாகக் குழந்தை வளர்ந்து வரும்போது அதன் செயற்பாடுகள், அதன் சுயவளர்ச்சிக்குத் தேவைப்படுகின்ற செயற்பாடுகள், பெற்றோர் களிடம் இருந்து அதிகளவு எதிர்பார்ப்புக்களை யும், பங்களிப்புகளையும் வேண்டி நிற்பது அவசியமே. அத்தகைய தேவைகளில் பெரும்பாலானவை பெற்றோரின் தனிப்பட்ட நலன்களுக்குத் தடையாக அமைவதும் தவிர்க்கமுடியாததே. ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் தமது குழந்தைகளின் அவசியமான தேவைகள் தமது நலனுக்கும் சுதந்திரத்துக்கும் தடையாக இருப்பதாகக் கருதி தமது பொப்பைத் தட்டிக்களித்து விடுகிறார்கள். இந்த நிலையே குழந்தைகளில் பெரும்பாலான வர்களுக்கு உளவியல் சார்ந்த தாக்கங்களை ஏற்படுத்துவதால் சிறந்த முறையில் தம்மை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவைப்படும் பக்க உதவியின்றிப் பலவழிகளில் தவறான தெரிவுகள் மூலம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். உண்மையில் பாதிப்படைந்துள்ள குழந்தைகளின் வாழ்வை மிக ஆழமாக நோக்கினால் அவர்கள் அந்த நிலையை அடைந்தமைக்குக் காரணம் அவர்களுக்கான சிறந்த வழிப்படுத்தல் கிடைக்கப் பெறாமையேயாகும். குறிப்பாக அவர்களது பெற்றோர்களின் முக்கியமான பங்களிப்புக்கள் தேவைப்பட்டபோதெல்லாம் அவை மறுக்கப்பட்டமையே அடிப்படையாக அமைந்துள்ளன.

ஒரு குழந்தையின் வளர்ச்சி காலப்பகுதியில் குறிப்பாக விடலைப்பருவகாலம் (Teen Age) பல்வேறு வகையான உடலியல் உளவியல் மாற்றங்களுக்கு உட்படும் போது அந்த மாற்றங்களில் இருந்து சரியானவற்றை தெரிந்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முற்றுமுழுதாகப் பெற்றோரின் ஒத்துழைப்புத் தேவைப்படுகின்றது. ஆனால் இந்தத் தேவைப்பாடானது குழந்தைகளால் கோரப்படுவதில்லை. ஆனால் அவை முற்றுமுழுதாகப் பெற்றோரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் பெற்றோர்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் குழந்தைகள் பேயாக மாறிவிட்டது போன்ற உணர்வுடன் நடந்து கொள்கிறார்கள். குழந்தைகளின் விடலைப்பருவம் மிக உற்சாகமானதும் அபாயகரமானதுமான பருவமாகும். அவர்களது தெரிவுகளும் முடிவுகளும் எந்த விதமான அடிப்படைகளையும் கொண்டிருப்பதில்லை. இதனால் பல சந்தர்ப்பங்களில் அதன் பாதக-மான விளைவுகள் எதிர்நோக்குவதும் தவிர்க்க முடியாததாகின்றது. ஆனால் வாழ்வியல் உண்மை என்னவெனில் இந்தக் காலப்பகுதியே ஒருவரது வாழ்க்கையின் சிறப்பையும் சிறப்பின்மையையும் தீர்மானிப்பதால் இவர்களுக்குப் பெற்றோர்களின் தன்னலமற்ற ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD	On TV
இலவச DVDக்கு அழையுங்கள்	Saturdays at 10:30 am
(416) 431-5000	Rogers Cable Channel - 20
1 877 707 3223	Bell Expressvu Channel - 219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டி மலை - ரயில் மெல்ல ஊரும் சிக்குபுக்கு!

தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 38

அற்புதமான மலைச்சாரல், பசுமையான தேயிலைத் தோட்டங்கள், பைன் மரங்கள், யூகலிப்டஸ் வாசனை, குகைப் பயணம், மேம்பாலங்கள், செங்குத்தான மலை, பாரம்பரிய நீராவி எஞ்சினின் சிக்குப்புக்கு சத்தம்... தண்டவாளத்தில் உறைந்த காலத்தின் நிழலாக ஊட்டி மலை ரயில் பயணம் நம்மை இயற்கையின் உச்சங்களுக்கே அழைத்துச் செல்கிறது. ரயிலில் செல்வதில் முக்கியமானது பயணம் மட்டுமே சேரும் இடம் அல்ல என நம்புவர்களுக்கான ரயில் பயணம் இதுதான். மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகமண்டலம் வரையிலான தொன்மையான மீட்டர்கேஜ் ரயில் பாதையில், நான்கைந்து பெட்டிகளையுடைய சின்னஞ்சிறு ரயிலில் மலையேறுவது கவித்துவமான அனுபவம்!

தென்னிந்தியாவின் பிரபலமான மலைப்பிரதேசமான உதகமண்டலம், கோயம்புத்தூரில் இருந்து எண்பத்தெட்டு கி.மீட்டர் தொலைவில் உள்ளது. கோயம்புத்தூரில் இருந்து உதகமண்டலம் செல்ல நல்ல சாலை வசதியும் வேகமாக செல்லும் அழகான பேருந்துகளும் உள்ளன. இருந்தும், ஊட்டிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மணிக்கு முப்பது கி.மீட்டர் வேகத்தில் நகரும் ஊட்டி மலை ரயிலையே தேர்ந்தெடுப்பதுக்கு காரணம் இந்த ரயில் பயணம் மட்டுமே.

விடியற்காலையில் துயிலெழும் வேளையில், கோயம்புத்தூரில் இருந்து கிளம்பி பேருந்தில் ஒரு மணிநேரம் பயணம் செய்தால் மேட்டுப்பாளையத்தை அடையலாம். அப்போது, கிளம்புவதற்கு இன்னும் சில நிமிடங்களே உள்ள நிலையில் மேட்டுப்பாளையம் - உதகமண்டலம் பயணிகள் ரயில், அங்கு நின்று கொண்டிருக்கும்.

இந்த ரயிலே ஒரு அழகு என்றால், அதில் நம்முடன் பயணம் செய்யும் பயணிகளின் கலவை வித்தியாசமான மற்றொரு அழகு. வெவ்வேறு நிலப்பகுதியைச் சேர்ந்தவர்கள் நம்முடன் பயணம் செய்ய பெட்டியில் இருப்பார்கள். வெளிநாட்டைச் சேர்ந்த இளம் தம்பதியினர், உள்ளூரில் வாழ்கின்ற மூன்று வயது குழந்தை கொண்ட கூட்டுக் குடும்பம், உடற்குறைபாடு கொண்ட மனைவியுடன் ஒரு அன்பான கணவர், சிங்கப்பூரைச் சேர்ந்த மருத்துவ மாணவன், பெங்களூருவில் இருந்து சில இளைஞர்கள், கோப்பன்ஹேகனில் இருந்து ஒரு ஆசிரியர் என பலர் தங்களது பயணப் பைகளுடன் இருப்பார்கள். சூரியன் இன்னும் எழுந்திருக்காத அந்த பனிப்பொழுதில் எல்லோருடைய முகமும் சிரித்தபடி பிரகாசமாக இருப்பது அடுத்த ஆச்சரியம். மேட்டுப்பாளையத்தில் புறப்படும் ரயில் அரைமணி நேர சிக்குபுக்குவுக்குப் பிறகு 3000 லிட்டர் பாய்லர் கொண்ட நீராவி இஞ்சினுக்கு தண்ணீர் நிரப்புவதற்காக முதலில் கல்லாறில் நிற்கும். கல்லாரில் இருந்து மீண்டும் பயணம் தொடங்கி, குன்னூரில் சென்று நிற்கும். இந்த பயணத்தில் வெலிஸ்டன், அரவன்காடு, கெட்டி, லவ்டேல் பகுதிகளைத் தாண்டும்போது சூரியன் மெல்ல தலையைத் தூக்குவது பேரழகு! ஆனாலும் காற்றில் குளிர் இன்னும் இருக்கும். குகைகள், மேம்பாலங்கள், தேயிலைத் தோட்டங்கள், யூகலிப்டஸின் வாசனைகள், பைன் மரங்கள் எனத் தொடரும் அந்தப் பயணம் ஒரு பேரனுபவம்! இப்போது, அழகான காட்சிகளை தொடர்ந்து பார்த்து வந்திருந்த சலிப்பில் தம்பதியினர் தங்களின் உலகிற்குத் திரும்பி இருப்பார்கள். இளைஞர்கள் தாளம் போட்டு பாடத் தொடங்கி இருப்பார்கள். ரயிலுக்குள் உற்சாகம் இப்படி கரைபுரண்டு ஓடும்போது, வெளியே ரயில் ஒரு போராட்டம் போலவே மெல்ல ஊர்ந்து செல்லும். குஹில்க்ரோவ், அடர்லி, ரன்னிமேட் போன்ற இடங்களில் நீர் நிரப்புவதற்காக நின்று குன்னூர் போய்ச் சேரும்போது 10.30 மணி ஆகியிருக்கும். குன்னூரில் நீராவி இஞ்ஜினை மாற்றுவதற்காக ரயில் கொஞ்ச நேரம் நிற்கும். நமக்கும் பசி வயிற்றைப் பிடுங்கத் தொடங்கி இருக்கும். குன்னூரில் சூடான போன்டா, இட்லி, வடைகள் கிடைக்கும். டீசல் எஞ்சிந்தான் குன்னூரிலிருந்து அடுத்தக்கட்ட பயணத்தைத் தொடரும். இந்த மலைப் பாதை ரயில் 16 குகைகளை கடந்து செல்கிறது. அதில் 208 வளைவுகள் உள்ளன. அவற்றில் சில மிக செங்குத்தானவை. கனமழை பெய்யும் அந்த பகுதியில், ரயில் பாதையில் 250 பாலங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றையும் கடந்து வண்டி, ஊட்டியை மதியம் பன்னிரெண்டு மணிக்கு அடையும். ஊட்டி சென்று இறங்கிய பிறகும், பயணத்தில் கண்டுகளித்த இயற்கை காட்சிகள் மற்றும் குகை பாதை அனுபவங்கள் இன்னும் நீங்காத பிரமிப்பாக உள்ளே இருப்பதுதான் ஆச்சரியமானது. ஊட்டியில் இறங்கிய பிறகும் தொடரும் அற்புதமான மழைச்சாரல் இந்த மலை ரயில் பயணத்துக்கு கூடுதல் அழகு சேர்க்கிறது. நீலகிரி மலை ரயில் என்று அழைக்கப்படும் இந்த ஊட்டி ரயில், மிக நீண்ட வரலாறும் பாரம்பரியமும் கொண்டது. 1854ம் ஆண்டு ஊட்டி மலையில் ரயில் பாதை அமைக்கும் திட்டம் முதன் முதலாக உருவாக்கப்பட்டது. ஆனால் மலைப்பகுதி மிகவும் கரடுமுரடாக இருந்ததால் இந்தப் பணி தாமதமடைந்தது. இதனால், குன்னூர் டால்பின்ஸ் நோஸ் காட்சி முனைக்கு செல்லும் சாலையில் உள்ள "லேடி கேனிங் சீட்" காட்சி முனையில் இருந்து மேட்டுப்பாளையம் வரை ரோப் ரயில் விட முடிவெடுக்கப்பட்டது. தொடர்ந்து "லேடி கேனிங் சீட்" பகுதியிலிருந்து குன்னூர் வழியாக ஊட்டிக்கு ரயில் இயக்கவும் திட்டமிடப்பட்டது. இத்திட்டம், இங்கிலாந்து பார்லிமென்டின் அனுமதிக்கு கொண்டு செல்லப்பட்டது. மேட்டுப்பாளையம் குன்னூர் மலைப்பாதையை அமைக்க ஆகும் செலவே இத்திட்டத்துக்கும் ஆகும் என மதிப்பிடப்பட்டது. அதனால் "ரோப்" ரயில் திட்டம் கைவிடப்பட்டது. இந்நிலையில், சுவிட்சர்லாந்து ரயில் திட்டங்களின் தலைவர் என்றழைக்கப்படும் "நிக்கோலஸ் ரீகன் பேக்" என்பவரை வரவழைத்து மலை ரயில் பாதை குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அவரது திட்டத்தின் படி, மேட்டுப்பாளையம் - குன்னூர் இடையேயான பல்சக்கரம் அமைக்கப்பட்டது. மேலும், அவரது முயற்சியால்தான் மலை ரயிலுக்கான இன்ஜினும் கொண்டு வரப்பட்டது. 1854ம் ஆண்டே திட்டமிடப்பட்டாலும், ரிக்கன்பாச் வருகைக்குப் பிறகு 1891ம் ஆண்டுதான் ரயில் பாதை அமைக்கும் பணி தொடங்கியது. அவர்தான் ஏற்றங்களில் ரயில் ஏறிச் செல்வதற்காக பற்சக்கரங்களைப் பொறுத்தும் அமைப்பைக் கொண்டு வந்தார். அதன்பிறகு 1896ம் ஆண்டு குறுகிய ரயில்பாதை தண்டவாளம் போடப்பட்டது. முதலில், அதாவது 1899ம் ஆண்டு முடிய மேட்டுப்பாளையம் முதல் குன்னூர் வரையில்தான் ரயில் பாதை அமைக்கப்பட்டது. அதன்பின்னர் 1908ம் ஆண்டு ஊட்டி வரை இந்த ரயில் பாதை நீட்டிக்கப்பட்டது. அந்த ஆண்டு முதல் மலை ரயில் போக்குவரத்து தொய்வின்றி தொடங்கி நடந்து வருகிறது.

வழிப்போக்கன்

உலகிலேயே இதுபோன்ற ரயில் சேவை ஓரிரு இடங்களில்தான் உள்ளன. பாரம்பரியமிக்க இந்த ஊட்டி மலை ரயில் போக்குவரத்து, உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அமைப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது. டார்ஜிலிங் - ஹிமாலயன் ரயில் பாதை, ஸ்திரியாவின் செம்மரிங் ரயில்வே ஆகிய இரண்டுக்குப் பிறகு மூன்றாவதாக உலக பாரம்பரிய தலத்தில் சேர்க்கப்பட்ட ரயில் பாதை இதுதான். "பல்வேறு சிறப்பம்சங்கள் மற்றும் தனித்துவத்துடன் நீலகிரி மலை ரயில் விளங்குகிறது. ரயில் என்ஜின்கள், ரயில் பெட்டிகள், ரயில் நிலையங்கள் என அனைத்துமே மிக சிறப்பாகவும், தனித்துவத்துடனும் உள்ளன. எனவே இந்த ரயிலுக்கு உலக பாரம்பரியச் சின்னம் என்ற அந்தஸ்தைத் தருவது மிகப் பொருத்தமானது" என்று தன் குறிப்பில் யுனெஸ்கோ அமைப்பு தெரிவித்துள்ளது. அதையடுத்து உலக சுற்றுலா வரைபடத்தில் ஊட்டி மலை ரயிலும் இடம் பெற்றது. ஆசியாவிலேயே செங்குத்தான ஏற்றத்தில் இங்கே பயணிகள் இங்கு பயணிக்கிறார்கள். இது கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் இருக்கிறது. "ஏணி ரயில்" என்று அழைக்கப்படுகிற "ல்டர்நேட் பைட்டிங் ஸிஸ்டம்" முறையில் ஓடக்கூடிய ஒரே ரயிலும் இதுதான்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முதல்தர முதலீட்டிற்கு இறுதியான வாய்ப்பு

உங்கள் வியாபாரத்தை சாதுர்யமாக மக்களிடம் எடுத்துக்காட்ட சிறந்த இடம் - மார்க்கற் ஈஸ்ற்

- சனசந்தடி நிறைந்த இடம்
  - Markham Road மற்றும் Steeles Ave. சந்திப்பில்
- முதல்தரமான நிர்மாணத்துறை நிறுவனம்
  - Parallax Group & Fieldgate commercial
- வாங்கக்கூடிய நியாய விலையிலான வியாபார நிலையங்கள்
  - அலுவலகங்கள், உணவகங்கள் மற்றும் கடைகளுக்குத் தகுதியான இடம்
- வியாபார வெற்றிக்கு பொருத்தமான இடம்
  - போதியளவு வாகனத்தரிப்பு இடங்கள், இலகுவாக அடையக்கூடிய இடம் மற்றும் அழகான வடிவமைப்பு

கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.
வியாபார நிலையங்கள் 2008 இலையுதிர் காலத்தில் பாவனைக்கு தயாராகி விடும். இறுதியான இச்சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

முதலீட்டின் வெற்றிக்கான Market East கட்டிடத்தொகுதி.

மேலதிக தொடர்புகளுக்கு: 416.321.6969

இதுபற்றிய முழுவிவரங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள். இந்த அருமையான சந்தர்ப்பத்திற்கு தேவையான ஒரு குறிப்பிடத்தக்க வியாபார நிலையங்களே இன்னும் உள்ளன. அவை விற்று முடிந்ததும் உங்களது இந்த வாய்ப்பும் நழுவி விடும். விரையுங்கள்.



Site Plan

MARKET EAST
@ Markham & Steeles

DEVELOPER
FIELDGATE COMMERCIAL

DEVELOPER
THE PARALLAX GROUP

EXCLUSIVE BROKERAGE
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc.
Brokers Protected

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீரும் போதும் இறை பூசனைக்கே

திருத்தியது

இம்மை, மறுமைப் பயன்களைப் பெறுதற்கு இம்மண்ணுலக மக்கள் யாகம் செய்தல், புனித நீராடல் (தீர்த்தயாத்திரை) யோகத்தில் இருத்தல், பூசனை செய்தல், தியானம் செய்தல் தவம் செய்தல் முதலிய தெய்வநலம் சார்ந்த செயல்களை மேற்கொள்கின்றனர். பூவும், நீரும் கொண்டு செய்யும் சிவபூசனைப் பயன் அளவிடற்கரியது என்று ஆகமங்களும் புராணங்களும் எடுத்துரைக்கின்றன. இச்சிவபூசனையை வானுலகத்தேவரும் மண்ணுலகம் வந்து செய்து பெரும் பேறு பெற்றுள்ளனர்.

'வானிடத் தேவரும் மண்மேல்வந்து
அரண்தனை அர்ச்சிப்பர்'
என்று சிவஞான போதம் செய்கின்றது. இச்சிவபூசனையை மண்ணவர் விண்ணவர் களுடன் பிற உயிரினங்களும் செய்து உள்ளன என்று தான்பாடிய திருபுன்கூர் பதிகத்துள் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார்.

இயக்கன் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீ, வளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானரர் நாகம்
வசுக்கள் வானவர், தானவர் எல்லாம்
அயர்ப்பு ஒன்று இன்றி நின் திருவடியதனை
அருச்சித்தார் பெறும் ஆரருள் கண்டு
திகைப்பு ஒன்று இன்றி நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழிய திருப்புன்கூர் உளானே.

பூவும் நீரும் கொண்டு செய்யும் சிவபூசனையின் சிறப்பினை 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று அப்பர் அடிகளாரும் 'யாவர்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை' என்று திருமூலரும்

நா.க.சிவராமலிங்கம்

கூறிப் போந்துள்ளமையால் அறியலாம்.

முப்போதும் திருமேனி தீண்டும் ஆதிசைவ அந்தணர் குலத்துதித்த அடியார்களும், வேறுபலரும் சிவபூசை செய்து பலன் பெற்றனர். இறைவன் தாம் விரும்பும் உண்மையாவது பூசனையாகும். இதனை பின்வரும் தேவாரம் உணர்த்துகின்றது.

எண்ணில் ஆகமம் இயம்பிய
இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை
என உரைத்தருள்
அண்ணலார் தமை அருச்சனை
புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லளாயின
பெருந்தவக் கொழுந்து

இதனை
அருந்தழல் மாமகம் புரிந்தும்
கடவுட் கங்கை ஆதியாம் புனல் படிந்தும்
அனில் யோகத் திருந்தும்
திருந்து மணிமலர் தூவி பூசை நேர்ந்தும்
எங்குமாகிய உன்னை இதயத்துள்ளே
திருத்த நிலை பெறக் கண்டும்
போகமெல்லாம் பெருக்கி அனைத்துயிர்க்கும்
செய்யவொண்ணாப் பெருந்தவங்கள் மிகப்பயின்று
என பாரதப் கூறுகின்றது.

ஆகமநெறி நின்று இளம் பருவத்தே முற்பிறப்பின் வாசனையால் பூசனை புரிந்த சண்டேஸ்வர நாயனாரின் சிவபூசைத்திறன் போற்றுதற்குரியது. சிவபூசை செய்த இவருக்கு, தன்னை தரிசித்து வழிபடும் அடியவர்க்கு பூசைப்பலன் அனைத்தையும் நல்கும் சண்டேஸ்வரர் பதத்தை இறைவன் நல்கியருளினார். சிவபூசைக்கு இடையூறு செய்த தமது தந்தையின் காலை துண்டித்ததையும் சண்டீசப்பதம் பெற்றதையும் திருப்பல்லாண்டு பின்வருமாறு கூறுகின்றது.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு
இவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோர் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளி
சோதி மணி முடித்தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதத்துக்கே பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் இதனை பின்வருமாறு கூறியுள்ளார்.

அண்டர் பிரானும் தொண்டர்
தமக்கு அதிபனாக்கி அனைத்தும் நாம்
உண்டகலமும் உடுப்பனவும்
ஆடுவனவும் உமக்காகச்
சண்டீசன் எனுமாம் பதம் தந்தோம் என்று
அங்கு அவர் பொற்றடமுடிக்குத்
துண்டமதி சேர் சடைக் கொன்றைமாலை
வாங்கிச் சூட்டினார்.

நாயன்மார்களில் காலத்தால் முற்பட்டவர்கள் சண்டேசப்பெருமானும் கண்ணப்பருமாவர். இவர்களும் ஏனைய அடியார்களும் சிவபூசையின் அவசியத்தை எமக்கு உணர்த்திப் போந்துள்ளனர். கோயில் தொண்டின் மேன்மையை நாவரசர் இவ்வாறு பாடுகின்றார். நெஞ்சுக்கு அறிவுறுத்தலாக இத்தேவாரம் அமைந்துள்ளது.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே
நீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும்மிட்டு
பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி
தலையாரைக் கும்பிட்டு கூத்துமாடி
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை எம் ஆதியென்றும்
ஆரூரா என்னென்றே அலறா நில்லே.

நா. க. சிவராமலிங்கம்

ஊட்டி மலை.....

14ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த ரயில் கீழ்நோக்கி சறுக்கிவிடாமல் இருக்கவும், ரயிலை மேல்நோக்கி இழுப்பதற்கும், மெதுவாக கீழே செலுத்துவதற்கும், இந்த நீராவி எஞ்சினுக்கு குறிப்பிட்ட அளவு செயல்திறன்தான் உள்ளது. அப்புறம் எப்படி தடுமாறாமல் ரயில் செல்கிறது? நீலகிரி நீராவி எஞ்சின், வழக்கமான மீட்டர் கேஜ் ரயில் பாதைக்கானது அல்ல. அது "எக்ஸ்" எனப்படும் சிறப்பு பிரிவாகும். தன் அடியில், கனமான பற்களையுடைய சக்கரம் அச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த பற்சக்கரம் "பினியன்" எனப்படுகிறது. இரண்டு தண்டவாளங்களுக்கிடையே பொருத்தப்பட்டுள்ள தொடர்ச்சியான நாடாவைப் போன்ற இரும்பு பிளேட்டில் இருசக்கரம் இறுக்கமாக பதிகிறது. இந்த தொடர் "பிளேட் ரேக்" எனப்படுகிறது. பாதை வளைவுகளிலும் ரயில் சீராகச் செல்வதற்கு ஏற்றவாறு இவ்விரண்டும் அமைக்கப்பட்டுள்ளன. நீராவி எஞ்சின் குன்னூரை நோக்கி செல்லும் பொழுது, ரயிலை இழுக்க முடியவில்லையென்றால் ரயில் உடனடியாக நின்றுவிடும்படி அமைக்கப்பட்டுள்ளது. இந்த எஞ்சின் ரயிலின் ஒரு புறத்தில் மாத்திரமே எப்பொழுதும் இருக்கும். அதாவது ரயில் மலையில் ஏறும் பொழுதும் எஞ்சின் மட்டும் மேட்டுப்பாளையத்தை நோக்கியே இருக்கும். ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் பிரேக்கை இயக்குவதற்காக ரயில்வே பணியா-ளர்கள் இருப்பார்கள். இதனால் ரயிலுக்கும், பயணிகளுக்கும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது.

மேட்டுப் பாளையத்தில் இருந்து ஊட்டி வரையிலான மலை ரயில் பாதையில் நீராவி எஞ்சினை அகற்றிவிட்டு மின்சார ரயில் எஞ்சினை இயக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. இதற்கு நீராவி எஞ்சின் நேசர்கள் எதிர்ப்பு தெரிவ-த்ததால் அம்முயற்சி கைவிடப்பட்டது. ஊட்டி மலை ரயில், தனது அன்றாட பயணத்தில் நீர் நிரப்புவதற்காக இடையில் நிற்கும். ஆனால் அது அந்த மலை ரயில் பயணத்தை ரசிப்பதற்கு தடையாக இல்லை. நீலகிரிக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளில் தொண்ணூறு சதவீதம் பேர் இந்த மலை ரயிலில்தான் பயணம் செய்கிறார்கள். "நீலகிரி மலையில் நீல நிறத்தில் ஊர்ந்து செல்லும் அந்த புகை வண்டியில் அமர்ந்து செல்லும் சுகமே தனி" என்கிறார்கள் அவர்கள். மலைகளின் ராணி என்று அழைக்கப்படும் ஊட்டியின் அழகுக்கு அழகூட்டும் ஒரு அம்சம் இந்த மலை ரயில். நீண்டு நெளிந்து கிடக்கும் மலைகளின் ஊடாக, ஜிகுஜிகுவென மெல்ல மெல்ல அசைந்து பேதகும் மலை ரயிலில் பயணம் செய்யாவிட்டால் ஊட்டி பயணம் நிச்சயமாக நிறைவு பெறாது.

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act–Bill 158 and full members of **ASHI** and **CAHPI**–Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On–Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பொதுசன நூலகம்....

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்டுப்பாடு, முழு யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் என விரிவுபடுத்தப்பட்டது.

தொடர்ந்த ஆயுதப் போராட்டச் சூழல் கோட்டை இராணுவத்தின் எறிகணைவீச்சு என்பன யாழ்ப்பாண நூலகத்தை யாழ் மக்கள் அணுகமுடியாத போர்நிலமாக்கியது. எறிகணைகளாலும், குண்டுகளாலும் துளையுண்டு சாம்பல்பூத்த அந்த நூலகக் கட்டிடம் ஈழத்தமிழரின் போராட்ட அவலத்தின் நினைவுச்சின்னமாக சர்வதேச ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டது. அதேவேளையில் வசதிக்குறைவாலும் நிதிப்பற்றாக்குறையினாலும் யாழ்ப்பாண நூலகத்தின் சேவைகளின் செயற்பாடுகளும் சிதறிக் கிளைநூலகங்களாக மாத்திரம் தமக்குள் சேவைகளைக் குறுக்கிக்கொள்ளும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. கல்விவளம் கவனிப்பாரற்று வரண்டுசெல்லத் தொடங்கியது. யாழ்ப்பாண நூலகத்தின் அடிநாதமான செயற்பாடுகள் மக்கள் மனதிலிருந்து வழுவி, யாழ்ப்பாணநூலகம் என்ற அரசியல் ஒளிவட்டம் பொருந்திய கட்டிடத்தின் உருவகமே மக்கள் மனதில் வியாபித்தது.

இந்நிலையில் 1995இல் வெண்தாமரை இயக்கம் தொடங்கப்பட்டவேளை 15 வருட கால ஆழ்நிலைத் தூக்கத்திலிருந்த இலங்கை (சந்திரிகா) அரசு திடீரென விழித்துக்கொண்டு புத்தகமும் செங்கல்லும் என்ற பதாதையுடனும் 80கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுடனும் குடை கொடி ஆலவட்டத்துடனும் பாழடைந்து நினைவுச்சின்னமாகக் கிடந்த யாழ்ப்பாணப் பொது நூலகக்கட்டிடத்தை மீளக்கட்டி எழுப்பித் தமிழர் நெஞ்சங்களைக் கவர 10.04.1997இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து முடிவு செய்தது.

அரசியல் மயப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் கட்டிடப் புனரமைப்பு ஆரம்பத்திட்டமிடலில் இருக்கும் போதே அரசு (பொதுஜன ஐக்கிய முன்னணி) அவசரமாக யாழ். கச்சேரிக்கு எதிரிலுள்ள வீடமைப்பு அதிகாரசபையின் மூன்றுமாடிக்கட்டிடத்தின் தரைத்தளம் மாத்திரம் திருத்தப்பட்டு 1998 தைப்பொங்கல் நாளில் திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் படிப்படியாக நூலகக் கட்டட வேலைகள் பிசுபிசுத்துப் போய் அதற்கென ஒதுக்கப்பட்ட நிதியெல்லாம் ஆங்காங்கே கசியவாரம்பித்தது. பின்னர் அரசு கைமாறியதும், யாழ். மக்களின் மனங்களை மீண்டும் வெல்ல, தேங்கியிருந்த திருத்த வேலைகள் மீண்டும் உத்வேகம் கொண்டது. யாழ்ப்பாண மாநகரசபையின் ஒரு சிறு பிரிவினரும் யாழ். மக்களும் அந்த நூலகத்தைப் புனரமைப்புச் செய்யாது அப்படியே நினைவுச்சின்னமாக வைத்திருந்து பாதுகாக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. நினைவுச்சின்னம் மக்கள் முன்னிலையிலேயே படிப்படியாகப் பூசிமெழுகப்பட்டது. கட்டட வேலைகள் மாநகர சபையின் கட்டிடப்பிரிவினரிடம் கையளிக்கப்படாது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் நேரடி மேற்பார்வையிலேயே அரச கட்டிடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு 120கோடி ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புனரமைப்புப் பணிகளின்போது யாழ்ப்பாண மாநகர சபையினர் வெறும் ஆலோசனை வழங்கும் மட்டத்திலேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். கட்டடம் முற்றாகக் கட்டி முடிக்கப்பட்டதும் யாழ்ப்பாண மாநகர சபையிடம் நூலகம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

இப்போது யாழ்ப்பாணப் பொது நூலகமும் லண்டன் பிக்பென் மணிக்கூண்டுக் கோபுரம் போல, பாரிஸ் ஐ.்.பெல் கோபுரம் போல, கனடாவின் சீஎன் கோபுரம் போல யாழ்ப்பாணத்தின் நினைவுச் சின்னமாகவே எங்களுக்குப் பழக்கமாகிவிட்டது.

அரசாங்கத்தினால் அழிவின் அடையாளமே தெரியாதபடி பூசிமெழுகி மறுசீரமைத்துத் தரப்பட்ட அந்தப் புதிய கட்டிடத்தின் முன் நின்று குடும்பம் குடும்பமாக பூரிப்புடனும் பெருமிதத்துடனும் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் புலம்பெயர்ந்தோர் கூட்டமும், அவர்களுக்குத் தீனிவழங்கும் வகையில் தபால் அட்டைகளாக (Picture Postcard) உயர்தரத்தில் நூலகக்கட்டிடத்தின் புகைப்படத்தை அச்சிட்டு விற்று வியாபாரம் செய்யும் வர்த்தகர் கூட்டமும், யாழ். நூலகத்தை காட்சிப்பொருளாக்கியே விட்டார்கள். இலங்கை, இந்திய நூல்வெளியீட்டாளர்களும் தத்தமது படைப்புக்களில் சம்பந்தா சம்பந்தமேயில்லாமல் யாழ். நூலகத்தை அட்டைப் படங்களாக்கித் தள்ளுகிறார்கள். இணையத்தளங்களும் தாமும் எதற்கும் சளைத்தவர்களல்ல என்றரீதியில் தமது இணையத்தள வரவேற்புப் பக்கங்களில் பனைமரத்திற்கு அடுத்தபடியாக யாழ்ப்பாண நூலகத்தை பதிந்து தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது யாழ்ப்பாண நூலகத்தின் எரிவின் வரலாற்றை பதிவாக்கி 'எரியும் நினைவுகள்' என்ற பெயரில் ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

அது சரி, எம்மவரின் மனதில் ஆழமாக இடம்பிடித்துக்கொண்ட இந்த அறிவின் ஊற்று இன்று மாநகரசபை நிர்வாகத்திள்குள் முடங்கி அடிப்படை மின்சார, தொலைபேசிப் பாவனைக்கான செலவினத்தைக்கூட ஈடுசெய்வதற்குத் திண்டாடுவதும், போதிய அளவில் பயிற்சி பெற்ற நூலக நிர்வாகிகள் இன்றித் தன் நாளாந்த சேவைகளையும் விரிவாக்க சேவைகளையும் முன்னெடுத்துச் செல்லவியலாத நிலையில் அல்லாடுவதும் எத்தனைபேரின் உள்ளங்களில் உறைத்திருக்கின்றன என்பது நாம் எம்மைக் கேட்டுக்கொள்ளவேண்டிய முக்கிய கேள்விகளுள் ஒன்றாகும்.

புலம்பெயர்ந்த தேசங்களில் செழித்தோங்கும் ஆலய நிர்வாகங்களிடம் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் அபிவிருத்திக்காக முன்னாள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் வே.இராமலிங்கம் அவர்களின் வேண்டுகோளின்பேரில் 2003இல் நிதியுதவிக்காக நெருங்கினோம். பயனில்லை. யாழ்ப்பாணப் பாடசாலைகளின் பழையமணவர் சங்கங்களை அணுகினோம். யாழ்ப்பாணப் பொது நூலகத்தைச் சுற்றியிருந்து அதன் பயனை அன்று அனுபவித்துவிட்டு வந்தவர்கள் அவர்கள். இன்றும் அதை அனுபவித்துவரும் அதே பாடசாலைகளின் மாணவர்களின் நன்மைக்காகவேனும் யாழ்ப்பாண பொது நூலகத்துக்குத் தமது நிதிச்சேகரிப்பின் ஒரு சிறு பங்கையாவது வழங்கும்படி கேட்டோம். பலன் தான் இல்லை. சரி, அமைப்புக்கள் தான் கைவிட்டு விட்டார்கள் என்று தனிப்பட்டவர்களின் ஆதரவை எதிர்பார்த்தோம். பெரும்பாலானவர்கள் தமது நிலவறைகளில் தூசுபிடித்துப்போயுள்ள பழைய நூல்களை ஆர்வத்துடன் அங்கு அனுப்பிவைத்துத் தத்தமது வீடுகளை சுத்திகரிப்புச் செய்வதற்குத் தான் விரும்பினார்களேயொழிய அந்த நூலகத்துடன் தொடர்புகொண்டு அவர்களது நியாயமான தேவையறிந்து அதற்கேற்ப காத்திரமான நிதிப்பங்களிப்பினை நல்க எவருமே தயாராகவில்லை. எல்லோருக்கும் வெவ்வேறு நோக்கங்கள். பாவம் பொது நூலகம். மீண்டும் தனிமரமாகிவிட்டது.

இங்கு ஈழத்தமிழர்களால் யாழ்ப்பாணப் பொது நூலகம் கைவிடப்பட்டாலும், உலகளாவிய கல்விச்சமூகத்தால் அது முற்றாகக் கைவிடப்படவில்லை. சமாதான காலத்தில் ஒருதலைப்பட்சமாக நாங்களே East London University நிர்வாகத்தினரை அணுகி அவர்களின் நிதியுதவியுடன் யாழ்ப்பாண நூலகத்தின் நூல் பகுப்பாக்கப் பணிக்கு அத்தியாவசியமான 3 பாகங்கள் கொண்ட டுவி தசாம்சப்பகுப்பாக்க நூல்தொகுதியில் (Dewey Decimal Classification) இரண்டு தொகுதிகளையும் AACR 2 என்றழைக்கப்படும் நூலகப் பட்டியலாக்க விதிமுறைத் தொகுப்பில் இரண்டு தொகுதிகளையும் வாங்கி யாழ்ப்பாணப் பொது நூலகருக்கு அனுப்பி வைத்தோம். இவை சுமார் 1000 பவுண்கள் பெறுமதியானவை.

ஸ்கொட்லாந்திலுள்ள Books Abroad என்ற நூல் விநியோக நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒரு பாரிய கொள்கலன் நிரம்பிய ஆங்கில மருத்துவம் மற்றும் பல்துறை நூல்களையும், சிறுவர் அறிவியல் நூல்களையும் யாழ்ப்பாண நூலக வாசல்வரை கொண்டபோய் கொடுக்க முடிந்தது. அவர்கள் அதை என்ன செய்தார்கள் என்று இன்றுவரை Books Abroad நிறுவனத்திற்கு முறையான தகவல் இல்லை. உலகளாவிய கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு உதவ இப்போதும் தயாராக இருக்கிறார்கள். இங்கு பிரச்சினை என்னவென்றால் - யாழ்ப்பாணத்திலிருந்து - இந்த நூலகத்திலிருந்து அல்லது மாநகரசபையிடமிருந்து வேண்டுகோள்கள் வரவேண்டும். அதற்கான திட்டங்கள் அங்கிருந்தே தீட்டப்படவேண்டும். அதை முறையாகச் செய்ய இந்தப் போர்ச் சூழலில் எவரும் முழுமனதோடு முன்வருவதில்லை.

இப்போது கூட ஒன்றும் குடிமுழுகிவிடவில்லை. வெளிநாடுகளிலிருந்து விடுமுறைக்காக யாழ்ப்பாணம் செல்பவர்கள் ஒரு சிறுபொழுதை ஒதுக்கி அந்த நூலக நிர்வாகிகளைச் சந்தித்து அவர்களின் சிறு தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொறுப்பையாவது ஏற்கலாம். புத்தகம் மட்டும்தான் அவர்களின் தேவை அல்ல. இதை நாம் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். பாரிய நூலகக் கட்டிடத்தை முழுமையாக அரசாங்கம் புனரமைத்துக் கொடுத்துள்ளது. அதன் அன்றாட நிர்வாகச் செலவுகளைச் சமாளிக்கும் பொறுப்பும் மாநகரசபைக்குரியது. பொதுவாகவே பொதுநூலகம் வருமானம் ஈட்டாத துறையென்று அதை ஒரு வெள்ளை யானையாகக் கருதி, கட்டிமேய்க்கும் சுபாவம் நிர்வாகத்தவருடையது.

இன்றைய நிலையில், நூலகத்தின் அடிப்படை நிர்வாகச்செலவு ஈடுசெய்யப்படவேண்டும். நடமாடும் நூலகசேவைக்கென யுனெஸ்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்ட பாரிய பஸ்வண்டியொன்று நூலக வாசலே கதியென்று கிடந்தது. அதனை இயங்கவைத்து கிராமங்களை நூல்கள் சென்றடையும் நடமாடும் நூலகசேவைக்கு உயிரூட்டலாம். நூலக ஊழியர்கள் மேலதிக நூலகப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய உதவிகளை வழங்கலாம். யாழ்ப்பாண மாணவர்களுக்கு வேண்டிய நூல்களைப் பெற்றுக்கொள்வதற்கான நிதி வசதியை ஸ்பொன்சர் அடிப்படையில் யாழ். நூலகத்திற்கு வழங்கலாம். யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்கான பட்டியலை இணையத்தளத்தினூடாகக் கொண்டுவர அவர்களுக்கு உதவலாம். அவர்களிடம் தொழில்நுட்ப வசதி உள்ளது. அவர்களுக்குத் தேவை நிதியுதவியேயாகும்.

வாசலில் நின்று ஞாபகப் புகைப்படங்களை எடுப்பதை புலம்பெயர்ந்து வாழும் நாங்கள் முதலில் நிறுத்தி, யாழ்ப்பாண நூலகத்தை வியாபார நோக்கில் பார்த்து முதலைக் கண்ணீர் வடிக்கும் போக்கை மாற்றி உணர்வுள்ள ஒருசிலர் முதலில் யாழ்ப்பாண நூலகத்துடன் நேரடித் தொடர்பினை ஏற்படுத்தி ஆதரவின்றித் துவண்டு கிடக்கும் அந்த ஊழியர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட முன்வரவேண்டும். தனிப்பட்டவகையிலோ, தான் சார்ந்த அமைப்பின் உதவியுடனோ எப்படி உதவலாம் என்ற வழிவகைகளை ஆராயவேண்டும். மிகவும் சிக்கலற்றதும் இடைத்தரகர் அற்றதுமான நேரடி நடைமுறை இதுவாகும்.

தற்போது நூலகப் பிரதேசம் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். நூலக ஊழியர்களே அங்கு நாளாந்தம் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுத்தான் சென்று வருகின்றார்கள். அன்றாட வாசகர்களின் எண்ணிக்கையையும் நிர்வாகம் மட்டுப்படுத்தியுள்ளது. இன்றைய நிலையில் சூழ்நிலையின் கைதியாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பொதுநூலகம் எதிர்காலத்தில் தன் விரிவான சேவைகளைத் திட்டமிட்டு அதனை புலம்பெயர்ந்த தமிழர்முன் வைக்கவேண்டும்.

அங்கிருந்து வேண்டுகோள்கள் பரவலாகவும் விரிவாகவும் ஆணித்தரமாகவும் வந்தாலே உலகத் தமிழர்களுக்கும் தமிழரல்லாத நலன்விரும்பிகளுக்கும் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் உண்மை நிலை புரியும். அங்கு என்ன நடக்கின்றது என்று அடிக்கடி ஊடகங்களின் வாயிலாகத் தெரியப்படுத்தப்படவேண்டும். அதை விடுத்து கட்டிடக் கனவுகளுடனேயே எமது எஞ்சிய சிந்தனைகளை உறைநிலையில் வைத்திருப்பதென்று நாங்கள் முடிவுசெய்தால், யாழ்ப்பாண நூலக வளர்ச்சியின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவே இருக்கும்.

யாழ்ப்பாண நூலகம் காய்த்துக் கனிந்திருந்த வேளையில் வாசகர்களாகவிருந்து அதன் பழங்களை ருசித்தபின் இங்கே புலம்பெயர்ந்து வந்து வாழ்பவர்கள் தம் மனச்சாட்சியைத் தட்டிக்கேட்கும் நாள் இன்று மீண்டும் வந்திருக்கிறது. யாழ்ப்பாணப் பொது நூலகத்தைச் சூழவிருக்கும் கல்விக்கூடங்களின் மாணவர்களாகவிருந்து, பொதுநூலக அங்கத்தவர்களாயிருந்து அதன் வசதியான நிழலிலே நூலக சேவைகளை அனுபவித்த பின், இன்று இங்கே பழையமாணவர் சங்கங்களைத் தோற்றுவித்து தத்தம் கல்லூரிகளின் வளர்ச்சிக்காக இங்கிருந்து கொண்டே உழைக்கும் பழையமாணவமணிகளுக்கும் இந்த வேண்டுகோள் பொருந்தும் என்று கருதுகின்றேன். நீங்கள் விட்டுநீங்கி வந்த அந்தப் பாடசாலைகளின் தற்போதைய மாணவர்கள் யாழ்ப்பாண நூலகத்தைப் பயன்படுத்த இன்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பெற்ற அந்த வாய்ப்பை, அல்லது நீங்கள் பெறத்தவறிய அந்த வாய்ப்பை, தாயகத்தில் உங்கள் உறவுகளுக்கு அளிக்க முன்வாருங்கள். யாழ்ப்பாண நூலகத்தின் கட்டுக்கடங்காமல் செல்லும் நிர்வாகச் செலவுக்கு முகம்கொடுக்க முடியாது திணறும் நிர்வாகத்துக்கு உங்கள் தனிப்பட்ட நிதி உதவியை வழங்க முன்வாருங்கள். நீங்கள் சார்ந்துள்ள பழையமாணவர் சங்கத்தின் நிதிஉதவியைப் பெற்றுத்தந்து, யாழ்ப்பாண நூலகம் அந்நியரிடம் கையேந்தும் நிலையை மறுத்து அதன் வளமான இயங்குதலுக்கு எவ்வித இடைத்தரகருமின்றி நேரில் உதவிவழங்க முன்வாருங்கள். ஈழத்தமிழரின் பலம் அவர்களது கல்வியில் தங்கியிருந்ததென்பதை நாம் மீண்டும் நிலைநிறுத்த வேண்டுமானால் அந்தக்கல்வி வளத்தை யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் மூலமாக பெருக்கித்தருவோம். கைநழுவிப்போக விடமாட்டோம் என்று இன்றைய நாளில் உறுதிபூணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

Answers - 222 June 01, 2008

1. $OB^2 = OA^2 + AB^2$

   $OP^2 = OB^2 + BP^2$

   Hence $OP^2 = OA^2 + OB^2 + BP^2$

   But $OA = a$, $OB = b$, $BP = c$

   $\therefore |OP| = \sqrt{a^2 + b^2 + c^2}$



2. A Vector R^4 $\vec{U} = (4, 2, -5)$

   $|\vec{u}|^2 = 4^2 + 2^2 (-5)^2 + 2^2$

   $|\vec{u}|^2 = 6 + 4 + 25 + n$

   $|\vec{u}| = \sqrt{49} = 7$

   It is very tempting to think a geometry interpretation can be Given. Mathematically we wish to consider n elements, n any Integer, and a geometric interpretation is not possible.

3. $5x + 3y + 15 = 0$, $y = \frac{5}{3}x + 5$

   Let $x = 3t$, $y = 5t + 5$

   A Symmetric equation is $\frac{x}{3} = \frac{y-5}{5}$

4. Of 90 students 42 are girls, therefore 48 are boys. Also 37 take Business 101, of which 42-19 = 23 are girls, hence 14 are boys. 14 boys take Business 101.

Questions - 223 - June 15, 2008

1. Mickey is twice as old as Donald and Donald is twice as old as Huey. If Huey is 12 years, how old is Mickey? [For grade 5 students]

2. Jill is now 14 years old. Jack is now 6 years older than Jil was 2 years ago. How old is Jack now. [For grade 6 students]

3. What is the maximum number of points of intersection of 4 distinct straight lines. [For grade 8 students]

4. Differentiate $y = \log_3 \sqrt{2x}$, $y = \frac{10}{\log_x 5}$

5. A store has been selling 200 compact discs a week for $350. A surveys shows that for each week $10 rebate to the buyers, the number of players sold will increse by 20 a week. How large a rebate should the store offer to maximize its revenue. [For grade 12 students]

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774

SMART TUTOR *(Math & Science)*

Classes by well experienced Tutor - **Contact: (416) 278-4742/ (416) 335-1818**

Grade 5 to Grade University students

- Math
- Applied & Academic Math
- Advanced Functions
- Physics
- Functions
- Geometry
- Chemistry
- Calculus
- Algebra
- General Science
- Finite
- Homework Help

Individual and group classes available at Markham and Scarborough east area

MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 3 to University 1st year. Special classes in Functions, vector, Calculus & Data Management.

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier Classes available at Scarborough & Stouffville

CONTACT: 416 - 431- 6774 (Scarborough)
647.831.0070 (Stouffville)

தமிழர் நிர்வாகத்தில் ஒரு

EMBASSY

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள்
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

416-332-8451

Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

SMILE

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கலும்

13ஆம் பக்கத் தொடர்ச்சி

அடிப்படையில் ஒவ்வொருமனிதனும் தன்னை மற்றவர் நெருங்கும்போது தனது நலன்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதை விரும்புவதில்லை. அதாவது மற்றவர்களுக்கு நன்மையாக அமையவேண்டிய ஒரு விடயத்தில் தனது நலன் இழக்கப்படுவதை விரும்புவதில்லை. இந்த இயல்பானது முக்கியமானதாக இருப்பதும் ஒருவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமாகின்றது. ஆனால் இந்த இயல்பு குழந்தைகளின் நலனைப் பொறுத்தவரையில் பெற்றோர்களிடம் இருந்து அகற்றப்பட வேண்டியது மிகமிக அவசியமானது. ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் இந்த உண்மையை உணருவதில்லை.

குழந்தைவளர்ப்பு என்பது ஒரு அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வியல் அம்சமாகும். தமது நலனைவிட குழந்தைகளின் நலனே முதன்மை பெறவேண்டியதுமாகும். ஆனால் இந்தப் புரிந்துணர்வு இல்லாத பெற்றோர்கள் தமது குழந்தைகளின் தேவைகள் அவை பொருளாதார ரீதியாக இருந்தாலும் சரி, உளவியல் சார்ந்ததாக இருந்தாலும் சரி தமது சொந்த நலனுக்குத் தடையாக இருப்பதாகக் கருதிக் குழந்தைகளை ஒதுக்கிவிடுகிறார்கள். அல்லது அவர்களிடம் இருந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள். இந்த ஒதுக்கல் அல்லது ஒதுங்கல் பெரும்பாலும் தந்தையின் பகுதியாகவே அமைந்து விடுகிறது. இவ்வாறு தமது தலைமைத்துவத் தகைமையை திறம்படப் பயன்படுத்திக் குழந்தைகளுக்குத் தேவைப்படும் விடயங்களில் தன்னலனைப் பார்க்காது அர்ப்பணிக்கும் தந்தைமார்கள் உறுதியானதும், சிறப்பானதும், உயர்ந்த முன்மாதிரியுமான வாழ்க்கை முறையைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள் என்பதே முற்றிலும் உண்மையாகும். மாறாக தமது நலன் அல்லது அந்தஸ்து பாதிப்படைவதாகக் கருதி குழந்தைகளை ஒதுக்கியோ அல்லது அவர்களிடம் இருந்து ஒதுங்கியோ வாழ்வது தவறானதும் சமூகத்திற்குத் தீங்குவிளைவிப்பதுமான குழந்தைகளின் உருவாக்கத்துக்கும் அடிப்படையாக அமைவ-தால் பெற்றோர் என்ற உயர்வான வாழ்வியல் கொடையை வீணடித்தவர்களாகி விடுகிறார்கள்.

ஆம் வாசகர்களே!

குழந்தைவளர்ப்பு என்பது நமக்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்த வாழ்வியல் பரீட்சை. கடின உழைப்பும் தன்னலமற்ற பங்களிப்பும் இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்கான அடிப்படைகளாகின்றன. இந்தப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பெற்றோரும் கற்பனையில் கூட எதிர்பார்க்காத அளவுக்கு உயர்வான மகிழ்ச்சியையும் புகழ்ச்சியையும் பெறுகிறார்கள். சுருக்கமாக கூறுவதாயின் இந்தப் பரீட்சையின் அதிவிசேட சித்திக்குத் தேவைப்படுவது குழந்தைகளுடனான ஒதுக்கலும், ஒதுங்கலுமற்ற ஒன்றிணைந்த செயற்பாடேயாகும்.

சிறந்த இணையத்தளங்கள்

www.sramakrishnan.com

எஸ் ராமகிருஸ்ணன் பல துறைகளில் தீவரமும், திறமையும் கொண்ட ஓர் எழுத்தாளர். பாபா, ஆல்பம், பாப்கோன், சண்டைக்கோழி, உன்னாலே உன்னாலே, பீமா போன்ற படங்களின் வசனகர்த்தா. உபபாண்டவம், யாமம் (இந் நூல் இலக்கியத் தோட்டத்து விருதினைப் பெற்றது) போன்ற நாவல்களையும் எழுதியுள்ளார். உலக சினிமாபற்றி இரு நூல்களை எழுதியுள்ளார். ஆனந்த விகடனில் இவர் சில கட்டுரைத் தொடர்களை எழுதியுள்ளார். சிறுவர் நூல்களையும் எழுதியுள்ளார்.

- பதுமி -

இவரது இணையத் தளமே மேற்குறிப்பிட்ட இணையத்தளம். இந்த இணையத் தளத்தில் இவரைப் பற்றிய குறிப்புக்களுடன், படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும் பல நல்ல தகவல்களும் உள்ளன. இலங்கைத் தமிழ் நூல்களுக்கான http://noolaham.net என்ற இணைத்தளம் பற்றிய விவரங்கள் உள்ளன. இளையராஜா பற்றிய ttp://www.itsdiff.com/Tamil.aspl என்ற இணையத்தளம் பற்றிய விவரம் போன்ற பல நல்ல பயனுள்ள விவரங்களும் உள்ளன. தமிழில் வெளிவந்த நூறு சிறந்த நூல்களின் பட்டியலும் உண்டு. அதில் பல இலங்கை நூல்களும் உண்டு. மரணத்துள் வாழ்வோம், சொல்லாத சேதிகள், பிரமிள் கவிதைகள், ம் - சோபா சக்தி, முத்துலிங்கம் சிறுகதைகள், யாழ் நூல், நீ இப்பொழுது இறங்கும் ஆறு - சேரன் கவிதைகள் போன்ற ஈழத்து தமிழ் நூல்களும் உள்ளன.

பல்வேறு மொழி இலக்கிய இணையத்தளங்களின் இணைப்பு குறிப்பிடத்தக்கது. அட்சரம், வல்லினம் போன்ற சிறு சஞ்சிகைகளையும் வாசிக்கலாம். மிகவும் பயனுள்ள இணையத்தளம்.

Credit Recovery Point

உங்கள் கடன் (Credit) பிரச்சினையால் வாழ்க்கையில் ஏற்படும் சுமையை நாங்கள் இறக்கி விடுகின்றோம்.

உங்களுடன் தமிழ்மொழியில் உரையாடி உங்கள் துன்பத்தை துரத்தி விடுகின்றோம்.

சகல ஆலோசனைகளும் இலவசம்

உங்களுக்கு உடன் உதவிட நாம் தயார்!
நீங்கள் தயாரா? எங்களது விசேடமான உதவிகள்

வங்குறோத்து (Bankruptcy) அடையாமல் உங்கள் கடனை இலகுவழியில் தீர்க்க சட்டதிட்டங்களுக்கு அமைய வழிமுறைகளைக் கையாளுதல்.

அழியாச்சொத்தை வைத்துக் கொண்டு மற்றைய கடன்களிலிருந்து விடுபட உதவிபுரிதல்

நீங்கள் கடன் பெற்ற நிறுவனத்தின் தொலைபேசி அழைப்புகளால் உங்களை மனவழுத்தலுக்கு செல்லாமல் தவிர்த்தல்

உங்கள் மேல் சட்ட நடவடிக்கையெடுத்து உங்கள் வருமானத்தை இடைநிறுத்துவதை வென்றெடுத்தல்

உங்கள் பல கடன்களை ஒன்றாக்கி மாதாமாதம் சிறு தொகை கட்ட ஒழுங்கு செய்தல் மேலும் கூடுதலான வட்டியை நிவர்த்தி செய்தல்

உங்கள் கடன் அறிக்கையில் (Credit Report) உள்ள பழைய தகவல்கள்/தவறுகளையகற்றிட உதவிபுரிதல்

மீண்டும் நீங்கள் கடன் பெற வழிசமைத்தல்

CREDIT RECOVERY POINT

WE PROVIDE FREE & PROFESSIONAL ADVISE IN TAMIL & ENGLISH

We are the Pioneers of credit Recovery for our Community. Others Imitate we Create.

OUR SPECIAL SERVICE

MORTGAGES - 1st & 2nd (Bank & Private)
Commercial Mortgages - 1st & 2nd (Bank & Private)
Refinancing & Consolidation (Bank & Private)
Mortgage Renewal - Real Estate Needs
Buy and Sell Homes & Investment Properties
Line of Credit & Credit Cards

BANKRUPTCY ADVICE - How to avoid
Consumer proposal & Credit Counseling advice
Credit Repair - Credit Rehabilitation

VARIOUS IMMIGRATION MATTERS
Legal Advice - Criminal, Civil & Family Matters
CRA - Revenue Canada Tax Issues
OSAP - Student Loans Matters
Traffic Violations - Criminal & HWY Traffic Act

www.crpoint.ca CR Point

Tel : 416-412-6363
Cell : 416-856-5154
Saba Inthiran
Financial Advisor
Fax : 416-412-1206
5200 Finch Ave. East, Suite 300, Scarborough, ON.
Email : crpoint300@gmail.com

ALL CONSULTATIONS ARE FREE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BASEMENT RENT

MCCOWAN & LAWRENCE
1/2 Bedroom bsmt for rent. Sep. Entrance, parking & laundry. Close to library, hospital, bus, tamil stores & school.
Avail. September 1st, 08
416.509.3555/416.737.8880

Neilson & Hwy 401
2 Bedrooms bsmt for rent. Sep. Entrance, Parking, cable. Close to Junior School, TTC, All facilities. Reasonable rent
Shankar: 416.993.4358
Jeeva: 416.276.2590

BRIMLEY & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. Entrance, parking & laundry. Close to bus, mall & school.
Avail. immediately
416.879.6801/416.293.6253

BRIMLEY / LAWRENCE
2 அறைகள் கொண்ட bsmt இல் அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable. Close to stores, TTC, etc.
Avail. July 01, 08.
தொடர்புகளுக்கு: 416.264.8177

Warden & Ellesmere
2 Large bedroom bsmt for rent. Sep. entrance, Parking, Laundry. Close to School, TTC, Hwy & Mall. Avail. immediately.
416.725.9938 /416.458.0319

RUTHERFORD & DUFFERIN
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking cable & laundry. Close to bus, stores. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.450.5902

MORNINGSIDE & OLD FINCH
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. July 01, 08. Close to ttc, school, shopping, etc.
தொடர்புகளுக்கு: 416.284.6226

BRIMLY & FINCH
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately. Couple / single mother preferred. Close to bus, school, stores, etc.
416.412.2853/647.295.2853

MORNINGSIDE & FINCH
சந்திப்பிற்கு அருகில் 2 bedrooms, full washroom, kitchen கொண்ட walk-out bsmt வாடகைக்கு உண்டு. Close to school, mall, ttc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.287.2113

BRIMLEY & EGLINTON
1 bedroom bsmt apt.for rent. Sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to stores, bus, etc.
416.269.0480 / 416.522.1010

MORNINGSIDE & SHEPPARD
Newly renovated 2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance with parking
Close to bus, mall & school.
Avail. July 1st. 08
416.269.3798/416.930.3798

Morningside & Military Trail
3 Bedroom bsmt for rent with all facilities. Sep. Entrance, Parking, Laundry, Utilities inclu. Close to school, TTC, Stores, Scarborough Campus. Avail. immediately. Reasonable rent.
தொடர்புகளுக்கு: 647.827.9894

MCCOWAM & FINCH
2 அறைகள் கொண்ட BSMT இல் 1 large bedroom for rent. Living room, sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to ttc, stores, school, etc.
416.720.2171 / 416.298.1872

WARDEN & FINCH
1 bedroom bsmt apt. for rent. Laundry, parking, utilities inclu. படிக்கும் / வேலைசெய்யும் ஆண்கள் விரும்பத்தக்கது. வாடகை பேசித்தீர்க்கப்படும். Avail. immediately. Close to ttc, mall, bank, plaza.
தொடர்புகளுக்கு: 416.492.6817

FINCH & PHARMACY
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ttc, school, Tamil stores, mall. Avail. Immediately. Non smokers preferred.
தொடர்புகளுக்கு: 416.759.2030

SCAR. GOLF CLUB & LAWRENCE
Newly renovated 2 Bedroom bsmt. apt. for rent. Sep.entrance. 2 parking & laundry. School & bus at walkin distance.
Avail. July 1st, 08
தொடர்புகளுக்கு: 416.895.0812

NEILSON & SHEPPARD
Newly renovated 2 Bedroom walk out bsmt for rent. Parking. Close to Centennial college, school & mall. Couple / students preferred. Avail. immediately. Call after 6:00pm.
416.913.4094 / 647.237.4094

MIDLAND & KINGSTON
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. Close to TTC, Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.6869

MORNINGSIDE & NIGHT STAR
1 bedroom walk-out bsmt for rent . Sep. entrance, parking, cable, laundry. Close to ttc, School, Mall etc. Avail. July 01, 08.
தொடர்புகளுக்கு: 647.281.8991

BRIMLEY & EGLINTON
Newly renovated 2 large bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking, laundry, utilities inclu. Close to bus, schools, stores, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.264.4173

MIDLAND & HUNTINGWOOD
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable & laundry. Close to bus, mall & school. Avail. immediately.
416.754.3599 / 647.500.1346

MCNICOLL & MCCOWAN
1 Bedroom bsmt for rent. Sep.entrance, laundry, parking, cable. New kitchen. Close to TTC, mall & school. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 647.818.5267

MARKHAM & LAWRENCE
2 bedroom bsmt for rent. Sep. entrance. Washroom, parking, washer, dryer. Avail. immediately. Close to bus, mall, school, தமிழ்க்கடைகள்.
தொடர்புகளுக்கு: 647.669.2161

BRIMLEY & HUNTINGWOOD
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. July 01, 08. Close to TTC, shopping centre & school. Close to TTC, shopping centre & school. தொடர்புகளுக்கு:
416.335.3460 / 647.408.1501

KENNEDY & ELLESMERE
1 Bedroom walk-out bsmt in Town house for rent. Behind highland farm. Cable & laundry. Close to TTC, Stores & HWY 401.
Avail immediately. Couple ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.885.4238

MARKHAM & LAWRENCE
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry & other facilities. Close to TTC, Stores, junior & public schools, mall.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.219.4558

MARKHAM & LAWRENCE
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Laundry, parking, cable. Close to school, ttc, mall. Available immediately.
தொடர்புகளுக்கு: 416.438.3724

MIDLAND & EGLINTON
2 Bedroom bsmt. with large living room for rent. Sep.entrance. Kitchen, parking,cable & laundry. Also 1 room available in main floor.Close to ttc, school, stores.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.5075

KENNEDY & ELLESMERE
சந்திப்புபில் அமைந்துள்ள வீடு ஒன்றில் Basement வாடகைக்கு உண்டு. Kennedy வீதியில் அமைந்துள்ளது. 2 அறைகள். Sep.entrance. Parking, cable,internet & telephone. தொடர்புகளுக்கு: 416.830.5560

NEILSON & SHEPPARD
One bedroom walk-out bsmt for Rent.
Parking, Cable, laundry. Avail. July 01, 08.
Close to Malvern mall, bus stop & school.
தொடர்புகளுக்கு: 416.284.7604

SCAR. GOLF CLUB & LAWRENCE
1 large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, full washroom, washer, dryer. Sep. entrance. Avail. August 01, 08. Close to ttc, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

MARKHAM & BRIMORTON
2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, cable, laundry. Close to ttc, school, plaza, etc.
தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.289.6977

LAWRENCE & Scarboro. Golf Club Rd
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. parking, laundry. Avilable immediately. Close to Bank, TTC, shoping, school.
தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.901.1999 /416.219.4936

BRIMLEY & LAWRENCE
One bedroom apt. for rent. Sep. entrance, washer, dryer, parking, cable. Close to school, ttc, stores. Available immediately.
தொடர்புகளுக்கு: 416.267.7178

MIDDLEFIELD & FINCH
Large 2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, parking, cable (TVI). Close to mall, school, bus, stores, ஐயப்பன் ஆலயத்திற்கு அருகாமையில்.
Avail immediately.
தொடர்புகளுக்கு: 416.321.9267

DONMILLS & STEELES
1 bedroom walkout bsmt for rent. Sep. entrance. Paring, laundry. Close to ttc, & mall. No smoking & Alcohol. Rent $325.
Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.491.9364

MORNINGSIDE & SEWELLS
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washroom. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு:
416.286.3534 / 416.708.2377

2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, school, mall etc. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.438.5448

MORNINGSIDE & SEWELLS
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. cable. Avail. immediately. Close to ttc, stores, school, etc.
தொடர்புகளுக்கு: 416.724.0124

SHARING ACCOMMODATION

MIDDLEFIELD & FINCH
1 bedroom bsmt for rent - Sharing accommodation. Cable, telephone, parking, laundry. Avail. July 01, 08. Close to 24 hrs. bus, stores, etc. Suitable for bachelors. தொடர்புகளுக்கு: 416.836.6791

CONDO. FOR RENT/SALE

KENNEDY & EGLINTON
Two Bedroom Condo. for Sale or Rent. Available from August. Schools, TTC, shops & all facilities close to the building. very convenient location.
Contact - Arul :(416)- 751-5857.

CONDO. FOR SALE

MIDDLEFIELD & FINCH
Beautiful new -2 yrs. Condo. for sale. 2 bedrooms ,2 full washrooms, all new 5 appliances & parking. Close to ttc, stores, school, temple, GTA mall, etc.
தொடர்புகளுக்கு: 416.291.1217

JOB JOB JOB

JDANFORTH & EGLINTON
சிற்றுண்டிகள், வெதுப்பக உணவுகள், கேக் வகைகள் செய்யத்தெரிந்த முழுநேர வேலையாள் ஆண் / பெண் உடனடியாக தேவை. தொடர்புகளுக்கு
416.720.9546/647.297.2355

COQUINE RESTAURANT
YONGE & EGLINTON
Experienced line cooks wanted immediately. PL. CALL: Amir - 416.322.6767
coquine@bellnet.ca

SCRAP CARS WANTED

Cash For Cars
Dead or Alive. Fast Free Towing 7 days
உங்களிடம் இருக்கும் பழைய பாவிக்க முடியாத வாகனங்களை எங்கள் செலவில் எடுத்துச்செல்வோம்.
அழையுங்கள் : 647.400.1137

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

மேலும் பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROOM RENT

DANFORTH & EGLINTON
1 Bedroom for rent in main floor. Sep.entrance. Attached washroom, cable, phone, cooking facilities. Students / ladies preferred
416.265.6258/647.297.2355

KENNEDY & FINCH
சந்திப்புக்கு அருகாமையில் 3 அறைகள் கொண்ட **Bungalow** வீட்டில் ஒரு அறை தளபாடங்களுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to 24 hrs. bus service, shops, வரசித்தி விநாயகர் கோயில்.
தொடர்புகளுக்கு:416.291.2796

MARKHAM & ELLESMERE
10 Tuxedo Court
2 அறைகள் கொண்ட Apt. ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to TTC, school, shopping. தமிழ்கடைகள். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0140

MARKHAM & ELSON
1 Bedroom in main floor with attached full bathroom & kitchen facilities, parking, cable & laundry. Ladies preferred. Avail. immediatel.
416.301.1232/416.833.9567

NEAR GUELPH UNIVERSITY
2 Rooms for rent. With or without meals. Seperate washroom & parking. Close to bus, stores & bank, etc.
Avail. September 01, 08.
519.826.0162 / 519.546.7674

MARKHAM & EGLINTON
4 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Main floor. அதே Level இல் washroom உண்டு. Parking, laundry, cooking facilities. Close to TTC, school, shopping, தமிழ்கடைகள்.
தொடர்புகளுக்கு: 416.712.9787

MCCOWAN & LAWRENCE
1 Bedroom for rent. Kitchen, washroom. Parking, etc. Close to TTC, stores, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

BRIMLEY & EGLINTON
Rooms for rent. Sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to ttc, school, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.577.7757

Neilson & Tapscot
Room for rent in Main Floor. Rent $300. Sep.Washroom, Cable, Parking. Close School, Mall, TTC. பெண்கள் அழைக்கவும். சமைக்கக்கூடிய வசதியும் உண்டு. Avail. Immediately.
தொடர்புகளுக்கு:416.951.2200

ORTON PARK & LAWRENCE
2 அறைகள் கொண்ட Apt.இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது. Parking. Close to bus, stores, etc. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.439.3568

DANFORTH & EGLINTON
One room for rent in main floor. One bedroom bsmt with sep. entrance. Laundry, parking. Avail. immediately. Couple / இருவர் விரும்பத்தக்கது. Close to bus, stores, 5 min. to Kennedy subway.
தொடர்புகளுக்கு: 647.201.3111

BIRCHMOUNT & MCNICOLL
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

NEILSON & FINCH பகுதியில் அமைந்துள்ள வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. washroom. உணவு விரும்பினால் கொடுக்கப்படும். பெண்கள் விரும்பத்தக்கது. Close to bus, mall, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.9913

MARKHAM & LAWRENCE
வீட்டில் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Master bedroom - main floor. சமையல் அறையைப் பகிர்ந்து கொள்ளலாம். (sharing kitchen). cable, parking. Rent $275. Close to TTC, school, shopping. Available Immediately.
416.439.4076 / 416.728.0807

TOWN HOUSE FOR RENT

TAPSCOTT & MCLEVIN
2 / 3 அறைகள் கொண்ட Townhouse வாடகைக்கு உண்டு. Kitchen, large living room, washroom, parking, laundry, balcony. Close to ttc, school, Malvern mall.
தொடர்புகளுக்கு: 416.844.7274

KENNEDY & EGLINTON
3 Room house for rent. Parking, all appliances, back yard with deck. Avail. August 01, 08.
Close to TTC, subway, doctors office, daycare, mall, Temple.
தொடர்புகளுக்கு: 416.857.0254

HOUSE FOR RENT

MARKAHAM & DENISON
3 Bedroom house for rent. One Bedroom bsmt apt. with all facilities. Parking. Close to many shopping centers. Close Markham road
தொடர்புகளுக்கு:416.834.0927

Ellesmere & Scarborough Golf Club Rd
3 Room house for rent. Rent $1,000. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். $350 per room. Sep.washrooms, parking, Laundry, etc. Avail. July 01, 08.
Close to Bank, TTC, School.
416.525.5792 / 416.901.0518

CAR FOR SALE

MCCOWAN & ELLESMERE பகுதியில் Car விற்பனைக்கு உண்டு.
1994 Camry LE for sale. 233,000 Km.
1999 Camry LE for sale. 170,000 Km.
இரண்டில் ஒன்று விற்பனைக்கு உண்டு.
416.289.1484 / 416.400.1265

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

மணமகள் தேவை

29 வயது நிரம்பிய M.Sc. படித்த சிங்கப்பூரில் பணிபுரியும் Computer Engineer க்கு மணமகள் தேவை. பாவம் குறைந்த 7இல் செவ்வாய் உடையவர். இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். மேலதிக தொடர்புகளுக்கு:
416.291.3816 /416.275.5300

பராமரிப்பாளர் தேவை

9th Line & 14th Ave.
பகுதியில் வசிக்கும் இரண்டு வயதான தம்பதியரை திங்கள் முதல் வெள்ளிவரை பராமரிக்க ஆள் தேவை. ஏழு நாட்களும் தங்கியிருந்தும் பராமரிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு: 416.828.9449

FURNITURES FOR SALE

MIDLAND & EGLINTON
Convenience Store இல் உள்ள தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் யாவும் உடனடியாக முழுமையாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.602.2729

BUSINESS FOR SALE

HORWOOD Ave. & STATION RD. AJAX இல் சுறுசுறுப்பாக Grocery, மீன், மரக்கறி விற்பனை செய்யும் கடை விற்பனைக்கு உண்டு.
Pl. Call: 416.275.1160 / 905.947.9359

MARKHAM & SHEPPARD
"241 PIZZA" BUSINESS FOR SALE.
Located in the same Spice Land Plaza. Rent $36,000 per year. Over $350,000 sales per year. Asking price $74,900.
Pl. Call: 416.291.5671

மேலும் பக்கம் 20

OFFICE SPACE FOR RENT

அலுவலக இடம் வாடகைக்கு - MORNINGSIDE & SHEPPARD
Luxury Office space for rent. Real Estate, Mortgage, Insurance offices போன்ற அலுவலகங்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. முதலாவது, இரண்டாவது மாடியில் 200 தொடக்கம் 400 சதுரஅடி இடம் உண்டு. Show Room அமைக்கக்கூடிய இடம்.
Pl. Call: Murale - 416.569.4065

APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எம்.ஜி.ஆர். கொடுத்த அந்தத் தட்டை இன்றும் வைத்திருக்கிறேன்”

நேர்காணல் - ஆரூர்தாஸ்

தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு தனிப்பெரும் சாதனையாளராக இன்றும் தனித்து நிற்பவர் ஆரூர்தாஸ். சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட படங்களுக்கு வசனம் எழுதியவர். மிகக் குறைவான பாடல்களே எழுதியிருந்தாலும் திரைப்பட பாடலாசிரியராகவும் தனி முத்திரை பதித்தவர். எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் இருவரும் தமிழ் திரையின் இருதுருவங்களாக ஆட்சி செய்துகொண்டிருந்த போது, அந்த இருவரின் படங்களுக்கும் ஒரே நேரத்தில் வசனம் எழுதியவர். அந்தக் காலத்தில் ஆரூர்தாஸ் வசனம் எழுதிய அனைத்துப் படங்களுமே வெள்ளிவிழாப் படங்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது. இவரது சொந்த ஊர் திருவாரூர். அக்கால தமிழ் திரையுலகின் நிகழ்கால சாட்சியாக இருக்கும் ஆரூர்தாஸ் அவர்களுக்கு தற்போது எழுபத்தொரு வயது. இந்த வயதிலும் தளராமல், தன் திரையுலக அனுபவங்களை முழுமையாக தொகுத்து எழுதிக் கொண்டிருக்கிறார். விளம்பரம் இதழுக்காக கவிஞர் அமுதபாரதி அலுவலகத்தில் ஆரூர்தாஸைச் சந்தித்தோம். மிக நீண்ட நேர்காணலின் சுருக்கப்பட்ட வடிவம் இது.

கேள்வி: ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ் படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறீர்கள். இன்று திரும்பிப் பார்க்கும் போது மலைப்பை ஏற்படுத்தும் இந்த எண்ணிக்கை நிச்சயம் பெரிய சாதனைதான். குறிப்பாக எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் ஆகியோருடனான உங்கள் பங்களிப்புகள் தமிழ் திரை சரித்திரத்தில் இடம்பெறுக்கூடியவை. அந்தப் பயணம் பற்றி சுருக்கமாகச் சொல்லுங்கள்?

ஆரூர்தாஸ்: நல்லது. இந்த நேரத்தில் நான் சின்னப்பத் தேவர் அண்ணன் அவர்களை நினைத்துக் கொள்கிறேன். அவர்தான் என்னை வசனகர்த்தாவாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகப்படுத்தியவர். எனக்கு அவர் காட்பாதர். எனக்கு மட்டுமல்ல அக்கால சினிமாக்காரர்கள் எல்லோருக்கும் அவர் காட்பாதர்தான். சின்னப்ப தேவர் அண்ணனை நானும் சரி, எம்.ஜி.ஆரும் சரி அண்ணேன்னுதான் கூப்பிடுவோம். எம்.ஜி.ஆரை வைத்து அதிக படம் தயாரித்தவர் அண்ணந்தான். அந்த காலத்தில் அவர் நினைத்து இருந்தால் என்னை ஒரு ஒப்பந்தம் செய்து வேறு படங்களுக்கு வசனம் எழுதக்கூடாது என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அவர் அப்படி செய்யவில்லை. இது அவருடைய விசாலமான மனதைத்தான் காட்டுகிறது. “குடும்பத் தலைவன்” படத்தின் போது எனக்கும் அவருக்கும் இறுதிகட்ட காட்சியில் சிறு பிரச்சினை ஏற்பட்டது. அப்போது நான் அவரிடம், “என் பேனா நான் நினைப்பதை மட்டும்தான் எழுதும். நீங்கள் சொல்வது போலெல்லாம் எழுதாது” என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அடுத்த நாளே அவர் என் வீட்டுக்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு போனார். “குடும்பத் தலைவன்” வெளிவந்து வெற்றிக்கரமாக ஓடியது. தேவர் அண்ணன், ஒரு படம் வெளிவந்த அன்றே அவருடைய அடுத்தப் படத்துக்கான பூஜையைப் போட்டுவிடுவார். “குடும்பத் தலைவன்” படத்துக்குப் பிறகு அடுத்த படத்துக்கான பூஜை அன்று, வசனத்துக்கு வேறு ஆளை நியமித்து விட்டார். நானும் சரி, இனி தேவர் பிலிம்ஸில் நமக்கு வேலை இல்லையென்று இருந்துவிட்டேன். இது எம்.ஜி.ஆருக்கு தெரிய வந்தப்போது அவர் தேவர் அண்ணனிடம், “ஏன் அண்ணே ஒரு வெற்றிக் கூட்டணியை பிரிக்கீங்க. இந்தப் பிரச்சினையை என்னிடம் நீங்கள் சொல்லியிருந்தா நானே தீர்த்து வைத்திருப்பேனே” என்று சொல்லி சண்டை போட்டிருக்கிறார். எம்.ஜி.ஆர். கவலைப்பட்டது போலவே, அந்தப் படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. திரும்பவும் நான் தேவர் பிலிம்ஸில் வேலை பார்க்கத் தொடங்கினேன். அந்த சின்ன மனஸ்தாபம் மனதில் இருந்தாலும் இன்றும் தேவர் அண்ணன் என் மரியாதைக்குரியவர். தேவர் அண்ணனின் புகைப்படத்தைப் பார்த்தால் போதும் எழுந்து நின்றுவிடுவேன். அது என் ரத்தத்தில் ஊறிப்போனது.

கேள்வி: அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருமே தங்கள் படத்தில் வேலை செய்பவர்களை, இன்னொருவர் படங்களில் பணியாற்ற விடமாட்டார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். நீங்கள் எப்படி ஒரே நேரத்தில் இருவர் படங்களுக்கும் வசனம் எழுதினீர்கள்?

ஆரூர்தாஸ்: உண்மைதான். சிவாஜி கணேசனுக்கு இருபத்தெட்டு படங்களுக்கும், எம்.ஜி.ஆருக்கு இருபத்தியேழு படங்களுக்கும் வசனம் எழுதியிருக்கிறேன். எம்.ஜி.ஆருக்கு நான் வசனம் எழுதிய முதல்படம் “தாய் சொல்லைத் தட்டாதே”. சிவாஜிக்கு நான் எழுதிய முதல் படம் “பாசமலர்.” தொடர்ந்து “படித்தால் மட்டும் போதுமா”, “பார்த்தால் பசி தீரும்”, “பார் மகளே பார்”, “அன்பழிப்பு”, “அன்னை இல்லம்”, “புதிய பறவை”, “தெய்வமகன்”, “பைலட் பிரேம்நாத்”, இப்படி எழுதிக்கொண்டே இருந்தேன். இன்னொரு பக்கம் எம்.ஜி.ஆருக்கு “தாய்க்குப் பின் தாரம்”, “தாயைக் காத்த தனையன்”, “குடும்பத் தலைவன்” என்று என் பயணம் தொடர்ந்தது. இந்தவகையில் என்னை சரோஜாதேவியுடன் ஒப்பிடலாம். அவர்கள் இருவரையும் பொறுத்தவரைக்கும் நான் ஒரு சரோஜாதேவி மாதிரிதான். இருவருமே என்னை விரும்பினார்கள். இது இறைவன் எனக்கு அருளியது. எம்.ஜி.ஆர், “ஏன் சிவாஜி கணேசன் படத்துக்கு எழுதுகிறீர்கள்” என்று என்னை கேட்டதே இல்லை. அதேபோல சிவாஜி கணேசனும் என்னைக் கேட்டதே கிடையாது. எம்.ஜி.ஆரை வைத்து படம் தயாரித்த தேவர் அண்ணனும், “ஏன் அங்கு போய் வசனம் எழுதுகிறாய்” என்று என்னைக் கேட்டதில்லை. இது என் சாமர்த்தியம் என்று சொல்லமாட்டேன். இது என் அன்னையில் அருள். இந்த மூன்று பெருமகனார்களின் பெருந்தன்மையும்கூட.

கேள்வி: நீங்கள் வசனம் எழுதிய முதல் படம் எது?

ஆரூர்தாஸ்: கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்கள் நடித்த முதலும் கடைசியுமான தமிழ் படம் அது. “நாகார்ஸனன்” என்ற படம். அதை இயக்கியவர் ஒய்.வி.ராவ். இவர் தமிழில் முதல் பேசும் படமான “காளிதாஸ்”-ல் உதவி இயக்குனராகப் பணியாற்றியவர். நடிகை லட்சுமியின் தகப்பனார் ஐஸ்வர்யாவின் தாத்தா.

கேள்வி: உங்களுக்கும் கண்ணதாசனுக்குமான நட்பைப் பற்றி...

- சிவதானு -

ஆரூர்தாஸ்: அந்த காலத்தில் நான் வசனம் எழுதிய அத்தனைப் படங்களுக்கும் பாடல் எழுதியவர் கவிஞர் கண்ணதாசன் தான். பெரும்பாலும் நான் வசனம் எழுதிய படங்களின் பாடல் காட்சியை நான்தான் கண்ணதாசனிடம் விளக்கி சொல்வேன். நான் இல்லாத நேரங்களில், “எங்கே தம்பிதாஸ்” என்று கேட்டுவிட்டு, இல்லையென்றதும் “சரி நாளைக்கு வருகிறேன்” என்று கூறிவிட்டு சென்றுவிடுவார் கண்ணதாசன். இந்தக் காலத்துக் கவிஞர்கள் மாதிரி காட்சியைக் கேட்டுவிட்டு அப்புறம் வந்து எழுதி தருகிறவர் இல்லை கண்ணதாசன். கேட்ட உடனே வார்த்தைகள் அருவி மாதிரி கொட்டும் அவரிடம் இருந்து. நானும் ஆஹா, ஆஹான்னு தலையாட்டுவேன். அப்படி நான் தலையாட்டாவிட்டால் “என்ன” என்று கேட்பார். நான் இந்த வரியை இப்படி போட்டால் நன்றாக இருக்கும் என்பேன். “ஆமா நான் சொன்ன சொல்லைவிட இது நல்லாதானே இருக்கு. போட்டுக்குங்க” என்பார். நான் மட்டுமல்ல, அங்கு வேலை பார்க்கும் பீஸ்பாய் ஏதாவது நல்லவரியை சொன்னாலும் அவர் அதை ஏற்றுக்கொள்வார். ஒருமுறை மதுரையில் கவியரங்கம். கண்ணதாசன் தலைமை தாங்கினார். பல இளைஞர்கள் கவிதை வாசித்தார்கள். கடைசியாக கண்ணதாசன் ஒரு கவிதை வாசித்தார். அதற்கு அரங்கத்தில் பலத்த கரவொலி. அப்போது கண்ணதாசன், “இப்போது நான் வாசித்த கவிதை நான் எழுதியது அல்ல. அதை என் வாயால் வாசித்தேன். இவ்வளவு கரவொலி எழுப்பினீர்கள். ஆனால், எனக்குப் பிடித்த கவிதை இந்த இளைஞர் எழுதியதுதான்” என்று ஒருவரைக் குறிப்பிட்டு, “மீண்டும் ஒரு முறை எனக்காக கரவொலி எழுப்புங்கள்” என்றார். அந்த மனசு யாருக்கு வரும்? இதுதான் கண்ணதாசன். நான் அவரோடு நெருங்கிப் பழகியது என்னுடைய பாக்கியம் என்றுதான் சொல்வேன். அவர் ஒரு பிறவிக் கவிஞன்.

கேள்வி: இன்றும் வாடாத மலராக உங்கள் மனதில் இருக்கும் ஒரு சந்தோசமான திரைத்துறை அனுபவம் எது?

ஆரூர்தாஸ்: “தாய் சொல் தட்டாதே” படம் வெற்றியடைந்தப் பிறகு, அதே தேவர் பிலிம்ஸ் எம்.ஜி.ஆரை வைத்து “தாயை காத்த தனயன்” ஆரம்பித்தார்கள். அப்போது, எம்.ஜி.ஆர் அவர்கள் என்னிடம், “தாய் சொல் தட்டாதே” மாதிரி இது வெற்றிப்படமாக அமையுமா” என்று கேட்டார். நான், “அதைவிட இருபதைந்து நாட்கள் கூடவே

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough	Tonsillitis	Migraines	Prostatitis
Flu	Gout	Hair Loss	Obesity
Depression	Arthritis	Diabetes	Hemorrhoids
Anxiety	P.M.S	Cystitis	Stumatitis
Asthma	Leucorrhea	Cancer	Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190

நகைச்சுவைத் தொடர்

ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச்செயல்

'அம்மாவும் நீயே அப்பாவும் நீயே'
'அம்மா என்றால் அன்பு அப்பா என்றால் அறிவு'

வானொலியில் பிள்ளைகள் வந்து பாதேர்ஸ் டே வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டேயிருந்தனர்.

உலகண்ணை தாய் தேப்பன் உயிரோடை இருக்கேக்கை கவனிக்கமாட்டினம். ஆனா பிறகு கலரிலை படம்போட்டு கண்ணீரஞ்சலியும் கவிதையும் போடுவினம்.. என்று சலித்துக்கொண்டா செக்கண்ட்புளோா செல்லம்மா.

இறந்தபின் சம்பிரதாயத்துக்கு நினைவு கூர்வதையும் விழா எடுப்பதையும் விடுத்து இருக்கேக்கை வடிவா கவனிக்க வேணும் என்றபடி ரூபனைப் பார்த்தா ஆட்டிலறி அன்னம்மா.

உலகரைப் பொறுத்தமட்டில் ரூபனுக்கு எந்தச் சிரமமுமில்லை.
வேட்டியும் சேட்டும்தான்
சுருட்டும் வெத்திலையும் விட்டாச்சு.
வாராவாரம் நிகழ்ச்சிகள் தவறவிடுவதில்லை

தவில் மனோகரனின் சி.டி. வெளியீட்டுவிழா, வர்ணராமேஸ்வரனின் இசைக்கச்சேரி, வர்த்தக சம்மேளனத்தின் நடைபவனி, நித்தியசிறீ மகாதேவனின் சகோதரியும் பெறாமகளும் இசைநிகழ்த்த எமது கலைஞர்கள் பக்கவாத்தியம் வாசித்து பாராட்டப்பட்ட சகல நிகழ்ச்சிகளும் தவறவிடவில்லை.

சீரியலும் சினிமாவும் மட்டும் சலிக்கச் சலிக்கப் பார்ப்பவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

வெயில் வந்துவிட்டது. கோவில்கள் கொடியேறி தேருடனே தீர்த்தம்.

அரிசி என்ன விலையேறினாலும் கோயில்களில் அன்னதானம் குறையவில்லை எண்டா செக்கண்டபுர்ளோர் செல்லம்மா.
உலகண்ணை இனியெண்டாலும் எந்த விழாக்களிலும் விருந்துபசாரங்களிலும் அளவுக்கதிகமாக சாப்பாட்டை எடுத்து கொண்டுபோய் கொட்டுற ஆக்கள் அளவோடை எடுத்துச் சாப்பிடுற ஆக்கள் அளவோடை எடுத்துச் சாப்பிடப்பழகட்டும்.

தன்னைப்போல பலருக்க ஆறுதல் முதியோரில்லங்கள் தானென்று கையில் சில பூக்கன்றுகளுடன் வர கதை திசைதிரும்பியது.

உலகண்ணை உலகம் முழுக்க உணவுப்பஞ்சம். வீடு வாசல்லை பூக்கண்டு நடுறதைக்குறைச்சு ஏதன் காய்கறிக்கண்டுகள் வைச்சா எவ்வளவு நல்லது என்றா ஆட்டிலறி அன்னம்மா..

உலகண்ணை வீட்டுக்குள்ளை களவா கஞ்சா வளர்க்கிறவங்கள் இனிமேல் நெல்லு வளப்பங்கள் ஏனெண்டால் அரிசியும் இப்பவிலைதானே? எண்டு சொல்லிச்சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

முருகேசரை அன்று எப்பிடியும் சந்திக்கவேணும் என முடிவெடுத்துவிட்டார். முதியோரில்லத்தில் இன்று ஏதோ விழா உலகருக்குத்தெரியும்.

சைவத்துக்கும் சமூகத்துக்கும் பெரும் தொட்டாற்றிய சிவத்தமிழ் செல்வி இன்று எம்முடன் இல்லை. ஆனால் அவர்கள் ஏழைமக்களுக்கும் அநாதைப்பிள்ளைகளுக்கும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலை செயற்பாட்டு மையமாக வைத்து ஆதரவு இல்லங்கள் அமைத்து பெருந்தொண்டாற்றி வந்தார்.

83ஆவது வயதில் இன்று காலமானார். இவருக்கு சிறந்த சமூக சேவையாளர், யாழ். பல்கலைக்கழகம் கௌரவ முனைவர் பட்டம், அமெரிக்க ஹவாய் சுப்பிரமணிய சுவாமி ஆச்சிரமம் 2005ஆம் ஆண்டுக்கான இந்துப்பணி விருது, அகில இலங்கை இந்துமா மன்றம் தெய்வத்திருமகள் என்ற பட்டம் வழங்கியுள்ளது.

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்கள் மனதில்
நிற்பவர்கள்சிலரே!

For All Your Real Estate Needs..

SOLD FOR SALE

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

•Excellent Location
•Prestigious John Boddy Home
•Over $100K In Upgrades
•Interlocking Driveway & Deck
•3300 Sq.ft "Forest Ridge" model

•In Desirable Churchill Meadows
•Open Concept With 9' Ceiling
•Stainless Steels Appliances
•Hardwood Floor Thru-Out
•Semi Detached

•1 Bedroom Condominium
•Spacious Unit
•Popular Downtown Location
•Laminate Wood Flrs Thru-Out
•Close To All Amenities...

•Excellent Location
•2+1 Bedroom Condo
•Well maintained
•Upgraded Penthouse Unit
•Family Size Kitchen...

HERE IS YOUR CHANCE TO WIN
** some conditions may apply

•Bright Unit
•Small Warehouse
•Location Close To Hwy 407
•Well Maintained Unit

•Excellent Location
•Brand New Tridel Grand Ovation
•Spacious 1 Bedroom
•Close To Square One, Hwy 403
•Very Reasonable Price...

•Be 'First To Live In' A
•Brand New Apartment
•2 Bedrooms and 5 Appliances
•Quick Access To 401/427/407
•Close To All Amenities

Jayanthi Sritharan
Real Estate Broker
416.918.5872
Email:sritharanj@rogers.com
web:www.jrealhomes.com

HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
Tel: 416.321.6969 Fax: 416.321.6963

This is not intend to solicit properties currently listed for sale *Each office independently owned and operated

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஜி.ஆர். கொடுத்த....

22ஆம் பக்கத்தொடர்ச்சி

ஓடும்" என்றேன். "தாய் சொல் தட்டாதே"யைவிட அந்தப் படம் ஐம்பது நாட்கள் அதிகம் ஓடியது. உடனே எம்.ஜிஆர்., "நீங்கள் கூறியது போலவே தாயைகாத்த தனயன் ஓடியுள்ளது. உங்களுக்கு



நான் ஏதாவது கொடுக்கணுமே. என்ன வேண்டும்" என்று கேட்டார். நான்,"உங்கள் அன்பு ஒன்றே போதும்" என்றேன். எம்.ஜி.ஆர். ஒப்புக்கொள்ளவில்லை. உம்மிடியாருக்குப் போய், நாலு மூலையிலும் தங்க குமிழ் வைத்த பெரிய கனத்த வெள்ளித் தட்டை வாங்கித் தந்தார். அப்போதும் அது பெரிய விலை. நான் அவ்வளவு பெரியத் தட்டில் சாப்பிட்டதே கிடையாது. இன்றுவரை அதைப் பயன்படுத்தாமல் எம்.ஜி.ஆரின் நினைவாக வைத்திருக்கிறேன்.

கேள்வி: அதுபோல் நீங்காத வடுவாக சோகத்தில் ஆழ்த்திய ஒரு நிகழ்வு...

ஆரூர்தாஸ்: ஏ.சி. திருலோக சந்தர் இயக்கத்தில் பத்திரகாளி படத்துக்கு நான் வசனம் எழுதி கொண்டிருந்த நேரம். அந்தப் படத்தின் நாயகன் சிவக்குமார். நாயகி புதுமுகம் ராணி சந்திரிகா. அந்தக்கால வழக்கப்படி புதுமுகம் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் கம்பெனி அனுமதி வாங்காமல் வேறு படங்களில் நடிக்கக் கூடாது. ராணி சந்திரிகா ஒரு நாள் என்னிடம் வந்து, "சார் துபாயில் ஒரு கலை நிகழ்ச்சிக்கு கூப்பிடுகிறார்கள். இயக்குனரிடம் கேட்டால் விடமாட்டார். நீங்கள் யாரிடமும் சொல்லாதீர்கள். நான் போயிட்டு மூன்று நாட்களில் திரும்பிவிடுவேன்" என்று சொல்லிவிட்டு போனார். துபாயில் கலை நிகழ்ச்சி நடத்திவிட்டு நிறையப் பரிசுப்பொருட்களோடு பாம்பே விமான நிலையத்தில் இறங்கினார். கஸ்டமஸ் அதிகாரிகள் நிறைய பணம் சுங்கவரி கட்டச் சொன்னார்கள். அவரிடம் பணம் இல்லாததால், அன்று சென்னைக்குப் புறப்பட வேண்டியவர் பணத்துக்கு ஏற்பாடு செய்வதுக்காக பாம்பேயில் தங்கிவிட்டு, அடுத்த நாள் விமானத்தில் தன் தாய், சகோதரியுடன் புறப்பட்டார். அந்த விமானம் நடுவானில் வெடித்து அதில் பயணித்த அனைவருமே மாண்டு போனார்கள். ஆசை ஆசையாக தான் நடித்த முதல் படத்தை, தானே பார்க்கும் முன் இந்த உலகத்தையே விட்டு போய்விட்டார். இப்போதும் எனக்கு கண்ணீரை வரவழைக்கும் சம்பவம் அது."

சொல்லிக்கொண்டே இமையோரங்களில் கசிந்து நிற்கும் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார் ஆரூர்தாஸ்.

கேள்வி: "தற்போது கார்பரேட் நிறுவனங்களும் பன்னாட்டு கம்பெனிகளும் தமிழ் திரைப்பட தயாரிப்பில் இறங்கி உள்ளன. இது தமிழ் திரைப்படச் சூழலுக்கு சாதகமானதாக இருக்கும் என கருதுகிறீர்களா?"

ஆரூர்தாஸ்: "ஏன், இவர்கள் வருவதற்கு முன்பும்கூட தமிழ் திரைத்துறை நன்றாகத்தானே இருந்தது. அதுவுமில்லாமல் சமீபத்தில் இவர்கள் தயாரித்த திரைப்படங்கள் ஒன்றுகூட சரியாக ஓடவில்லை என்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டும். பெரிய முதலீடு மட்டுமே திரைத்துறையை மாற்றிவிடாது. ஒரு சலசலப்பை வேண்டுமானால் அது உருவாக்கலாம். அவ்வளவுதான் மற்றபடி நல்ல கதையும் கட்சிதமான திரைக்கதையும்தான் திரைப்படத் துறையை என்றுமே காப்பாற்ற முடியும். எனக்கு கார்பரேட் நிறுவனங்கள் வரவால் தமிழ் திரைப்படச் சூழல் மாறும் என்பதில் நம்பிக்கை இல்லை."

கேள்வி: "நீங்கள் ஒன்றிரண்டு பாடல்களும் எழுதி இருக்கிறீர்கள். மேலும், கண்ணதாசனுடன் நெருக்கமாகவும் இருந்திருக்கிறீர்கள். அந்தக் காலத்து திரைப்பட பாடலுக்கும், தற்கால திரைப்பாடல்களுக்கும் இடையே என்ன வித்தியாசத்தை உணர்கிறேர்கள்?"

ஆரூர்தாஸ்: "இதுபோன்ற கேள்விகளுக்கு என்னைப் போன்றவர்கள் என்ன சொன்னாலும், உடனே பழைய பஞ்சாங்கம் என்றுதான் பார்ப்பார்கள். ஆனாலும், நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். அந்தகால திரைப்பட பாடல்களில் செக்ஸ்க்கும் வன்முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருந்தது, இல்லையென்று சொல்லமாட்டேன். ஆனால், தற்போதைய பாடல்களில் இருக்கும் அளவுக்கு மோசமாக இல்லை. அந்தக்கால கதாநாயகிகளின் இடுப்பையே பார்க்க முடியாது. இப்ப லோகிப் என்ற பெயரில் தொப்புளுக்கு கீழேதான் புடவையே கட்டுகிறார்கள். அக்காலத்தில் பாடல்கள் கதைக்கு ஏற்ப கருத்துடன் எழுதப்பட்டன. தமிழ் திரைப்பட பாடல்களின் பிதாமகன் பாபநாசம் சிவன் தொடங்கி, பகுத்தறிவு பாடலாசிரியர் உடுமலை நாரா-யணகவி, தத்துவ பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன் வரைக்கும் இந்தத் தொடர்ச்சியை நீங்கள் பார்க்கலாம். அது மக்களை எளிதில் சென்றடையவும் செய்தது. அதனாலேயே சாகாவரம் பெற்ற பாடல்களாக இன்றும் அவை நிலைத்து நிற்கின்றன. இப்போது வரும் பாடல்கள் இதுபோல் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு மக்களிடம் நிற்குமா?"

கேள்வி: "இப்பொழுது வெளிவரும் படங்கள் பற்றி.... "

ஆரூர்தாஸ்: "எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா காலத்தில் புராணப் படங்கள் எடுக்கப்பட்டன. அதற்கு அடுத்து எம்.ஜி.ஆர்., சிவாஜி காலங்களில் சமகால வாழ்க்கையைப் படமாக்கினார்கள். இந்த இரண்டு காலகட்டங்களிலும் சினிமாவில் கதை, வசனத்துக்கு முக்கியம் இருந்தது. இன்றைக்கு கதை எங்கிருக்கிறது என்று தேட வேண்டியாதாக இருக்கிறது. இதையெல்லாம் மீறி சில நல்ல கதையம்சம் கொண்ட படங்களும் வரத்தான் செய்கிறது. இன்னும் கொஞ்ச நேரம் பேசினால், என்னை பழமைவாதி என்று முத்திரை குத்திவிடுவார்கள். என்ன செய்ய? யதார்தவாதி ஊருக்கு எதிரி தானே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் விட்டு... நூல் அறுந்து... காற்றில் மிதந்த...

The Kite Runner - பட்டம் ஓட்டி

Starring: Shaun Toub, Khalid Abdalla, Nasser Memarzia, Said Taghmaoui, Atossa Leoni
Directed by: Marc Forster

மார்க் போஸ்ரரின் சிறந்த படங்களுள் இதுவும் ஒன்று. இவர் ஏற்கனவே Finding Neverland, Stranger Than fiction, Monster Ball போன்ற படங்களை இயக்கியுள்ளார். யேர்மன் பெற்றோருக்கு பிறந்த இவர் சுவிசுலாந்தில் வளர்ந்தார். பின்னர் நியு யோர்க் பல்கலைக் கழகத்தில், திரைப்படத் துறையில் பட்டம் பெற்ற இவர், பல விவரணச் சித்திரங்களை இயக்கியுள்ளார். பல விருதுகளையும் இப் படங்களுக்காக பெற்றுள்ளார்.

மார்க், Khaled Hosseini இன் 'பட்டம் ஓட்டி' நாவலை அதே பெயரில் படமாக்கியுள்ளார். குசெய்னி காபூலில் 1965 ல் பிறந்தார். இவர் 70 ல் தெகரானுக்கு புலம் பெயர்ந்தார். 73 ல் மீண்டும் ஆப்கான் திரும்பி, பின்னர் 76ல் பாரிசில் குடிபுகுந்தார். பின்னர் கலிபோர்ணியாவில் குடியேறிய இவர் அங்கு வைத்தியராக கல்வி கற்று வைத்தியரானார். 'பட்டம் விடுதல்' நூல் வெளிவரும் வரை (2005) வைத்தியராக கடமையாற்றினார். இவரது மற்றொரு நூல், A Thousand Splendid Suns. இவர் தற்சமயம் யு.என்,எச்.ஆர் ல் சிறப்பு தூதராக கடமையாற்றுகின்றார்.

நூலாசிரியரது வாழ்வைப்போலவே நூலும் அமைந்துள்ளது. வழமைபோல் நாவலை படமாக்குவதில் உள்ள சிக்கல்களை மார்க்கும் அனுபவித்துள்ளார். இன்றைய ஆப்கானில், படம் ஒன்றை படமாக்குவதில் பல சிரமங்களை பெற்றுள்ளார். படம் ஆப்கான் கரையில் உள்ள பாகிஸ்தான் எல்லை கிராமங்களில் படமாக்கப்பட்டுள்ளது. அமீர், ஹசன் இரு சிறுவர்கள் ஒன்றாக வளர்கின்றனர். இருவரும் தாயை இழந்தவர்கள். அமீர் ஒரு பெரும் வர்த்தகரின் மகன். ஹசன் அங்கு வேலை செய்யும் வேலைக்காரச் சிறுவன். அமீர் பாடசாலைக்குச் செல்கின்றான். ஹசன் பாடசாலைக்குச் செல்வதில்லை. அமீரும், ஹசனும் நல்ல நண்பர்கள். அமீரின் தந்தை ஹசனை அமீரின் பாதுகாவலனாகவே கருதுகின்றார். அமீருக்கு பிரச்சினைகள் வரும் பொழுது ஹசன் அமீரை காப்பாற்றுகின்றான். அமீர் ஓர் பஸ்தான். எனவே இவர் ஓர் சுனி முஸ்லீம், ஹசன் ஓர் ஹசரா, எனவே சியா முஸ்லீம். அமீர் மற்றவர்கள் முன்னிலையில் ஹசனுடனான உறவை வெளிக்காட்டுவதில்லை. இவர்களுக்கிடையிலான வர்க்க, சமூக வேறுபாடுகளை பாதுகாக்கின்றான். அசீப் இவர்களை விட வயதானவன். இவர்களது நெருக்கத்தை அறிந்து கொள்கின்றான். அசீப், அமீரை ஹசனுடன் நட்புக் கொள்ள வேண்டாம் எனக் கூறுகின்றான். ஹசன் வேறு இனம் என சுட்டிக்கபட்டுகின்றான். இவன் ஓர் பஸ்தான். இவனுக்கு இந்த உறவை வெறுக்கிள்றான். வருடாந்த பட்டம் விடும் போட்டியில் இவர்களை பழிவாங்க விரும்புகின்றான். பட்டம் விடும் போட்டி இரு பிரிவுகளானது. முதலாவது ஒருவர் விடும் பட்டத்தை மற்றவர் நூலினால், அல்லது பட்டத்தினால் கிழித்தல் அல்லது அறுத்தல். மற்றையது பட்டத்தின் நூலை கைவிடும் பொழுது அந்த பட்டத்தை ஓடிச் சென்று பெற்றுக் கொள்ளல். பெறும் பட்டம் இவர்களுக்கு வெற்றிக் கிண்ணம் போல் வைத்துக் கொள்வார்கள். ஹசன் நன்றாக ஓடுவான். இதனால் பட்டங்களை பெற்றுக் கொள்வதில் தீரன். இந்த வருடப் போட்டியிலும் ஹசன் பட்டத்தைக் கைப்பற்றிவிடுகின்றான். இத்தருணத்தில் அசீப்பும் அவனுடன் வரும் இருவரும் ஹசனை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குகின்றனர். இதனைக் காணும் அமீர் ஹசனுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. மாறாக ஆத்திரம் கொள்கின்றான். இப்பட்டத்தைக் காட்டி தனது தந்தையிடம் பாராட்டு பெறவேண்டும் என்பது அவனது விருப்பம். ஹசனும் அவனது தந்தையும் சூழ்ச்சி செய்து தனது விருப்பத்தை நிறைவேற்றவில்லை என கவலை கொள்கின்றான். 40 வருடங்களாக இவர்களுக்கு சேவகம் செய்தவர்களை வெறுக்கின்றான். ஆனால் அமீரின் தந்தை ஹசனை வெறுக்கவில்லை. அமீர் தொடர்ந்து நிழலில் வாழ்கின்றான்.

இதன் பின்னர் ருசிய படைகள் ஆப்கானில் நுழைகின்றன. இடது சாரி எதிர்ப்பாளரான அமீரின் தந்தை ருசிய படைகளால் தாக்கப்பட்டு, பின்னர் தப்பி பாகிஸ்தான் சென்று இறுதியாக கலிபோர்னியாவில் தஞ்சமடைகின்றார். பெரும் மாளிகையில் வளர்ந்த இவர்கள் சிறு மேல் மாடி குடியிருப்பில் வாழ்கின்றனர். தந்தை இரு வேலைகள் செய்கின்றார். விடுமுறை நாட்களிவ் பிளீ மார்க்கெட்டில் வியாபாரம் செய்கின்றார். அங்கு சரோயா தகாரி குடும்பத்தை சந்திக்கின்றார்கள். அமீர் சரோயா நட்பு திருமணம் வரை வளர்ந்து விட்டது. பட்டப்படிப்பை முடித்துவிட்ட அமீரை சரோயாவிற்கு திருமணம் செய்து கொடுக்குமாறு சரேயாவின் தந்தையை அமீரின் தந்தை கேட்கின்றார். இவர்களது திருமணம் நடைபெறுகின்றது. அமீரின் தந்தை இரைப்பை புற்று நோயால் இறந்து விடுகின்றார். அமீர் இப்பொழுது பிரபல எழுத்தாளர். இவரது முதாலாவது நூலை குழந்தை போல் அணைத்து எடுக்கும் பொழுது தொலைபேசி அழைக்கின்றது.

அமீரின் தந்தையின் நெருங்கிய நண்பரும், அமீர் சிறுவனாக இருந்த பொழுது எழுத ஆரம்பித்த பொழுது, ஆதரவளித்தவருமான ரகீம் கானின் அழைப்பு அது. அமீரை உடனடியாக பாகிஸ்தானுக்கு வருமாறு அழைக்கின்றார். தனது நூல் சுற்றுப்பயணத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, தனது மகனையும், மனைவியையும் கலிபோர்னியபவில் விட்டு விட்டு பாகிஸ்தான் செல்கின்றான். அங்கு சென்ற பொழுது ஹசனின் தந்தை அலி கண்ணி வெடித்தாக்குதலில் இறந்து விட்டதையும், ஹசனும், அவனது மனைவியும் இறந்து விட்டதையும் அறிந்து கொள்கின்றான். இவர்களது மகன் அனாதை ஆச்சிரமத்தில் வாழ்வதையும், ரகீம் கான் கூறுகின்றார். அமீரின் வீட்டை பாதுகாக்கும் பொறுப்பை ரகீம் கான் ஹசனிடம் ஒப்படைந்திருந்தார். தலிபான் வீட்டை தங்களுக்குத் தருமாறு கேட்ட பொழுது ஹசன் மறுத்துவிடுகின்றான். தலிபான் ஹசனையும், மனைவியையும் கொன்றுவிடுகின்றது. ரகீம் கான் மற்றொரு உண்மையையும் கூறுகின்றார். அது ஹசன் அலியின் மகனல்ல. அமீரின் தந்தை தான் ஹசனுக்கும் தந்தை என்பது. அமீர் ஹசனின் அரைத் தம்பி. ஹசனின் மகனை உன்னுடன் கூட்டிச் செல் என ரகீம் கான் கூறுகின்றார். அமீர் தலிபானின் கட்டுப்பாட்டில் உள்ள காபூல் பகுதிக்குச் செல்கின்றான். அங்குள்ள ஆச்சிரமத்தில் ஹசனின் மகன் சோகரப் இல்லை. 'தலிபான் இந்த ஆச்சிரமத்துக்கு உதவிகள் செய்கின்றன. அதே சமயம் ஒவ்வொரு தடவையும், அவர்கள் வரும் பொழுது பத்துக் குழந்தைகளை தூக்கிச் சென்று விடுவார்கள். அவர்களை எதிர்க்க முடியாது. அதேசமயம் மிகுதிக் குழந்தைகளுக்கு சாப்பாடும் போடவேண்டும்' என ஆச்சிரமத்து தலைவன்

கூறுகின்றான். அங்கு நடக்கும் உதைபந்தாட்டப் போட்டிக்குச் சென்றால் சோகரப்பை கூட்டிச் சென்றவனை காணலாம் எனக் கூறுகின்றான். உதைப்பந்தாட்டப் போட்டியில் தலிபான் அதிகாரியை சந்திக்கிள்றான். வேறு யாருமல்ல அசீப். அசீப் அமீரை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரமாறு அழைக்கின்றான். அங்கு சென்ற பொழுது அசீப் இல்லை. பதிலாக வந்தவன் இவனை கேள்விகளால் துளைக்கின்றான். முஸ்லீம் சகோதரர்களை விட்டு விட்டு ஏன் அமெரிக்காவில் வாழ்கின்றாய் எனக் கேட்டு அடித்து துன்புறுத்துகின்றான். அங்கு நின்ற சோகரப் தனது கெற்ற போல்டினால் தலிபான் தலைவரை அடித்து விட்டு அமீருடன் தப்பி விடுகின்றான். அசீப்பின் வீட்டிற்கு அமீர் சென்ற பொழுது அசீப் இப்பொழுது எங்களுடன் இல்லை. கடிதம் ஒன்றை அமீரிடம் கையளிக்கின்றனர். அது அசீப், அமீருக்கு எழுதிய கடிதம். அமீரும், சோகரப்பும், கலிபோர்ணியாவில் தங்களது குடும்பத்துடன் இணைகின்றனர்.

மூன்று கால அரசியல் வரலாற்றூடாக இப்படம் நகர்கின்றது. முல்லா, பின்னர் சோவியத் படைகள், இறுதியாக தலிபான். ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏற்படும் வன்முறைகள் பதிவாக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக தலிபானின் வன்முறைகள் படமாக்கப்பட்டுள்ளன. (ஒசாமா, Return to taliban. Cross Fire, Karate Tailban, Two Devils, B1 and B52, Convert to Musilm, War in Afagnistan, Terrorists - You have no chance, Death to the West, Taliban Man, Taliban Sniper. Taliban beat woman, To my people) உதைப்பந்தாட்டப் போட்டி மைதானத்துக்கு வருகின்றனர் தலிபான் படைகள். போட்டி நிறுத்தப்படுகின்றது. அனைவரும் எழுந்து நிற்கின்றனர். ஒரு பெண்ணை நடு மைதானத்தில் நிறுத்துகின்றனர். முகமற்று முகம் மூடி காணப்பாடுகின்றாள். கடவுளின் பெயரால் கல்லால் அவளை அடித்து கொல்லுமாறு உத்தரவிடுகின்றனர். அனைவரும் அவளை நோக்கி கல்வால் அடிக்கின்றனர். இக்காட்சி இப் படத்தில் காட்டப்படுகின்றது. முஸ்லீம் மக்களை அவர்களது உரிமைகளை ஏற்றுக் கொள்ளும் பலர் முஸ்லிம் தீவிரவாதத்தையும், தலிபானின் வன்முறைகளையும் வெறுக்கின்றனர். இந் நிலை தமிழ்த் தேசியத்திலும் உண்டு. நூலாசிரியரின் கருத்துப்படி. இத் தொடர்ச்சியான வன்முறைகள் கலாசாரத்தை மாத்திரமல்ல, உற்பத்தியையும் பாதித்து விட்டது. ஒரு விவசாய நாடான ஆப்கானில் விவசாய நிலங்களில் இன்று 5 சத வீதம் நிலங்கள் தான் விவசாயம் செய்யக்கூடியதாகவுள்ளது. ஒரு புறம் தலிபானிலாலும், மறுபுறம் அமெரிக்காவாலும் ஆப்கான் மக்கள் நசுக்கப்படுகின்றனர். இவர்களது வளங்களும் சுரண்டப்படுகின்றன. பெண்கள் மிக மோசமாக நசுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கல்விகற்ற உரிமையற்றவர்களாக தலிபானால் நசுக்கப்பட்டுள்ளனர். தலிபானுக்கு முற்பட்ட காலங்களில் வைத்தியர்களாக, சட்டத்தரணிகளாக தேசிய உற்பத்தியல் பெரும் பங்காற்றிய பெண்கள் இன்று பேச குரலற்று உள்ளனர்.

இப் படம் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்ற விமர்சனம் உண்டு. நூலாசிரியருக்கு பெண்கள் மீது மரியாதை உண்டு. அவர்கள் மீதான வன்முறையை எதிர்க்கின்றார். ஆனால் அவர்கள் உரிமையை சம அந்தஸ்தை இவரும் விரும்பவில்லை எனத் தெரிகின்றது. படத்தில் நகரும் பாத்திரங்கள் இதற்கு சான்று. மத்திய வர்க்கத்துக்கு மக்கள் மத்தியில் உள்ள வர்க்க, சாதி வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. இறக்கும் வரை அமீரின் தந்தை ஹசன் தனது மகன் என்பதனைக் கூறாமலேயே இறந்து விடுகின்றார். தந்தையரின் பொய்களை பதிவாக்கியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட ஹசன் போன்றோர் இறுதிவரை இவர்களுக்காக வாழும் அவலங்களை படமாக்கியுள்ளது. இக் காட்சிகள் எமது ஊர் சாதி, வர்க்க அவலங்களை நினைவூட்டுகின்றன.

நூலாசிரியரின் மனச்சாட்சி மீதான தேடல் விசாரணையாகவே நாவலும், படமும் நகருகின்றது. இது நூலாசிரியரின் குற்ற உணர்வின் ஒரு பதிவே இப்படம். இயக்குனரும் ஒரு புலம் பெயர் வாசியே. இதனால் இவரால் நூலாசிரியரின் மன அழுத்தங்களை உணரக்கூடியதாகவுள்ளது. விசாரணைகள் அற்ற யதார்த்தக் காட்சிகளாக படம் நகருகின்றது. பெரும்பாலான காட்சிகள் சிறுவர்களுக்கிடையிலான உணர்வு ரீதியான ஒற்றுமையையும், அது எவ்வாறு சமூகரீதியாக பாதிக்கப்படுகின்றது என்பதனையும் பதிவு செய்துள்ளது.

எமது ஊரில் பட்டம் விடுகின்றோம். எமது பட்டங்களின் பின்னாலும் பல கதைகள் உண்டு. இது வரையும் ஒன்றும் வெளிப்படவில்லையே. சிறுவர்களின் சிறப்பான நடிப்பிற்கு இப்படம் சிறந்த உதாரணம். ஒரு திரைப்படம் சிறுவர்களையும், போரின் அவலங்களையும், சமூக வேறுபாடுகளையும், தலிபானின் வன்முறைகளையும் பதிவு செய்துள்ளது. திரைக்கதை அமைக்கப்பட்ட முறை இப்படத்தை ஒரு வரவாற்று பதிவாகவே, அரசியல் விமர்சனமாகவே முன் வைக்காமல், ஓர் இயல்பான படமாக முன் வைத்துள்ளது. இப் படத்தை பார்ப்பதுடன் முடிந்தால் நாவலையும் வாசிக்கவும்.

இப் படத்தை மார்க்கம் வீடியோ, வி.ஜ.பி வீடியோ உட்பட சகல ஆங்கில வீடியோக் கடைகளிலும், ரொரண்ரோ பெரும் பாக நூலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WELCOME TO GTA SQUARE

Middlefield /Finch
Scarborough

Open to Public



Open to Public

Business	Unit#	Contact	Tel.#
GTA Convenience	101, 102	Siva	416.754.4822
Enas Hair Design	104		416.293.1273
Free to Air Satellite System	105	Siva	416.670.8248
Sajecho Electronics & Computers	105	Siva	416.916.3357
Murugan Book Depot	109, 110	Mahesan	416.321.0285
Behold Fashion	111	Rohgan	647.830.8410
MJS Fashion	113	Justin	416.299.1630
MJS Money Transfer	114		416.335.3100
Western Jewellerys	115	Thayalan	416.335.9500
Viaasa Inc	118	Sivananthan	647.885.2478
Ahsiya Beauty Salon	120	Michael	416.562.9705
Real Estate Sales Centre	123	Seelan	416.335.7325
Shakthi Designers	154	Raveendran	416.297.1670
Ashmitha Business Centre	159		416.298.0505
Eagle's Dry Cleaners & Alteration	160	Gloria	416.291.9777
RVL Electronic Repairs, Sales & Service	162	Ravi	416.265.1208
Gulnars Fashion	163	Gulnar	416.297.8397
Vasantham	164		416.297.9137
Tech Linx - Activate Sell Repair	165	Kobe	416.293.5469
Vlambaram Publications	201	Balan	416.282.8059
A1 Ink Rainbow	202, 203, 204	Gajen	416.286.0333
Nila Fashion&Gifts	205	Kiruba	416.272.9425
Sai Physiotherapy Clinic	206	Suthan	647.210.9929
Middle-Finch Medical Centre	208,209,210	Dr. S. Sriharan	416.412.7350
Middle-Finch Medical Centre	208,209,210	Dr. T. Sriharan	416.412.7350
Value Plus Pharmacy	211,212	Anoja Devaranjan	416.754.4442
Hattan - Sera Ros Inc.	218		416.548.7993
Law Office	219	Raphael Maharaja	416.847.7088
GTA Fashion & Gift	221	Jeyamohan	416.298.1978
Alphonsus & Associate 223		Emil Alphonsus	416.493.8220
Thaagam Beverages	229	Shankar	647.886.5463
Unique Financial	256,257	Kannan	416.854.6183
Neo Fashions	258		416.786.5145
Krishna's Tailoring	259	Krishna	416.497.6427
Expert Building Inspections	263	N. Thayabharan	905.940.0811

GTA SQUARE 5215 Finch Ave. E. Scarborough, ON M1S 0C2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரு
பிராண்ட்

Niru BRAND®

JACK MACKEREL
IN BRINE

தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிரான்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வு - Understanding

வாழ்வில் எமக்கேற்படும் சகலவிதமான உறவுகளிலும் உன்னால் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாத சில விடயங்கள் உள்ளன என்பதை நீ உணரும் தருணம் நிச்சயம் வரத்தான் செய்யும். அவ்வாறு நிகழும்போது, அக்கணத்தை அதிகம் பொருட்படுத்தி, மனம்வருந்திக் கலங்காதே. அதை அப்படியே சும்மா போக விட்டுவிடு.

ஒவ்வொருவரும் வாழ்வில் தமக்கேற்படும் அநுபவத்தை அநுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக நீ அறிந்து கொண்டதும் உனக்கு மேலதிக புரிந்துணர்வு ஏற்படும்.

சிலர் தமக்குப் பூரண புரிந்துணர்வு வந்துவிட்டதாகப் பாசாங்கு செய்து நடிப்பார்கள். முகத்தில் புன்னகையுடன், பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிட்டது என உறுதியளித்து உங்கள் கவலையைப் பறந்தோடப் பண்ணுவார்கள். நடந்ததெல்லாம் எனக்கு இப்போ நன்கு விளங்குகிறது என்றுகூடச் சொல்வார்கள். ஆனால் உங்களுக்குப் பக்கபலமாக தமது புரிந்துணர்வை வெளிப்படுத்த வேண்டிய நேரம் வரும்போது அவர்கள் சொல்வதில் பொய்யான நிறைந்த தவறான வர்ணனை, பிழையான தொடர்பு போன்றவை நிறைந்திருப்பதனால், கடைசியில் நீயே தான் பிரச்சினைக் காரணி

என நீ தான் குற்றம் சாட்டப்படுவாய்.

சிலர் உன்மேல் இரக்கமும் அக்கறையும் நிறைந்தவர்கள் போல நடிப்பார்கள். உனது நலனுக்காகவே பாடுபடுவதாக உன்னை நம்பவைப்பார்கள். ஆனால் அவர்களின் உதவி தேவையான போது, உன்னை ஈவு இரக்கமின்றிக் காட்டிக் கொடுத்து, கைவிட்டுத் துன்புறுத்துவார்கள்.

ஆனால் இப்படி நடக்கும்போது, நீ பயப்படாதே! ஆத்திரப்பட்டுக் கோபிக்காதே! எமக்கு ஜீவியத்தில் கிடைக்கும் வெவ்வேறு அநுபவங்களை, வெவ்வேறு விதங்களில் பார்த்தே நாம் வரையறுக்கிறோம். எமது சொந்த அநுபவ அடிப்படையில்தான் நாம் வாழ்வுச் சம்பவங்களைப் பார்க்கிறோம். எதிர்பார்க்கிறோம். பிறருடன் நாம் பழகும்போது அவர்களும், எமது தனித்துவ அலைவரிசையில் எம்மைப் போலவே இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. முதலிலிருந்தே நாம் கவனமாக இருக்காவிட்டால், கடைசியில் வஞ்சகம் நிறைந்த, போலியான ஏமாற்றுகிறவர்கள் மத்தியில் சிக்கித் கஷ்டப்படுவோம்.

மற்றவர்கள் வாய்ப்பேச்சை நம்பி, அவர்கள் உன்னைப் போலவே, உன் உணர்வு உன் நம்பிக்கையைப் பின்பற்றி உன் நன்மைக்காகப் பிறரும் செயற்படுவார்கள் என அவர்கள் சொல்வதை இன்றுவரை நீ நம்பி வந்திருக்கலாம். ஆரம்பித்திலிருந்தே நன்கு பரிசீலித்த பின்பே எந்த உறவையும் போஷிக்க தொடங்க வேண்டும் என்பதை இன்று புரிந்து கொள். உன் வார்த்தைகளை நன்கு யோசித்து அளந்து பேசு. உன் எதிர்பார்ப்புகளை அடையாளங் கண்டுகொள். உனக்கு என்ன சொல்லப்படுகின்றது. உன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைப் பற்றி அக்கறையுடன், உனது சொற்களையும் உனது புரிந்துணர்வையும் கவனத்துடன் கண்காணித்துக் கொள்.

இன்றுமுதல் எனது புத்தியைத் தெளிவாக்கி எனது புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளப் போகின்றேன்.

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 127

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி

AIR LINK TRAVEL LTD.

5200 FINCH AVE. E., #115, SCARBOROUGH, ON., FINCH & MIDDLEFIELD

TEL: 416.292.6200 FAX: 416.292.7478

Anton Jeeva, P.Eng.
'Princely'
Broker

RE/MAX

REMAX VISION REALTY INC.
Brokerage
416-321-2228

வீடு வாங்க விற்க
மற்றும் சகல விதமன மோட்கேஜ்
தேவைகளுக்கும் என்னை அழையுங்கள்
Direct - 416.575.5055

HOUSE FOR SALE
$429,900
69 Strickland Dr., Ajax

- 2 - Storey
- 4 + 1 Bedrooms
- 4 Washrooms
- Stainless Steel Fridge, Stove, Built-In Dishwasher

Condo Apt. FOR SALE
$239,000

- 7428 Markham Rd # 113, Markham
- 2 Bedrooms
- 2 Washrooms

Condo Townhouse for sale - $269,900

- 735 Sheppard Ave E 60 Pickering
- 2 - Storey
- 3 Bedrooms
- 2 Washrooms
- Stove, Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings.

$385,000
HOUSE For Sale

- Brimley / Denison
- Detached 2 storey
- Bedrooms: 4 + 2
- Washrooms: 4
- 2 bedroom bsmt apt.

Speciallized in Power of Sale Homes

COMPUTER REPAIRS & UPGRADES

- Virus Removal, Internet Sharing Computer Tune Up மற்றும் அனைத்து Computer திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வைத்தோ அல்லது எடுத்துச் சென்றோ திருத்தித் தரப்படும்.
- உங்கள் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப Computer Assembling செய்து கொள்வதற்கும் உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள் - RAJ Paramasamy

A+ Certified PC Technician, Microsoft Certified Professional

தொலைபேசி எண் - 416.587.1619 Free Estimate

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

Finch & Pharmacy
2535 Pharmacy Ave., Scarborough
416. 495.1222

Brimley & Finch
135 Montezuma Trail, Scarborough
416 321.5444

Danforth & Pharmacy
3331 Danforth Ave., Toronto
416.694.0888

Hurontario & Dundas
2555 hurontario St., Mississauga
905 804.0666

Morningside & 401
790 Military Trail, Scarborough
416.284.3003

Yonge & Clark
126 Thornhill Ave. East Thornhill
905.709.8004

Hwy & 16 th
10 Fincham Ave., #104 Markham
905.472.6002

Aurora
14810 Yonge St., Unit 7 Aurora
905.841.7002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org